உதயன்

www.onlineuthayan.com

26 பக்கங்கள் சுடர் 27 கதிர் 360 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 05 செவ்வாய்க்கிழமை (20/11/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00




## அரசியல்வாதிகளால் இலங்கை அழிவின் விளிம்பில்:

# சிங்களவர்களும் வீதிகளில் சாகவேண்டிய நிலை வரும்

### அஸ்கிரிய மகாநாயக்க தேரர் எச்சரிக்கை; பௌத்தத்தை காக்க வருமாறும் அழைப்பு

கொழும்பு, நவம்பர்20

''அரசியல்வாதிகளின் செயற்பாட்டால் நாடு அழிவின் விளிம்பை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கின்றது. இந்த நிலை நீடித்தால், சிங்கள பௌத்தர்களும் காடுகளில் வாழ வேண்டிய, வீதிகளில் சாகவேண்டிய அபாய நிலை தோன்றக்கூடும்'' என்று எச்சரிக்கிறார் அஸ்கிரிய மகாநாயக்க தேரர் வண. உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த தேரர்.

இந்த அபாய நிலையிலிருந்து நாட்டையும், சிங்கள, பௌத்த மக்களையும் பாதுகாக்கப் பௌத்த குருமார்கள் ஒழுக்கமாக நடந்து, பௌத்த மதத்தின் புகழைப் பரப்பவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மாத்தளையில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது சில அரசியல்வாதிகள் பணத்துக்கு மயங்கி நாட்டின் பிரதான நகரங்களிலுள்ள காணிகளை மாற்று மதத்தவர்களுக்கு இரகசியமாக விற்கின்றார்கள். இந்த நாட்டின் ஆட்சி பீடத்திலுள்ளவர்களிடம் பல தடவைகள் இதைப் பற்றிக் கூறியும் அவர்கள் செவிசாய்க்காமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

சிங்கள பௌத்தர்கள் இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டும். எமது பௌத்த சிறுவர்கள் வாழ்வதற்கான சூழ்நிலையை இந்த நாட்டில் உருவாக்கிக் கொடுக்கவேண்டும். அந்நிய மதத்தவர்கள் இவ்வாறு எமது காணிகளை விலைக்கு வாங்கிக்கொண்டு போனால் சிங்கள பௌத்தர்கள் வீதிகளில்தான் சாகவேண்டி வரும்.

இங்குள்ள சிங்கள, பௌத்தர்களுக்கு வாழ்வதற்கு இலங்கையைத் தவிர வேறொரு நாடும் இல்லை. எமது அரசியல்வாதிகள் பேராசையால் குறைந்த விலைக்கு எமது

பார்க்க பக்கம் 4

## மாநகர ஆணையாளராக மீண்டும் பிரணவநாதன்

யாழ்ப்பாணம், நவ.20

யாழ். மாநகர சபையின் ஆணையாளராக எஸ்.பிரணவநாதன் நேற்றுத் திங்கட்கிழமை முதல் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் யாழ். மாநகர சபை ஆணையாளராகப் பதவி வகித்த இவருக்கு அண்மையில் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டது.

அரச தரப்பின் கட்டுப்பாட்டில் உள்ள மாநகர சபையில் அரசியல் பின்னணியிலேயே அவருக்கு இந்தத் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டியிருந்தனர்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த 8 உறுப்பினர்கள் மாநகர சபை ஆணையாளராக மீண்டும் பிரணவநாதனை நியமிக்கவேண்டும் எனக் கோரி வடக்கு மாகாண ஆளுநர், மாகாண அமைச்சின் செயலாளர், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி அமைச்சர் ஆகியோருக்குக் கடிதங்களை அனுப்பியிருந்தனர்.

மீண்டும் பிரணவநாதனை ஆணையாளராக நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாநகர முதல்வரும் கடந்த மாதாந்தக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று முதல் மீண்டும் யாழ். மாநகர சபை ஆணையாளராக பிரணவநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். (த-7)



நல்லூர்க் கந்தசுவாமி ஆலயச் சூழலில் நேற்று நடைபெற்ற சூரசங்கார நிகழ்வில்...

### கே.பியின் சொத்து விவரத்தை சபையில் பகிரங்கப்படுத்துக ஐ.தே.க. கோரிக்கை

கொழும்பு, நவ.20

குற்றமற்றவர் என விடுதலை செய்யப்பட்டிருக்கும் கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனின் சொத்து விவரங்களை அரசு நாடாளுமன்றத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்று கோரிக்கை

பார்க்க பக்கம் 4

## 'கிபிர்'களின் அட்டகாசம் தொடர்கிறது முல்லையில்

### மேசைகளின் கீழ் ஒளித்தனர் மாணவர்கள்

யாழ்ப்பாணம்,நவ.20

'கிபிர்' குண்டு வீச்சு விமானங்கள் பேரிரைச்சலுடன் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை காலை வட்டமிட்டு தாழப் பறந்து சென்றன. இதனால் அந்தப் பகுதி மக்கள் சிறிது நேரம் பதற்றமடைந்தனர். மாணவர்கள் பாதுகாப்புத் தேடி மேசைகளின் கீழ் ஒளித்தனர்.

'கிபிர்' விமானங்கள் போர்க் காலத்தில் வன்னியில் செயற்பட்டதைப் போல நேற்று முல்லைத்தீவில் பல பிரதேசங்களிலும் தாழப்பறந்தன.

பார்க்க பக்கம் 4

## 15 ஈழத் தமிழர்கள் இந்தியாவில் மாயம்

கொழும்பு, நவ.20

இந்தியாவிலுள்ள போகநல்லூர் அகதி முகாமிலிருந்து 15 இலங்கை அகதிகள் கடந்த வெள்ளிக்கிழமை காணாமல்போயுள்ளனர்.

கடையநல்லூர் மாவட்டத்திற்கு அருகிலுள்ள போகநல்லூர் அகதி முகாமில் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் சோதனை நடவடிக்கை கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது இந்த முகாமிலிருந்த 139 இலங்கை அகதிக் குடும்பங்களில் 15 பேர் காணாமல்போயுள்ளனர் என்பதை வருவாய்த்துறை அதிகாரிகள் கண்டறிந்தனர்.

இவர்கள் காணாமல் போனமை தொடர்பில் சொக்கம்பட்டி பொலிஸில் செய்

பார்க்க பக்கம் 4

## கிளிநொச்சி மக்களை வாட்டுகிறது ஒருவகை வைரஸ் காய்ச்சல்

அக்கராயன், நவ.20

கிளிநொச்சி மாவட்டத்தில் மழைக்கு பின்னர் ஒரு வகை வைரஸ் காய்ச்சல் மக்களிடையே பரவியுள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த வைரஸ் காய்ச்சலின் அறிகுறிகளாக தலையிடி, வாந்தி, உடல் நோவு காணப்படுகின்றன. இந்தக் காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. இதனால் இங்குள்ள மருத்துவமனைகளில் நோயாளர்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்துக் காணப்படுவதாக கிளிநொச்சி மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேலும் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் டெங்கு நோயின் தாக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த இடங்களுக்கு கிளிநொச்சி மாவட்ட மக்கள் அதிகளவில் சென்று வருவதன் காரணமாக டெங்கு பரவக் கூடிய வாய்ப்பு அதிகரிக்கிறது என்றும் சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

கடந்த ஒரு மாதத்தில் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் 3 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

பார்க்க பக்கம் 4

## வேலணை வெட்டுக்குளம் அருகே புதிதாக எழுகிறது படைமுகாம்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். ஊர்காவற்றுறை பிரதான வீதியில் வேலணை வெட்டுக் குளத்துக்கு அருகே புதிய படைமுகாம் ஒன்றை அமைக்கும் பணியில் இராணுவத்தினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

8ஆயிரத்து 600 சதுர அடி நிலப் பரப்புடைய அரச காணியில் இந்தப் படைமுகாம் அமைக்கும் பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

கொழும்பில் இருந்து இதற்கென கனரக வாகனங்கள் மூலம் கொண்டு வரப்பட்ட இரும்புக் கேடர்களைப் பயன்படுத்தி இந்தப் படைமுகாம் அமைக்கப்படுகிறது.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட, ஊர்காவற்றுறை பிரதான வீதியில் வேலணை வெட்டுக் குளத்தின் அருகே இந்தப் புதிய படைமுகாம் நிறுவப்படுகிறது.

தற்போது உள்புறமாக இரும்புக் கேடர்கள் பொருத்தப்பட்டு முகாம் அமைக்கப்படும் அதேவேளை வெளி

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம நீதியரசர் மீதான விசாரணையை தீவிரமாக அவதானிக்கிறது சர்வதேசம்

## அரசு நீதியாகச் செயற்பட வேண்டும்; நாடாளுமன்றில் ரணில் எச்சரிக்கை

கொழும்பு, நவ.20

"பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான விசாரணையை சர்வதேசம் கூர்ந்து அவதானித்து வருகிறது. எனவே, குற்றச்சாட்டுகள் தொடர்பில் முறையாகவும், நீதியாகவும் விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும். அவருக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து சிறப்புரிமைகளையும் வழங்கி, நீதிமன்றத்தினதும் நாடாளுமன்றத்தினதும் கௌரவத்தைப் பாதுகாத்துக்கொண்டு இந்த விசாரணையை முன்னெடுக்க வேண்டும்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று வரவு - செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தைத் தொடக்கி வைத்து உரையாற்றிய போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரைத் தாக்கியவர்களை இன்னும் கண்டுபிடிக்கவில்லை. குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். இதனால் செயலாளர் பெரிதும் கவலை அடைந்துள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக ஒரு குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது.

இவர் மீதான குற்றச்சாட்டுகள் நீதியாகவும், முறையாகவும் விசாரிக்கப்படவேண்டும். நாடாளுமன்றத்தினதும், உயர் நீதிமன்றத்தினதும் கௌரவம் தனித்தனியாகப் பாதுகாக்கப்படவேண்டும்.

எமது நாடாளுமன்றம் மிகவும் பழைமை வாய்ந்தது. உயர் நீதிமன்றம் அதைவிடவும் பழைமைவாய்ந்தது. இரண்டும் ஒன்றோடு ஒன்று மோதிவிடக்கூடாது.

உள்நாடும், சர்வதேசமும் பிரதம நீதியரசர் மீதான விசாரணை தொடர்பில் எமது நாடாளுமன்றத்தை அவதானிக்கத் தொடங்கியுள்ளன. நாம் முறைப்படி செயற்படவேண்டும்.

பிரதம நீதியரசருக்கு வழங்கப்பட வேண்டிய நீதிமன்ற உரிமைகள் அனைத்தும் வழங்கப்படவேண்டும். நாடாளுமன்றத்துக்கு அவர் வரவழைக்கப்படும்போது, பதில் கூறும் உரிமை அவருக்கு வழங்கப்படவேண்டும்.

ஷிராணி பண்டாரநாயக்க என்ற ஒரு தனிநபர் பற்றி நான் பேசவில்லை. இந்த நாட்டின் பிரதம நீதியரசர் என்ற அடிப்படையில்தான் பேசுகிறேன்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் எமது நான்கு உறுப்பினர்களையும் சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுள்ளேன். சட்ட ஆலோசனைக் குழுவையும் அமைத்துள்ளேன்.

பிரதம நீதியரசருக்கு நீதிமன்ற உரிமைகள் பெற்றுக் கொடுக்கப்படும் விடயத்தில் சட்டப் பிரச்சினைகள் இருந்தால் அவற்றை நரம் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் - என்றார். (உ-சி)

## கந்தரோடை ஆலயத்தில் விக்கிரகங்கள் திருட்டு

வலி.தென்மேற்கு, நவ.20

கந்தரோடை வற்றாக்கை அம்பாள் ஆலயத்தில் பாதுகாப்பாகப் பூட்டி வைக்கப்பட்டிருந்த சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான பிள்ளையார், அம்பாள், நடேசர் ஆகிய மூன்று எழுந்தருளி விக்கிரகங்கள் இரவோடிரவாக மாயமாக மறைந்துவிட்டன.

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் உள்ள கந்தரோடை வற்றாக்கை அம்பாள் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. மிகவிரைவில் கும்பாபிஷேகம் செய்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பல இலட்சம் ரூபா செலவில் நடைபெறும் திருப்பணி வேலைகளை முன்னிட்டு மண்டபத்தில் இருந்த ஐம்பொன்னால் உருவாக்கப்பட்ட பிள்ளையார், அம்பாள், நடேசர் ஆகிய மூன்று விக்கிரகங்களும் மற்றும் கருங்கல்லால் செய்யப்பட்ட விக்கிரகங்களும் பாதுகாப்பாக ஓர் அறையில் வைத்துப் பூட்டப்பட்டிருந்தன.

இரவுநேரம் ஆலயத்துக்குள் புகுந்த திருடர் பாதுகாப்பாக பூட்டி வைத்திருந்த சுமார் 10 இலட்சம் பெறுமதியான ஐம்பொன்னால் செய்யப்பட்ட மூன்று எழுந்தருளி விக்கிரகங்களையும் தூக்கிச் சென்றுள்ளனர்.

இந்தத் துணிகரத் திருட்டு பற்றி சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (த-115)

## நீதியரசர் விசாரணை தெரிவுக்குழுவுக்கு தடை விதிக்கக் கோரி 'ரிட்' மனு தாக்கல்

கொழும்பு, நவ.20

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பான விசாரணை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற நாடாளுமன்ற தெரிவுக் குழுவுக்கு இடைக்காலத் தடை விதிக்கக் கோரும் 'ரிட்' மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று 'ரிட்' மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சந்திரா ஜயரத்ன என்பவரே மேற்படி மனுவைத் தாக்கல் செய்துள்ளார். மனுவின் பிரதிவாதியாக குற்றப் பிரேரணையை விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழு பெயரிடப்பட்டுள்ளது.

அத்துடன், மேற்படி குற்றப் பிரேரணையை நாடாளுமன்றக் குழுநிலை விவாதத்தில் விவாதிக்க தடைவிதித்து கட்டளை பிறப்பிக்குமாறும் இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

குறித்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் சிறிஸ்கந்தராஜா உள்ளிட்ட மூன்று நீதியரசர் குழுவால் ஏற்கப்பட்டு இன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரணை செய்வதற்கு சுற்றாடல் துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவிக்குழுவானது, கடந்த 14ஆம் திகதி சபாநாயகர் சமல் ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டது.

தெரிவுக்குழுவின் விசாரணை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், அதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்படவேண்டும் எனக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (உ-சி)

## டெங்கு பரவும் சூழலை பேணிய மூவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், நவ.20

வீடுகளிலும், கடைகளிலும் டெங்கு பரவும் சூழலைப் பேணிய மூவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்று 9 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள கடை ஒன்றிலும், நாரந்தனை தம்பாட்டியில் இரு வீடுகளிலும் டெங்கு பரவும் சூழலைப் பேணியமைக்காக இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

நீதிவான் முன்னிலையில் மூவரும் தம்மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டனர். ஒவ்வொருவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் 9 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (த-4)

## டெசோ தீர்மானங்களை ஆதரியுங்கள்

### மனித உரிமைகள் சபை உறுப்பு நாடுகளிடம் கோரிக்கை

டெசோ மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு ஆதரவாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் குரல் எழுப்புமாறு, அதில் அங்கம் வகிக்கும் 47 உறுப்பு நாடுகளிடம் வற்புறுத்த உள்ளோம். இவ்வாறு நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற டெசோ ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு பற்றி வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

விடுதலைப் புலிகளுடனான இறுதிக் கட்டப் போரின்போது ஐ.நா. அதிகாரிகளை நாட்டை விட்டு இலங்கைஅரசு வெளியேற்றியதாக அண்மையில் கசிந்த ஐ.நா. ஆய்வறிக்கையே கூறுகிறது. அத்தகைய செயலுக்காக அதிபர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இலங்கை அரசுக்கும் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் இன்றைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது - என்றுள்ளது.

இந்திய நாடாளுமன்றத்திலும் இது தொடர்பாக விரைவில் கவனவீர்ப்புப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாக தி.மு.க. நாடாளுமன்ற அணித்தலைவர் டி.ஆர். பாலு தெரிவித்துள்ளார். (ங)

## யாழ்ப்பாணத்தில் இந்தவாரம் சர்வதேசத் திரைப்பட விழா

யாழ்ப்பாணம், நவ.20

''நல்லிணக்கத்தைப் படமாக்கல்'' என்னும் தொனிப்பொருளில் சர்வதேச திரைப்பட விழா எதிர்வரும் 23 ஆம், 24ஆம், 25ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

**திரைப்பட விழா எதிர்வரும் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் யாழ்.பல்கலை ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.**

இதில் உள்நாட்டு மற்றும் சர்வதேசத் திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

மூன்று தினங்களும் பி.ப. 2 மணி தொடக்கம் 6 மணிவரையில் திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 'ஏற்க மறுக்கும் கலை -'லரீனா ஹக்' என்ற 4 நிமிட உள்நாட்டுத் திரைப்படமும், 'பிசாசு மீண்டும் நரகம் செல்லப் பிரார்த்தியுங்கள்' என்ற 90 நிமிட சர்வதேச திரைப்படமும், 'மண்ணெண்ணெய்' என்ற 13 நிமிட உள்நாட்டுத் திரைப்படமும் திரையிடப்படவுள்ளன.

மறுநாள் 24 ஆம் திகதி சனிக்கிழமை 'இராஜேஸ்வரி' என்ற 25 நிமிட உள்நாட்டுத் திரைப்படமும், 'மக்களின் எதிரிகள்' என்ற 94 நிமிட சர்வதேச திரைப்படமும், 'பல உண்மைகள்: கருப்பனா பியரட்ணவுடனான நேர்காணல்' என்ற 5 நிமிட உள்நாட்டுத் திரைப்படமும், 'ஜெனரல் கட் ரோட்டின் மீட்சி' என்ற 85 நிமிட சர்வதேச திரைப்படமும் திரையிடப்படவுள்ளது.

25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'ஏற்க மறுக்கும் கலை: சந்திரகுப்தாவுடனான நேர்காணல்' என்ற 8 நிமிட உள்நாட்டுத் திரைப்படமும், 'ஒருமைப்பாட்டுக்கான சாத்தியம்' என்ற 10 நிமிட உள்நாட்டுத் திரைப்படமும், 'சமத்துவத்தைத் தேடி' என்ற 29 நிமிட உள்நாட்டுத் திரைப்படமும், 'பிரிவுகளாக ஈரான்' என்ற 94 நிமிட சர்வதேசத் திரைப்படமும் திரையிடப்படவுள்ளன. (த-5)

## மஹிந்தவின் பிறந்தநாளுக்காக பரீட்சைகளுக்கு நேற்றுத் தடை

யாழ்ப்பாணம், நவ.20

ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு இடம்பெறும் நிகழ்வுகளில் மாணவர்களைப் பங்குபெறச் செய்வதற்காக நேற்று திங்கட்கிழமை இடம்பெறவிருந்த மாகாண மட்டப் பரீட்சைகள் நிறுத்தப்பட்டன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்ததினத்தைச் சகல திணைக்களங்களும், பாடசாலைகளும் கொண்டாட வேண்டும் என்ற கண்டிப்பான உத்தரவு அமைச்சுகளால் வழங்கப்பட்டிருந்தன.

இதற்கமைய பாடசாலைகளில் நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதியின் பிறந்ததின நிகழ்வுகள் கொண்டாடப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலைகளில் காலைப் பிரார்த்தனை நிறைவு பெற்றபின்னர், அந்தப் பகுதிகளைச் சேர்ந்த அரச தரப்பு அரசியல் பிரமுகர்கள் மாணவர்கள் மத்தியில் ஜனாதிபதி பற்றிய உரைகளை நிகழ்த்தினர்.

தரம் 9 மாணவர்களுக்கு நேற்றுப் பரீட்சை இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த போதும், அது பின்னர் திடீரென இடைநிறுத்தப்பட்டது. வடமாகாணத்தின் சகல பாடசாலைகளிலுமே இந்தப் பரீட்சை இடைநிறுத்தப்பட்டது.

இந்தவிடயம் தொடர்பில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜாவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது,

"தேசிய மட்ட நிகழ்வு ஒன்றுக்கு மாணவர்கள் கொழும்பு செல்ல வேண்டியிருந்ததாலேயே பரீட்சை இடைநிறுத்தப்பட்டது" - என்றார்.

போட்டி தொடர்பில் முன்னரே தெரியாதா? என அவரிடம் கேட்டபோது, கடந்த வியாழனோ, வெள்ளியோ தான் தமக்கு போட்டி தொடர்பான தகவல் வழங்கப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார். (த-5-410)

## நகுலேஸ்வரத்தில் நேற்று ஜனாதிபதிக்காக வழிபாடு

யாழ்ப்பாணம், நவ.20

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டு, கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் நேற்று திங்கட்கிழமை நண்பகல் விசேட பூசை வழிபாடுகளை யாழ்.மாவட்ட செயலகமும், வடக்கு மகாண சபையும் இணைந்து நடத்தியுள்ளன.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாகவே இந்தப் பூசை வழிபாடுகள் நடத்தப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் மாவட்ட செயலகத்தின் திணைக்களத் தலைவர்கள், வடக்கு மாகாண சபையின் செயலாளர்கள், பொலிஸார் உட்பட அரச அதிகாரிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.


கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளின் பின்னர், ஆலய அன்னதான மடத்தில் மதியபோசனமும் வழங்கப்பட்டது. (த-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நயினாதீவுக்கு வந்த இரண்டாவது பஸ்ஸும் நகர மறுக்கிறது

யாழ்ப்பாணம், நவ.20
நயினாதீவு உள்ளூர்ப் போக்குவரத்துச் சேவைக்கென நேற்று திங்கட்கிழமை நயினாதீவுக்கு வந்து சேர்ந்த பஸ் உடனேயே 'நகர முடியாமல்' இருக்கிறது என்று நயினாதீவு மக்கள் தெரிவித்தனர். அங்கு ஏற்கனவே சேவையில் இருந்த பஸ்ஸும் பழுதடைந்துள்ளது.

இந்த நிலையில் நேற்று அங்கு வந்து சேர்ந்த பஸ்ஸையும் மக்கள் தள்ளியே ஓட வைத்தனர். எனினும் சிறிது தூரம் சென்றதும் குறிப்பிட்ட பஸ் தொடர்ந்து நகர முடியாது நின்றுவிட்டது என்று மக்கள் விசனம் தெரிவித்தனர். (ம-7)



நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவிலில் பொது நூலகத்தின் புதிய வாசிப்புக் கூடத்தை நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் கோண்டாவில் றோ.க.த.பா. சாலை அதிபர் ஆர். செந்தில்குமரன் ஆகியோர் திறந்து வைக்கின்றனர். இதில் புதிய வரவு நூல்கள், அண்மையில் பாகக் கிடைக்கப்பெற்ற ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டன. (ம-14)

## தனியார் போக்குவரத்து ஊழியர்
## தீர்க்கப்படாத பிரச்சினைக்கு மேலிடங்களை நாட முடியும்

யாழ்ப்பாணம், நவ.20
தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்கள் தமக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக சங்கம் ஊடாக தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிடம் முறைப்பாடு வழங்கி 2 வாரங்களுக்குள் தீர்க்கப்படாவிட்டால் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யலாம்.

யாழ். மாவட்ட மற்றும் வெளி மாவட்ட தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்கள் தொடர்ச்சியாக முரண்படுவதுடன் கைகலப்பிலும் ஈடுபடுகின்றனர். இது தொடர்பானபிரச்சினைகளைபொலிஸ் பிரிவுகளிலும் முறைப்பாடு கள் செய்துள்ளனர். அத்துடன் சங்கம் ஊடாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளனர். இவற்றில் சில பிரச்சினைகளுக்கே தீர்வு காணப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, சாரதிகள் நடத்துநர்கள்தமது பிரச்சினைகளை முன்வைக்கும் போது 2 வாரங்களுக்குள் அதற்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

தவறும் பட்சத்தில் அந்தப் பிரச்சினைகளை மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிட முடியும்.- எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

## சாவகச்சேரி மது வரிப் பிரிவினால் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா வசூல்

### சட்டவிரோத செயற்பாட்டில் ஈடுபட்டோரிடம் பெறப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.20
சாவகச்சேரி மதுவரித் திணைக்களக் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிகளில் கடந்த ஜனவரி மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையான காலப் பகுதியில் ஒரு லட்சத்து 80 ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணமும் அறவிடப்பட்டுள்ளது என்று மதுவரித் திணைக்கள வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

சட்டவிரோத மதுபான விற்பனை, 21 வயதுக்கு உட்பட்டோருக்கு சிகரெட் விற்றமை, கசிப்பு விற்பனை போன்ற குற்ற செயல்களுடன் ஈடுபட்ட 180 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதன் மூலமே இந்த வசூல் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகர், வரணி, தனங்களப்பு, கைதடி, நுணாவில் போன்ற இடங்களில் மதுவரித் திணைக்கள சட்டக் கோவைகளுக்கு எதிராக இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

இதற்கமைவாக ஜனவரி மாதம் 5 பேருக்கு 14 ஆயிரத்து 500 ரூபாவும், பெப்ரவரி மாதம் 16 பேருக்கு 19 ஆயிரம் ரூபாவும் மார்ச் மாதம் 15 பேருக்கு 36 ஆயிரம் ரூபா அபராதமும், ஏப்ரல் மாதம் ஒருவருக்கு இரண்டாயிரம் ரூபாவும் மே மாதம் 9 பேருக்கு 10 ஆயிரம் ரூபாவும் ஜூன் மாதம் 19 பேருக்கு 27 ஆயிரம் ரூபாவும் ஜூலை மாதம் 15 பேருக்கு மூவாயிரம் ரூபாவும், ஓகஸ்ட் மாதம் 10 பேருக்கு 13 ஆயிரம் ரூபாவும் செப்ரெம்பர் மாதம் 15 பேருக்கு 46 ஆயிரம் ரூபாவும் ஒக்ரோபர் மாதம் 3 பேருக்கு 10 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.

இந்த வருடம் கடந்த ஏப்ரல் மட்டுமே சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்பவர்கள் இனங்காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

# பிரதேச சபையின் அனுமதியின்றி இனி காக்கைதீவில் கழிவு கொட்ட முடியாது

### மக்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க ஒன்றிணைய அழைப்பு

வலி.தென்மேற்கு,நவ.20
*பிரதேச சபையின் அனுமதியின்றி வலி.தென்மேற்குப் பிரதேச சபை எல்லையில் உள்ள காக்கை தீவுப் பிரதேசத்தில் திண்மக் கழிவுகள் கொட்ட அனுமதிக்க முடியாது. இவ்வாறான செயற்பாடுகளால் மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர். கால்நடைகளும் இதனால் ஆபத்துக்களை எதிர்நோக்கியுள்ளன.*

இந்த நிலைமையை மாற்றியமைக்க சம்பந்தப்பட்ட தரப்பினர் ஒன்றிணைய வேண்டும். வலி.தென்.மேற்குப்பிரதேச சபை உறுப்பினர் கே.கௌரிகாந்தன் வலி.தென் மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்வாறு கூறினார்.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலக மண்டபத்தில் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் முருகேசு சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதேச சபை உறுப்பினர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

காக்கைதீவு பகுதியிலுள்ள கல்லுண்டாய் பிரதேசம் வலி.தென் மேற்குப் பிரதேச சபைக்குச் சொந்தமானது. பிரதேச சபையின் அனுமதியின்றி யாழ்.மாநகர சபை எல்லைக்குள் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகள் தினமும் பலவாகனங்களில்ஏற்றப்பட்டு கல்லுண்டாய் பகுதியில் கொட்டப்பட்டு தீ வைத்து எரிக்கப்படுகின்றன. இதனால் இந்தப் பிரதேசம் புகை மண்டலமாகக் காட்சியளிப்பதுடன் துர்நாற்றமும் வீசுகின்றது.

சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் இடம்பெற்றுவரும் இந்தச் செயற்பாட்டால் வீதியால் மக்கள் நடமாட முடியாமல் உள்ளது. இந்தப் பிரதேசத்தை அண்மித்து வாழும் மக்களும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். அதுமட்டுமன்றி வயல் நிலங்களில் பொலித்தீன்பைகள் பரந்து கிடப்பதால் விவசாயமும் பாதிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் கால்நடைகளின் மேய்ச்சல் இடமாக இருந்த இந்தப் பிரதேசம் தற்போது கழிவுப் பொருள்கள் நிறைந்து காணப்படுகின்றது. இந்த நிலையில் கால்நடைகள் மேய்ச்சல் தரவைகள் இன்றி அலைகின்றன. கடந்த காலங்களில் இந்தப் பிரதேசத்திலுள்ள கால்நடைகளின் எருவைச் சேகரித்துப் பல குடும்பங்கள் வாழ்க்கை நடத்தி வந்தன.

இந்தப் பிரதேசத்தில் கொட்டப்படும் திண்மக் கழிவுகளால் மக்களுக்கும் கால்நடைகளுக்கும் ஏற்படும் ஆபத்து குறித்துப் பல தடவைகள் உயர் அதிகாரிகளின்கவனத்துக்குக்கொண்டு வரப்பட்டது. எனினும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் மௌனத்தைக் கடைப்பிடித்து வருகிறார்கள். எனவே அனுமதியின்றி அத்துமீறி இடம்பெறும் இந்தச் செயற்பாட்டை, மக்களின் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும்- என்று கூறினார். (ம-115)

## சுகாதாரத் தொண்டர் தாக்கப்பட்டமைக்கு வலி. மேற்குப் பிரதேச சபை கண்டனம்

வலி. தென்மேற்கு, நவ.20
நல்லூர் பிரதேசத்தில் திருநெல்வேலி பகுதியில் தொண்டர்களுடன்இணைந்து கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சுகாதாரப் பரிசோதகர் தாக்கப்பட்டமைக்கு வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா. ஐங்கரன் கண்டனம் தெரிவித்துள்ளார். உரிய சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சுகாதாரப் பகுதியினரைக் கோரியுள்ளார்.

டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சுகாதாரப் பரிசோதகர் தாக்கப்பட்டமை சம்பந்தமாக வலி. மேற்கு பிரதேசசபைத் தலைவர் வெளியிட்டுள்ள கண்டனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 5ஆம் திகதி திருநெல்வேலி பாரதிபுரம் பகுதியில் பொதுசுகாதாரப் பரிசோதகர் டெங்கு ஒழிப்பு செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அவரை அப்பகுதியில் வைத்து தாக்கி காயப்படுத்தியுள்ளனர். இந்தச் செயலானது மிகவும் கேவலமான செயலாகவே கருதப்பட வேண்டியது.

அண்மைக்காலமாக நாட்டின் பல பாகங்களிலும் மக்களின் வாழ்வுக்கு அச்சுறுத்தலாக அமைந்திருப்பது டெங்கு நுளம்பின் தாக்கமாகும்.

இந்த வகையில் சுகாதாரத் துறையினர் பரந்த ரீதியில் மக்களின் சுகநலமான வாழ்க்கைக்காக பல்வேறு விழிப்புணர்வுகளையும் செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருவது அனைவரும்அறிந்த உண்மை.

இதற்கு மேலாக இவ்வாறான செயற்பாடுகளில் சமூக நன்மை கருதி செயற்படும் போது பொதுமக்களும் தமது காத்திரமான பங்களிப்பை மேற்கொள்வது காலத்தின் கடமையாகும்.

இவ்வாறான செயற்பாடுகளைப் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் தமது தொண்டர்களுடனும், சமூக தொண்டு நிறுவனங்களுடனும் இணைந்து செய்வது மக்களின் நலனுக்காகவே.

இந்த வகையில் குறித்த பொது சுகாதாரப் பரிசோதகரைத் தாக்கியமை மிக வன்மையாகக் கண்டிப்பதோடு இந்த விடயம் தொடர்பில் சுகாதாரத்துறையினர் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறான அநாகரிகமான சம்பவங்களுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வது ஏனையோருக்கும் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்குச் சமனானது. தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பல்வேறு சவால்கள் மத்தியில் சில இலக்குகளை அடைவதற்கு முயற்சிக்கும் இவ்வாறான சமூக நல விரும்பிகளின் பணிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்றுள்ளது. (ம-115)

## பாடசாலைகளில் உணவுடன் மீன்; உரிய தரம் பேண அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ.20
உலக உணவுத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு உணவுடன் மீன் வழங்கி வரும் பாடசாலைகள் உரிய தரம் பேண வேண்டும் என்று வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார். இந்த விடயம் தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாகவே பாடசாலைகளுக்கு இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் வழங்கி வரும் பாடசாலைகள் நாள் ஒன்றுக்கு ஒரு மாணவனுக்கு 30 கிராம் வீதம் வாரத்தில் 3 நாள்களுக்கு வழங்க வேண்டும். அத்துடன் நாளொன்றுக்கு 25 கிராம் வீதம் பருப்பும் வழங்க வேண்டும். குறிப்பிட்ட பொருள்களின் இருப்பு மற்றும் பாவனைக்கான பதிவுகளை உரிய முறையில் பேண வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பெற்றோரை இழந்த 950 மாணவர்கள் தீவக வலயத்தில்

தீவகத்தில் பெற்றோரை அல்லது அவர்களில் ஒருவரை இழந்த மாணவர்கள் தொள்ளாயிரத்து 50 பேர் கல்வி பயில்கின்றனர். தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோண் குயின்ரஸ் இந்தத் தகவலைத் தெரிவித்தார். இந்த மாணவர்களின் கல்விக்கு உதவும் பொருட்டு அடுத்த ஆண்டுக்குரியதான கற்றல் உபகரணங்கள்அடங்கிய பொதிகள்நேற்று திங்கட்கிழமை முதல் வழங்கப்பட்டு வருகின்றன என்று மேலும் கூறினார். (ம-7)

## மீள்குடியமர்ந்த மக்களுக்காக விற்பனை நிலையங்கள் திறப்பு

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் சுழிபுரம் மேற்கு, கிழக்கு பகுதிக்கான விற்பனை நிலையம் ஒன்றை நேற்று திறந்து வைத்துள்ளது.

இந்தப் பகுதியில் மீள்குடியமர்ந்த மக்களின் அத்தியாவசிய தேவைகளை கருதி இந்த விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ. கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மாதகல் மேற்கில் விற்பனைநிலையம் ஒன்றைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்துள்ளது. அத்துடன் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பொன்னாலையில் விற்பனை நிலையம் ஒன்றையும் திறந்து வைத்துள்ளது.

யாழ். அரச அதிபர் இந்த இரண்டு விற்பனை நிலையங்களையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்தார். இந்த சங்க விற்பனை நிலையங்கள் ஊடாக மீள்குடியமர்ந்துள்ள மக்களுக்கான நிவாரணமும் வழங்கப்பட்டு வருகின்றன என்று கூறப்பட்டது. (ம-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு ஆசிரியர்களின் சம்பள நிலுவைகள் கிடப்பில்

## மாகாண சபை நிதி வழங்கவில்லை

புதுக்குடியிருப்பு,நவ.20

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைகளை வழங்குவதற்கான பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன. ஆயினும் அதற்கான நிதி மாகாண சபையில் இருந்து இதுவரை கிடைக்கவில்லை என முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.இராஜ்குமார் தெரிவித்தார். இதனால் நிலுவைக் கொடுப்பனவை எதிர்பார்த்திருந்த - அண்மையில் மீளக்குடியமர்ந்த ஆசிரியர்கள் விசனமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் கற்பிக்கும் பெருமளவான ஆசிரியர்களுக்குக் கடந்த 10 வருடங்களுக்கு மேலாகச் சம்பள உயர்வுகளோ, சம்பள நிலுவைகளோ வழங்கப்படவில்லை.

இது குறித்து முல்லைத்தீவுக் கல்விப் பணிப்பாளரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இடம்பெற்ற போர்ச் சூழல் காரணமாக 2002 ஆம் ஆண்டிலிருந்து பல ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வும் அதற்கான நிலுவைகளும் வழங்கப்படவில்லை. அதற்குரிய வேலைகளில் 90 வீதமானவை நிறைவடைந்து விட்டன. கோவைகள் நிதிக் கிளையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதற்கான நிதி மாகாண சபையில் இருந்து கிடைக்காமையால் அவை அங்கேயே தேங்கிக் கிடக்கின்றன.

மாகாண சபையில் இருந்து போதிய நிதி கிடைக்கும் பட்சத்தில் விரைவாக உரியவர்களுக்கு நிலுவைகள் உடன் வழங்கப்படும் என்றார். (த-400)

# அமைச்சர்களின் பாதுகாப்பை குறைக்க ஐ.தே.க. கோரிக்கை

போர் முடிந்து அச்சுறுத்தல் நீங்கியுள்ளதால் அமைச்சர்களின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைத்துவிடுமாறு ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று நாடாளுமன்றில் பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்தார்.

நேற்றைய வாய்மூல விடைக்கான நேரத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவரின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு ஊழியர்களினதும், வாகனங்களினதும் எண்ணிக்கை தொடர்பில் தயாசிறி கேள்வி எழுப்பினார்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவரின் பாதுகாப்புக்காக இன்ஸ்பெக்டர் உட்பட 6 பொலிஸாரும் வழங்கப்பட்டுள்ளனர். ஒரு வாகனமும் வழங்கப்பட்டுள்ளது என்று சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வா பதிலளித்தார்.

''பெரும்பாலான அமைச்சர்கள் அதிக எண்ணிக்கையிலான வாகனங்களையும் 300 அல்லது 400 பாதுகாப்பு ஊழியர்களையும் தமது பாதுகாப்புக்காக வைத்துள்ளனர்'' என்று சுட்டிக்காட்டினார் தயாசிறி.

''போர் முடிவடைந்துள்ளது. பாதுகாப்பு அச்சுறுத்தலும் இல்லை. இந்நிலையில் பாதுகாப்பு ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாம்தானே'' என்று அவர் கேள்வி எழுப்பினார். இந்தக் கோரிக்கையை தான் பாதுகாப்பு அமைச்சிடம் முன்வைப்பார் என்று சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வா பதிலளித்தார். (உ-சி)

## வெலிக்கடை கலவரம் அறிக்கை 3 வாரத்தில்

வெலிக்கடையில் இடம்பெற்ற கலவரம் குறித்த விசாரணை அறிக்கை மூன்று வாரங்களுக்குள் வெளியிடப்படும் என்று இது குறித்து விசாரணை செய்ய அமைக்கப்பட்டுள்ள மூன்று பேர் அடங்கிய குழு அறிவித்துள்ளது.

இந்த மூன்றுவார காலத்தில் இடைக்கால அறிக்கையாவது சமர்பிக்கப்படும் என்று நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய விசாரணைக்குழுவின் தலைவர் முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி பந்துல அத்தபத்து தெரிவித்தார்.

கடந்த 9ஆம் திகதி வெலிக்கடை சிறையில் இடம்பெற்ற கலவரத்தில் 27 கைதிகள் உயிரிழந்திருந்தனர். இதேவேளை கலவரத்தைப் பயன்படுத்தி தப்பிச்சென்ற நான்கு கைதிகளை கைது செய்வதற்கு பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## 15 ஈழத்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் இது தொடர்பான விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் போகநல்லூர் அகதி முகாமிலிருந்து காணாமல்போன இந்த 15 அகதிகளும் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இருப்பினும் போகநல்லூர் அகதி முகாமிலிருந்து காணாமல்போன இவர்கள் வேலை தேடி வெளியில் சென்றிருக்கலாம் எனவும் இவர்கள் ஒரு நாள் அல்லது இரண்டு நாள்களுக்குள் முகாமுக்கு திரும்பலாம் எனவும் போகநல்லூர் அகதி முகாமிலுள்ள ஏனைய அகதிகள் தெரிவித்துள்ளனர். (ஊ-சி)

## கிளிநொச்சி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மழை காலத்தில் மக்கள் இறுக்கமான சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்; கொதித்தாறிய நீரைப்பருக வேண்டும்; சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்; டெங்கு,மலேரியா ஆகிய நோய்கள் பரவும் இடங்களை இனம் கண்டு அழிக்க வேண்டும்; இதன் மூலம் மக்கள் கொடிய நோய்களிலிருந்து தற்காத்துக் கொள்ள முடியும் - இவ்வாறு மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர். (க-18)

## கே.பியின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

விடுத்தார்.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்தார்.

கே.பி. கைதுசெய்யப்பட்டபோது அவரிடம் கப்பல்கள், 600 வங்கிக் கணக்குகள், உலகம் முழுவதும் சொத்துக்கள் இருக்கின்றன என்று அரசு கூறியது.

அந்த கே.பிக்கு எதிராக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பில் அவர் தேடப்படுபவர்.

இப்படிப்பட்ட கே.பிக்கு எதிராக அரசு எடுத்த சட்ட நடவடிக்கை என்ன? அவரிடம் உள்ளன என்று அரசால் கூறப்பட்ட சொத்துக்களுக்கு என்ன நடந்தது?

இந்தச் சொத்துக்களின் விவரங்கள் தொடர்பாகவும் கே.பிக்கு எதிராக எடுத்த சட்ட நடவடிக்கை தொடர்பாகவும் அரசு நாடாளுமன்றத்துக்கு தெரிவிக்கவேண்டும் - என்றார். (உ-சி)

## வேலணை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யில் புதிய முன்னரங்க வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. 200 க்கும் மேற்பட்ட படையினர் இந்தப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அரச காணியை தமக்கு வழங்குமாறு படையினர் கோரியதற்கு அமைய அவர்களுக்கு வழங்கப்பட்டதாக வேலணைப் பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

இதனைவிட குறிகாட்டுவான் - வேலணை பிரதான வீதியில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வீட்டிலும் புதிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டு வருகின்றது. மண்டைதீவு சந்தியிலும் இராணுவத்தினரும், கடற்படையினரும் இணைந்து படைமுகாம் அமைத்து வருகின்றனர்.

இராணுவத்தினர் குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் தமக்கு காணிகளை வழங்குமாறு கோரியுள்ளனர். பல இடங்களில் அவை அவர்களுக்கு வழங்கப்படவில்லை. எனினும் அடாத்தாக அந்தக் காணிகளில் படைமுகாம்கள் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# திருட்டுச் சந்தேகநபர் மாட்டினார் பொலிஸாரிடம்

வலி.தென்மேற்கு, நவ.20

பட்டப்பகலில் வீட்டுக்குள் புகுந்து அங்கு பாதுகாப்பாக வைத்திருந்த தங்க நகைகள் உட்பட சுமார் ஒரு இலட்சம் பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்ற இளைஞர் ஒருவர் பொலிஸாரிடம் வகையாக மாட்டிக் கொண்டார்.

திருடப்பட்ட பொருள்களைக் கைப்பற்றிய பொலிஸார் இளைஞரைக் கைது செய்து மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தினர். நீதிவான் இவரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பட்டப்பகலில் வீட்டில் எவருமில்லாத சமயம் பார்த்து சண்டிலிப்பாயில் உள்ள ஒரு வீட்டுக்குள் நுழைந்த இளைஞர் ஜன்னல் வழியாக உள்ளே சென்று அங்கு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த தங்க நகைகள் உட்பட சுமார் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளார்.

இந்தத் திருட்டுப் பற்றி மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து, பொலிஸாருக் குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து இன்ஸ்பெக்டர் மல்ஹமே தலைமையில் சென்ற கொன்ஸ்டபிள்கள் ஹரிச்சந்திரா, சுரவீர, மிலான் ஆகியோர் சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவரைக் கைது செய்து விசா ரணை செய்த போது திருட்டு அம்பலத்துக்கு வந்தது.

திருடப்பட்ட பொருள்களைக் கைப்பற்றிய பொலிஸார் இளைஞரை மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். நீதிவான் இவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (த-115)

## இலவச சீருடைகள், புத்தகங்கள் வலயங்களுக்கு அனுப்பி வைப்பு

யாழ்ப்பாணம், நவ.20

வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கான அடுத்த வருட சீருடை மற்றும் பாடப் புத்தகங்கள் ஒவ்வொரு கல்வி வலயங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன. மூன்றாம் தவணை விடுமுறைக்கு முன்னர் இவை முற்றாக அனுப்பி வைக்கப்பட்டு விடும் என்று வடக்கு மாகாண கல்வித் திணைக்கள மேலதிக பணிப்பாளர் முத்து இராதாகிருஸ் ணன் தெரிவித்தார்.

''கொழும்பில் இருந்து இங்குள்ள சகல கல்வி வலயங்களுக்கும் இவை அனுப்பி வைக்கப்படுகின்றன. சில வலயங்களுக்கு அவை சென்றடைந்துள்ளன.

இவற்றை மாணவர்களுக்கு உத்தியோக பூர்வமாக வழங்கும் நிகழ்வு ஜனவரியில் நடைபெறவுள்ளது. இந்த வருடத்துக்கான நிகழ்வு கிளிநொச்சியில் நடை பெற்றிருந்தது.'' என்று அவர் மேலும் கூறினார். (த-4)

## புதுக்குடியிருப்பில் வெடிபொருள் மீட்பு



மன்னார், நவ.20

புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி வெடிபொருள்கள் கடந்த சனிக்கிழமை மன்னார் விசேட பொலிஸ்-புலனாய்வுப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அங்கு சென்ற அவர்கள் புதைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி வெடி பொருள்களை மீட்டுள்ளனர்.

ரீ-56 துப்பாக்கி ரவைகள் - 30, 12 மி.மீற்றர் குண்டு 21, 15 மி.மீற்றர் குண்டுகள் 18, எம்.பி.எம்.ஜீ. குண்டுகள் - 640, 18 மி.மீற்றர் எச்.இ.ஏ.ரி. குண்டுகள் - 2, கைக்குண்டு - 1 ஆகியவை மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வெடிபொருள்கள் அனைத்தும் இலங்கை இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-12)

## சிங்களவர்களும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

காணிகளை அந்நிய மதத்தவர்களுக்கு விற்கிறார்கள். இதனால் நாம் காடுகளுக்குச் சென்று வாழவேண்டிய நிலைமைதான் ஏற்படும்.

பங்களாதேஷில் உள்ள பௌத்த சின்னங்களை முஸ்லிம் தீவிரவாதிகள் உடைத்து அழித்துள்ளார்கள். அன்று பௌத்த நாடுகளாயிருந்த மலேசியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளிலிருந்த பௌத்தர்களை விரட்டியடித்து அங்கு அந்நிய மதத்தவர்களே இன்று பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். அதுபோன்ற ஒரு நிலைமை இலங்கையிலும் உருவாகாமல் நாம் பாதுகாக்கவேண்டும்.

கட்சி அரசியல் காரணமாக இங்குள்ள பௌத்தர்கள் நாளுக்கு நாள் உரிமைகளை இழந்துவருகிறார்கள். இங்குள்ள அரசியல்வாதிகளிடம் பல தடவைள் இதைப் பற்றிக் கூறியும் அவர்கள் கவனத்தில் எடுக்காததால்தான் பௌத்தர்களாகிய உங்களிடம் இதைப் பற்றிக் கூறுகிறேன் - எனத் தெரிவித்துள்ளார். (உ-சி)

## ஜனாதிபதி கஸஸ்தானில்

யாழ்ப்பாணம்,நவ.20

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கஸஸ்தான் நாட்டுக்கு நேற்று பயணமானார்.

இருநாள்கள் அங்கு தங்கியிருந்து, கஸஸ்தான் அரசின் உயர்மட்ட பிரதிநிதிகளை சந்தித்து மஹிந்த கலந்துரையாடவுள்ளார். இதன்போது சுற்றுலாத்துறை அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இருநாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக் குறித்த ஒப்பந்தங்களிலும் ஜனாதிபதி கைச்சாத்திடவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும்ஐ.நா மனிதஉரிமைகள் சபையில் இலங்கைக்கான ஆதரவு அணியை பலப்படுத்தும் நோக்கிலேயே மஹிந்த ராஜபக்ஷ, கஸகிஸ்தானுக்கு பயணமாகி உள்ளார் என்று ஊகிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை ஐ.நா பொதுச் சபையில் நடைபெற்ற இரகசிய வாக்கெடுப்பில், ஐ.நா மனிதஉரிமைகள் சபைக்கான உறுப்பு நாடாக கஸகிஸ்தான் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங)

## கிபிர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அத்துடன் அவை தாக்குதல் நடத்துவது போல வட்டமிட்டு குத்துச் சாய்வாகக் கீழிறங்கி மீண்டும் மேலெழும்பின. இதனால் அந்தப் பகுதி மக்கள் கலவரமடைந்தனர்.

போர் முடிவடைந்து 3 ஆண்டுகளின் பின்னர் இந்த மாதம் 10 ஆம் திகதி முதல் தடவையாக 'கிபிர்' விமானங்கள் முல்லைத்தீவு வான் பரப்பில் வட்டமிட்டன. அதன் பின்னர் கடந்த 13 ஆம் திகதி தீபாவளித் தினத்தன்றும் 'கிபிர்' விமானங்கள், முல்லைத்தீவில் தாழப் பறந்து மக்களை அச்சுறுத்தின.

இதன் பின்னர் நேற்று திங்கட்கிழமை காலை 8 மணியளவில் திடீரெனப் பேரிரைச்சலுடன் முல்லைத்தீவு பிரதேசத்துக்குள் நுழைந்த 'கிபிர்' விமானங்கள் தாழப் பறந்து வட்டமடித்தன. புதுக்குடியிருப்பு, கேப்பாபிலவு, ஆனந்தபுரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளிலும் முல்லைத்தீவுக் கடல் பிரதேசத்திலும் தொடர்ச்சியாக 10 நிமிடங்கள் வரை அவை பேரிரைச்சலுடன் வட்டமடித்தன.

மாணவர்கள், ஆசிரியர்கள் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த நேரத்திலேயே 'கிபிர்' விமானங்கள் வட்டமடித்தமையால் மாணவர்கள் வீதிகளில் சைக்கிள்களைப் போட்டுவிட்டு மரங்களின் கீழ் ஒளித்துக் கொண்டனர். மக்களும் பதற்றத்தில் தமது வீடுகளைவிட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினர். பாடசாலையில் இருந்த மாணவர்கள் மேசைகளின் கீழ் பாதுகாப்புத் தேடினர்.

''சண்டைக் காலத்தில்தான் இப்படிச் செய்தார்கள். இப்பவும் எங்களைப் போட்டுபடாத பாடுபடுத்துறாங்கள்'' என்று மக்கள் சலித்துக்கொண்டனர்.

காவலரண்களில் கடமையிலிருந்த படையினர் மக்களைப் பார்த்து ''பயப்படவேண்டாம். பயிற்சிக்காகத்தான் இப்படிச் செய்கிறார்கள்'' எனத் தெரிவித்துள்ளனர். (உ-5-410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# தமிழர்களை உரிய தளத்தில் நின்று அரசு புரிந்துகொள்வது எப்போது?

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அடியோடு இல்லாமல் செய்துவிடுவதற்கு அரசில் அங்கம் வகிக்கும் சில தீவிர இனவாத கட்சிகளும், அதே கொள்கையைக் கொண்ட அரசுக்கு வெளியில் இருக்கும் சக்திகளும் தீவிர பிரசாரத்திலும் செயற்பாடுகளிலும் இறங்கியுள்ள அதேவேளையில் -

13 ஆவது திருத்தத்துக்கு உயிர் மூச்சை வழங்குவதாக இருக்கின்ற மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்கும் அம்சங்களை நீக்கிவிட முயற்சிகள் நடப்பதாக மற்றொரு புறத்தில் பேச்சடிபடுகிறது.

13 ஆவது திருத்தத்துக்கு அப்பாலும் சென்று தமிழ்பேசும் மக்களுக்கு தீர்வு வழங்கப்போவதாக அழகாக வசனம் பேசிக்கொண்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால், தமது சொந்த ஊருக்குத் தாமே போக முடியாத நிலை ஒன்று ஏற்பட்டுவிடும் என்று பின்னர் தென்னிலங்கையில் சில கூட்டங்களில் சுருதியை மாற்றிக்கொண்டு பேசியிருந்தார்.

அந்தப் பேச்சுக்கு வலுச் சேர்க்கவும், தம் அரசில் இருந்து கொண்டே 13 ஆவது திருத்தத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ள அமைச்சர்கள் விமல் வீரவன்ஸ போன்றவர்களை ஆசுவாசப்படுத்தும் வகையிலும் நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகையில், மாகாணசபை முறைமையில் சில மாற்றங்கள் செய்யப்படுவது அவசியம் என்று அடக்கி வாசித்தார். அவ்வாறு மாற்றம் செய்வது மக்களை வலுப்படுத்துவதாக இருக்க வேண்டும். மக்களைப் பிரிப்பதாக இல்லாமல் மாகாணசபை அவர்களை ஒன்றுபடுத்துவதாக இருக்க வேண்டும் என்றும் அதற்கு வியாக்கியானம் கூறியிருந்தார்.

இப்பொழுது வடக்கு மாகாண சபையைத் தவிர ஏனைய எட்டு மாகாண சபைகளும் இயங்குகின்றன. அவற்றுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பது தெரியவில்லை. அவ்வாறு வழங்கி பரிசோதித்துப் பார்க்கப்பட்டதாகவும் அறிய முடியவில்லை. அவ்வாறு சோதித்தாலும்கூட, அவை அரசு சார்ந்த சபைகள் என்பதால் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்துவிடும் ஆபத்தும் இருக்காது.

இதுகுறித்து நுணுகி நோக்கினால், வடக்கு மாகாண சபையை உத்தேசித்துத்தான் அதற்கு முறையாக தேர்தல் எதுவும் நடத்தப்படாத நிலையிலும் அரசும் அதனுடனான தோழமையுள்ள தீவிர இனவாதிகளும் அஞ்சுகிறார்கள். அதிகாரங்கள் கிடைக்க இடம்தரமாட்டோம் என்று கூக்குரல் இடுகிறார்கள்.

13 ஆவது திருத்தம் ஒழிக்கப்படுவதற்கு அரசில் அங்கம் வகிக்கும் சில அமைச்சர்களும், இடதுசாரித் தலைவர்களும் ஏற்கனவே எதிர்ப்புத் தெரிவித்துள்ளமை தெரிந்ததே. பொலிஸ், காணி அதிகாரங்களை அதில் இருந்து நீக்குவதற்கும் அவர்கள் இடந்தரமாட்டார்கள் என்பதும் வெளிச்சமாகி உள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க., ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் பதவியிலிருந்த காலத்திலேயே, இந்த அரசமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பெற்றது என்பதால், அந்தக் கட்சியும் இந்த முயற்சிக்கு ஆதரவளிக்க முடியாது. ஆகையால் இப்போதுள்ள நிலைமையில் 13 ஆவது திருத்தம் ஒழிக்கப்படுவதோ-காணி-பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமல் செய்யப்படுவதோ இலகுவான காரியமாக இருக்கப் போவதில்லை.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் அடுத்த வருடம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதால் அதற்கு முன்னரே இந்த அதிகாரங்களை இல்லாமல் செய்து விடுவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன என்பதனைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

மறுபுறத்தில் பார்த்தால், வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் கடந்த 60 ஆண்டு காலத்துக்கு மேலாக எதற்காக போராடி வந்திருக்கிறார்களோ, அந்த அபிலாஷைகளை அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் எந்த விதத்திலும் முழு அளவில் நிறைவு செய்வதாக இல்லை. அதில் எவ்வித மாற்றமும் இல்லை.

ஆனால் அதிலுள்ள நல்ல அம்சங்களையும் இல்லாமல் செய்துவிட முயல்வது முற்றிலும் அநியாயமானது.

கடந்த பொதுத் தேர்தலின் போது வடக்கில் பல இடங்களிலும் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த போது ஜனாதிபதி அடிக்கடி கூறினார், ''என்னை நீங்கள் நம்புங்கள்-நான் உங்களை நம்புகிறேன்'' என்று. ஆனால் மக்கள் அவர் எதிர்பார்த்தது போல் வாக்களிக்கவில்லை. அதனால் அவர் ஏமாற்றமடைந்திருக்கலாம். எனவே இப்போது அரசமைப்பிலுள்ள 13 ஆவது திருத்தத்தை அவர் திருத்த முனைகிறார் என்றால் தப்பன்று.

ஜனநாயக நாடொன்றில் மக்கள் நம்பும்படியாக தலைவர்கள் செயற்பட்டால் மட்டுமே அவர்களை மக்கள் ஆதரிப்பார்கள். அதுவே அவர்களுக்குரிய உரிமை. தாம் விரும்புவது போல் மக்கள் செயற்படாத போது நிச்சயமாக பதவிக்கு வரும் தலைவர்கள் அவர்களை பழிவாங்கும் விதத்தில் செயற்படுவது அக்கிரமமானது.

தனிநாடு கோருவதை கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரங்களை பகிர்ந்த கொள்ள தமிழ்க் கட்சிகள் ஓரளவிலேனும் விருப்பம் கொண்டுள்ளன. அதனை அரசு உகந்த கோணத்தில், உரிய தளத்தில் நின்று புரிந்துகொள்ள வேண்டும். அவ்வழி செல்வதற்கு அரசு முன்வருவது எப்போது? தமிழ் மக்களை சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதைக் கைவிட்டு அவர்களை அரசும் அரசுத்தலைவர்களும் நம்ப வேண்டும். அதனை சூழ்ச்சிகள், தந்திரங்கள் இன்றி வெளிப்படுத்த வேண்டும். அந்த வெளிப்பாட்டினால் மட்டுமே நம்பிக்கை பிறக்க முடியும். இருதரப்புகளுக்கும் இடையே புரிந்துணர்வும் பரஸ்பர நம்பிக்கையும் வளர்ந்தால் மட்டுமே எதிர்காலத்தை அவை சுபீட்சமுள்ளதாக்கும்; நீடித்த அமைதிக்கும் வழி வகுக்கும்.

# வடக்கில் அதிபர் நியமனங்கள் பொருத்தமற்ற நிலையில்

**தேவை ஏற்படின் நீதிமன்றம் செல்லவுள்ளதாக ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், நவ. 20

வடமாகாணத்தில் சில பாடசாலைகளில் அதிபர்கள் நியமனம் செய்யப்படுவது பொருத்தமற்ற நிலையிலேயே தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இது தொடர்பில் தேவை ஏற்படும்போது நீதிமன்றை நாடவுள்ளோம்.

இலங்கைஆசிரியர்சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்குத் தகுதியான அதிபரை நியமனம் செய்யுமாறு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. தரம் I 'ஏபி' தராதரமுடைய பாடசாலைக்கு தரம் 2-I அல்லது அதற்கு மேல் தராதரமுடையவரே அதிபராக நியமிக்கப்படவேண்டும் என்பது நியதி.

சுற்றறிக்கை அதனையே கூறுகிறது. ஆனால் தரம் 2-II தராதரமுடைய அதிபரை நியமிக்கவுள்ளதாக அறிகிறோம்.

இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அது தொடர்பில் விசாரணைக்கு உரியவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள், பாகுபாடுகள் எதுவும் பொது நியமனங்களில் இருத்தலாகாது.

நியமனங்கள் தகுதி அடிப்படையில் ஒழுங்குமுறைப்படி செய்யப்படல் வேண்டும். கல்வி அதிகாரிகள் பக்கச் சார்பாக நடக்காது நியாயமாக நடந்து பணியாற்ற வேண்டும்.

வடமாகாணத்தில் சில பாடசாலைகளில் அதிபர் நியமனங்கள் மோசமான நிலையிலேயே தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இது தொடர்பில் வடமாகாண ஆளுநருடன் கலந்துரையாடவுள்ளோம். தேவை ஏற்படின் நீதிமன்றையும் நாடுவது என்று தீர்மானித்துள்ளோம்.- என்றார். (ம-4)

# இ.போ.ச. சாரதிகள் வடக்கில் பற்றாக்குறை

**நிவர்த்தி செய்ய 20 பேருக்கு நியமனம்**

யாழ்ப்பாணம், நவ. 20

வடமாகாணத்தில் உள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைகளில் நிலவும் சாரதி பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய 20 சாரதிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று சபையின் முகாமையாளர் அஸ்ஹர் தெரிவித்தார்.

வடக்கில் உள்ள 5 மாவட்டங்களுக்கும் இவர்கள் நியமனம் செய்யப்பட்டு பணியில் அமர்த்தப்படவுள்ளனர்.

இதன் மூலமாகத் தற்போது நிலவும் சாரதி பற்றாக்குறை ஓரளவு நீக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஏனைய சாலைகளைவிட யாழ்.சாலையிலேயே சாரதிகளுக்கு அதிக பற்றாக்குறை நிலவுகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

அதிலும் யாழ்-கொடிகாமம் சேவைகளில் இரவு சேவைகள் எப்போதாவது ஒரு தடவையே ஒழுங்காக இடம்பெறுகிறது.

அதனால் இரவு 8 மணிவரை பயணிகள் காத்திருப்பதோடு சில நேரங்களில் கொழும்பு செல்லும் பஸ்களிலேயே உள்ளூர் பயணிகள் செல்ல வேண்டிய நிலையும் ஏற்படுகிறது.

யாழ். சாலை பஸ் சாரதிகள் அநேகர் பகலில் மாத்திரம் சேவையாற்றிவிட்டுப் பிற்பகல், இரவு சேவைகளிலீடுபடாது வீடு சென்றுவிடுகின்றனர். இதனால் இந்த நிலை ஏற்படக் காரணம் என்று அஸ்ஹர் முன்னர் தெரிவித்தார்.

ஏனைய சாலைகளின் சாரதிகள் தமது பணியில் முழு நேரமும் அக்கறையுடன் பணியாற்றுகிறார்கள் என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# மாகாணமட்ட பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம், நவ. 20

மாகாணமட்டச்சிறுவர்பரிசளிப்பு விழா எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆரம்பக் கல்விப் பிரிவால் நடத்தப்படவுள்ள இந்த விழாவுக்கு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா தலைமை வகிக்கவுள்ளார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் செ.சத்தியசீலனும் சிறப்பு விருந்தினராக அமைச்சின் உதவிச் செயலாளர் ப.விக்னேஸ்வரனும் கலந்துகொள்வர்.

மாகாண மட்டத்தில் மிகவும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற பதினாறு மாணவர்கள் இதில் பரிசில்கள் பெறவுள்ளனர். நிகழ்வில் மாகாணப் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ம-7)

**கூட்டுறவுச் சமாச வளாகத்தில் உள்ள**

# திறந்தவெளிச் சந்தை தனியாரிடம் போகிறது

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ்.மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாச வளாகத்தில் உள்ள திறந்தவெளிச் சந்தைக் கட்டடத்தொகுதி தனியாரிடம் செல்கிறது.

மாதாந்த வாடகை அடிப்படையில் இது தனியாரிடம் விடப்படுகிறது என்று தெரியவந்துள்ளது.

யாழ்.பிரதம தபாலகத்துக்கு முன்பாக உள்ள இந்தக் கூட்டுறவு வர்த்தக நிலையக் கட்டடத் தொகுதியின் சில நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

இந்தக் கட்டடத்தில் தற்போது கருவாடு விற்பனை நிலையம் செயற்பட்டு வருகின்றது.

இதேபோன்று ஏனைய பிரிவுகளையும் தனியாருக்கு மாதாந்த வாடகைக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டின் உற்பத்திப் பொருள்களை ஒருங்கே சந்தைப்படுத்தும் நோக்கில் இந்தத் திறந்தவெளிச் சந்தை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முக்கிய கூட்டுறவு அமைப்புகள் இங்கு வைத்துப் பொருள்களை விற்பனைசெய்து வந்தன.

இந்த நிலையில் போதிய வருவாய் கிடைக்காமையால் இவை கைவிடப்பட்டன.

தற்போது ஒரு சில கூட்டுறவு அமைப்புகள் மட்டுமே இங்கு விற்பனையில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில் இவையும் தொடர்ந்து இங்கு விற்பனையில் ஈடுபட அதிக ஆர்வம் காட்டாமையால் அவற்றைத் தனியாருக்கு வாடகைக்குவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.-என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-17)

# கைத்தொலைபேசியை திருடியவர் கைது

யாழ்ப்பாணம், நவ.20

கொக்குவில் பகுதியில் பெறுமதிமிக்க கைத்தொலைபேசியைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த ஒருவரது 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசியே இவ்வாறு திருடப்பட்டது.

உடைமைக்கு உரித்துடையவர் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து சந்தேக நபர் கைத்தொலைபேசியுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மது அருந்துவதற்காகவே கைத்தொலைபேசியைத் திருடியதாகச் சந்தேகநபர் கூறியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-4)

# 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற தரம் 5 மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், நவ.20

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் நேற்றுக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கல்வி அமைச்சின் சுற்று அறிக்கைக்கு அமைய இந்த மாணவர்களுக்கு விசேட சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

குறித்த பாடசாலை மாணவர்களும் இவ்வாறு கௌரவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# நீண்ட இடைவெளிக்குப்பின் நாளை யூரி சபை விசாரணை

யாழ்ப்பாணம், நவ. 20

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் யாழ். மேல் நீதிமன்றில் ஜூரிசபை (அறங்கூறும் அவை) முன்னிலையில் நாளை புதன் கிழமை கொலைக்குற்ற வழக்கு ஒன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

சில வழக்குகள் தேவை ஏற்படும்போது ஜூரிசபை முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவது வழமை. அவ்வாறு ஜூரிசபையின் முன்னிலையில் வழக்கு நாளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவது நீண்ட காலத்தின் பின்னர் இடம்பெறுகிறது.

அச்சுவேலியில் 2007 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலை ஒன்று தொடர்பான வழக்கிலேயே ஐந்து சந்தேகநபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமதிபுரத்தில் இருக்கும் காணி யாருக்கு சொந்தம்

## நீதி பெற்றுத்தருமாறு 6 குடும்பங்கள் அதிகாரிகளுக்கு மனு

அக்கராயன், நவ.20

துணுக்காய் அமதிபுரம் கிராமத்தில் தனியார் ஒருவர் மேற்கொள்ளும் அடாவடித் தனத்தினால் தாம் இருப்பிடமின்றி அவதியுறும் நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தக் கிராமத்தில் வசிக்கும் ஆறு குடும்பங்கள் தெரிவிக்கின்றன.

அமதிபுரம் கிராமத்தில் வீதிக்கருகில் மக்கள் மீளக் குடியேற்றம் செய்யப்பட்டு, இராணுவத்தினரால் மூன்று நிரந்தர வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அந்தக் கிராமத்தில் பத்து வரையான குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இந்த நிலையில் புலம் பெயர் நாட்டிலிருந்து வந்த ஒருவர் இந்தப் பகுதியிலுள்ள 37 ஏக்கர் காணிக்குரிய ஆவணம் தன்னிடம் உள்ளது எனத் தெரிவித்து, துணுக்காய் பிரதேச செயலகத்தின் அனுமதியின்றி காணிக்கு வேலி அமைத்து வருகிறார். இதனால் அந்தக் காணிக்குள் வசிக்கும் ஆறு குடும்பங்களும் வீதியில் நிற்கவேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.

**புலம் பெயர் நாட்டிலிருந்து வந்த ஒருவர் இந்தப் பகுதியிலுள்ள 37 ஏக்கர் காணிக்குரிய ஆவணம் தன்னிடம் உள்ளது எனத் தெரிவித்து, துணுக்காய் பிரதேச செயலகத்தின் அனுமதியின்றி காணிக்கு வேலி அமைத்து வருகிறார்.**

சம்மந்தப்பட்டவரின் அடாத்தான செயல் துணுக்காய் பிரதேச செயலகத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் அவரை துணுக்காய் பிரதேச செயலகம் அழைத்து விசாரிக்க முற்பட்டபோதும் அவர் பிரதேச செயலகத்துக்குச் செல்லவில்லை. அவரிடம் அந்தக் காணிக்கான உறுதிப் பத்திரம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் பிரதேச செயலகத்தில் அதனை இன்னமும் அவர் உறுதிப் படுத்தவில்லை. இந்த நிலையில் தனது காணி என்று 37 ஏக்கரையும் சுற்றி தற்போது வேலியடைத்து வருகிறார்.

இந்த விடயம் தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலரிடம் கேட்ட போது அவர் தெரிவித்ததாவது:-

'37ஏக்கர் காணிக்குரிய ஆவணத்தை காணிக்குரியவர் வைத்துள்ளார். அவர் இப்போது அந்தக் காணிக்கு வேலி அமைப்பது தொடர்பாக எனக்குத் தெரியப் படுத்தவில்லை.

பாதிக்கப்பட்ட ஆறு குடும்பங்களில் ஒரு குடும்பத்திற்கு மாற்றுக்காணி வழங்கியுள்ளோம். இராணுவத்தினர் அமைத்துக் கொடுத்துள்ள மூன்று வீடுகளையும் சூழவுள்ள காணிக்கு வேலி அமைப்பதை அவர்கள் அனுமதிக்கமாட்டார்கள் என நம்புகின்றேன்.

அந்த ஆறு குடும்பங்களதும் பிரச்சினைகள் மற்றும் காணி உரிமம் தொடர்பாக பரிசீலிக்கவுள்ளோம்' - என்றார்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மக்கள், முல்லைத்தீவு அரச அதிபர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலர் ஆகியோருக்கு, தமக்கு நிவாரணம் பெற்றுத்தருமாறு கோரி மனுக்களை கையளித்துள்ளனர். (ஐ-18)

# கமநலசேவை நிலைய கட்டடம் தொடர்ந்தும் பொலிஸாரிடம்

## முழங்காவிலில் விவசாயிகள் கஷ்டத்தில்

முழங்காவில், நவ. 20

முழங்காவிலில் உள்ள கமநலசேவை நிலையக் கட்டடத்திலிருந்து பொலிஸார் இதுவரை வெளியேறவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

இதனால் பூநகரி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இரண்டு முக்கிய விடயங்கள் முன் வைக்கப்பட்டன. அதில் ஒன்று, பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயத்திலிருந்து இராணுவத்தினர் வெளியேறுவது, மற்றையது, முழங்காவில் கமநலசேவை நிலையக் கட்டடத்திலிருந்து பொலிஸார் வெளியேறுவது.

**கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இரண்டு முக்கிய விடயங்கள் முன் வைக்கப்பட்டன.**

இந்தக் கூட்டத்தில் பொலிஸ் உயரதிகாரி ஒருவர் கலந்துகொண்டு கமநலசேவை நிலையக் கட்டடத்திலிருந்து ஒரு மாதத்தில் பொலிஸார் வெளியேறுவர் என உறுதியளித்திருந்தார். எனினும் ஒரு வருடமாகும் நிலையிலும் பொலிஸார் இதுவரை அங்கிருந்து வெளியேறவில்லை.

முழங்காவில் பொலிஸ் நிலையத்துக்கென காணி ஒதுக்கப்பட்ட போதிலும் இவர்கள் தொடர்ந்து கமநலசேவை நிலையக் கட்டடத்தை பயன்படுத்துவதால் விவசாயிகளுக்கான விவசாய உள்ளீட்டுப் பொருள்களை வழங்குவது உள்ளிட்ட பல நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று கமநலசேவை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதில் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறி உள்ளனர். (ஐ-18)

# மாந்தை மேற்கில் 5 அபிவிருத்தி வேலைகள்

மன்னார், நவ.20

மாந்தை மேற்கு பிரதேச சபை ஐந்து வேலைகளை புறநெகும திட்டத்தின் கீழ் முன்னெடுத்து வருகின்றது.

ஒரு சந்தைக் கட்டட அபிவிருத்தியும் மிகுதி நான்கு வீதி அபிவிருத்தியுமாக மொத்தம் ஐந்து வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மாந்தை மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சாம் சோன் ஜெனிங்ஸ் இதனை உறுதிப்படுத்தினார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - நெல்சிப் நிதித் திட்டத்தின் ஊடாக கூடுதலாக ஒதுக்கப்படுமாயின் மேலதிகமான மக்களின் முன்னுரிமைத் தெரிவான அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்கலாம் - என்றார். (ஐ-41)



மன்னார் பிரதான பஸ் நிலைய வளாகத்தினுள் அமைந்துள்ள கடைத்தொகுதியிலிருந்து வெளியேறும் கழிவு நீரினால் சூழல் மாசடைவதைத் தவிர்க்கும் பொருட்டு, மன்னார் நகர சபையினர் அதனைச் சுத்தம் செய்கின்றனர். (ஐ-ரி)

# கிளிநொச்சி - முழங்காவில் வீதி பாவனைக்கு உதவாத நிலையில்

## நோயாளரும் பொதுமக்களும் அவதியில்

அக்கராயன், நவ. 20

முழங்காவில் மருத்துவமனையிலிருந்து 50 கி.மீ. தூரத்தில் உள்ள கிளிநொச்சி பொதுமருத்துவமனைக்கு நோயாளர்களை இடம்மாற்றுவதில் பலத்த நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு வைத்தியசாலைகளுக்கும் இடையிலான வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் அம்புலன்ஸ் வாகனம் முழங்காவிலில் இருந்து கிளிநொச்சிக்குச் செல்ல இரண்டரை மணித்தியாலங்கள் தேவைப்படுகிறது. இதனால் நோயாளர்கள் உயிராபத்தை எதிர்கொள்ளும் அபாயம் ஏற்படுகிறது.

வன்னேரிக்குளம் கிராமத்தில் வீதியின் நடுவே 3 இடங்களில் பெருங்குழிகள் காணப்படுகின்றன. இந்தக் குழிகள் நீண்டநாள்களாக நிரப்பப்படாமல் உள்ளன.

**வன்னேரிக்குளம் கிராமத்தில் வீதியின் நடுவே 3 இடங்களில் பெருங்குழிகள் காணப்படுகின்றன. இந்தக் குழிகள் நீண்டநாள்களாக நிரப்பப்படாமல் உள்ளன.**

கிளிநொச்சி அரச செயலக, பிரதேச செயலகங்களின் கூட்டங்களின் பல தடவைகள் இந்த வீதியின் நெருக்கடி தொடர்பாக எடுத்துக்கூறப்பட்ட போதும் பயன் ஏதும் கிடைக்கவில்லை.

கிளிநொச்சி நகரில் இருந்து முழங்காவில் வரையான வீதியை தற்காலிகமாகவாவது புனரமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க மாட்டார்களா என்று மக்கள் ஏங்குகின்றனர். (ஐ-18)

# பாதுகாப்பற்ற கழிவகற்றல் சிரமத்தில் மன்னார் மக்கள்

மன்னார் ,நவ.20

மன்னார் நகரப் பகுதிகளில் கழிவுப்பொருள்கள் பாதுகாப்பற்ற முறையில் சேகரிக்கப்படுவதால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தினமும் நகரின் உணவகங்கள்,மற்றும் சுற்றுப்புறங்களில் இருந்து சேகரிக்கப்படும் கழிவுப் பொருள்கள் காலை வேளையில் உழவு இயந்திரங்களில் அதிகளவுக்கு அதிகமாக ஏற்றப்படுகின்றன. இவ்வாறு ஏற்றப்படும் கழிவுப்பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களால், வீதியில் செல்வோரும், வீதியோரங்களில் குடியிருப்போரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். உழவு இயந்திரங்களில் ஏற்றப்பட்ட கழிவுகளால் துர்நாற்றம் வீசுவதாகவும் அவர்கள் முறையிட்டுள்ளார்கள்.

கழிவுப்பொருள்களை ஏற்றிய வாகனங்கள் மூடப்படாத நிலையில் வீதியோரங்களில் நீண்ட நேரங்களில் நிறுத்திவைக்கப்படுவதாகவும், கழிவுகளைக் காகங்கள் வெளியே எடுத்துவீசுவதால் வீதிகளும் அசுத்தமாகின்றன எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே மன்னார் நகரசபையினர் இதனைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பான முறையில் கழிவகற்றும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ-ரி)

# மன்னார் மாவட்டத்துக்கும் இனி சமுர்த்தி நிவாரணம்

## விரைவில் பணியாளர்களும் நியமனம்

மன்னார் ,நவ.20

மன்னாரில் முதன் முறையாக சமுர்த்தி நிவாரண திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அதற்கான அனுமதியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வழங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் அனைவருக்கும் மாதாந்தக் கொடுப்பனவு, திருமண, பிரசவ கொடுப்பனவுகள், இலகு கடன்கள், மானியங்கள் எனப் பல்வேறு சமூக நலத்திட்டங்களையும் உள்ளடக்கியதாக சமுர்த்தித்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. இருப்பினும் இது எல்லா மாவட்டங்களுக்கும் வழங்கப் படவில்லை.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் இந்தத் திட்டம் புதிதாக அறிமுகப் படுத்துவதன் மூலம் சுமார் 150 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் சமுர்த்தி சேவையாளர்கள் நியமிக்கப்படுவதோடு பிரதேச செயலாளர் பிரிவுகளில் சமுர்த்தி வங்கிகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றிற்கான பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.

இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும் என நம்பிக்கை வெளியிடப்பட்டது. (ஐ-ரி)

# கால்நடை சங்கத்துக்கு கண்காட்சியில் கௌரவம்

துணுக்காய், நவ. 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறந்த கூட்டுறவுச் சங்கமாக துணுக்காய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் தெரிவு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேசத்தில் இயங்கிவரும் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் போருக்குப் பின்னராக அதன் செயல்பாடுகளில் அபரிதமான வளர்ச்சியைக் கண்டுவருகிறது.

இதற்காக கடந்த வியாழக்கிழமை துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்ற மாகாணமட்டக் கண்காட்சியில் வைத்து விவசாய நீர்ப்பாசன காணி கூட்டுறவுத்துறை அமைச்சின் மாகாண செயலாளரினால் இதற்கான சான்றிதழை வழங்கிவைத்தார். (ஐ-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவாரி சுகாதார ஆளணியினரை நிறுத்தும் நிலையில் வலி.தெற்கு பிரதேச சபை

## சபைத் தலைவர் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.20

வலி.தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கும், சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களின் சுகாதாரத்தைப் பேணுவதற்கும் நியமிக்கப்பட்ட வெளிவாரி ஆளணியினரை நிறுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு பிரதேச சபை தள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமக்குரிய சேவைகளை வினைத்திறனுடன் வழங்குவதற்குரிய ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வேண்டும் என்று வலி. தெற்கு பிரதேச சபையின் தலைவர் தி.பிரகாஷ் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சபையின் ஆளணி வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமையால் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளோம். ஆளணி மீளாய்வு இடம்பெறுவதால் நியமனங்கள் எவையும் மேற்கொள்ளப்படலாகாது என்ற சுற்றறிக்கை அனுப்பப்பட்டு ஒன்றரை வருட காலத்துக்கு மேலாகிறது.

பிரதேச சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்ட ஆளணியினரே இன்றுவரை அதிகரித்த தேவைகளின் மத்தியில் கடமையாற்றி வருகின்றனர்.

குறித்த பதவி ஒன்றின் அமைய அடிப்படையிலும், வெளிவாரி அடிப்படையிலும் நியமிக்கப்பட்ட ஊழியர்கள், மேலதிகாரிகள் பணிக்கும் அனைத்துக் கடமைகளையும் ஆற்ற வேண்டிய நிலையில் உள்ளனர்.

பிரதேச சபையில் தற்காலிகமாகவும், வெளிவாரியாகவும் நியமிக்கப்பட்ட சுகாதாரத் தொழிலாளிகள், வேலைத் தொழிலாளிகள் போன்றோர் சாரதியாகவும், காவலாளிகளாகவும், அலுவலகப் பணியாளராகவும் கடமையாற்றுகின்றனர்.

இதனால் பணிகள் தேக்கமடைந்து பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர். எமது சபையும் தேவையற்ற விமர்சனங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கின்றது.

ஆளணி நியமனம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடிதங்கள் பல அனுப்பியும் பயன் ஏதும் இல்லை. டெங்கு நோய் பரவுதலை கட்டுப்படுத்துவதற்கும், எமது பிரதேச சபையின் சுகாதாரத்தைப் பேணுவதற்காகவும் வெளிவாரி அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஆளணியினருக்கும் அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

அவர்களைக் கூட வேலையிலிருந்து நிறுத்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் பிரதேச சபை காணப்படுகின்றது. வெற்றிடங்கள் நிரப்பப்படுமாயின் இவர்களுக்கு சபை நிதியால் வழங்கப்படும் சம்பளம் மீதமாகும். இந்தநிதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும்.

பலத்த எதிர்பார்ப்புகளுடன் வாக்களித்து உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சி அதிகாரத்தை எம்மிடம் கையளித்த மக்களின் நியாயமான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கும், தேவையற்ற விமர்சனங்களைத் தவிர்த்து சிறந்த சேவையை வழங்குவதற்கும், ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில் உரிய அதிகாரிகள் விரைவானதும் காத்திரமானதுமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று.- தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வடமாகாண உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ம.ஜெகூவிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

ஆளணி மீளாய்வு இடம்பெறுவதால் நியமனங்கள் எவையும் மேற்கொள்ள முடியாது என்று கடந்த வருடம் எமக்கு அறிவிக்கப்பட்டது.

அடுத்த வருடத்துக்கான 'பட்ஜெட்' நாடாளுமன்றில் சமர்ப்பிக்கும் பொழுது நியமனம் தொடர்பான அறிக்கை தரப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அது இன்னும் எமக்குக் கிடைக்கப்பெறவில்லை.

வடமாகாணத்தில் சபைகளில் பல்வேறு வகையான 260 பதவிகள் உள்ளன. இவற்றில் சில பதவிகள் நீக்கப்பட்டு புதிய சில பதவி நிலைகள் புகுத்தப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தவிர 160 பதவி நிலைகளாகக் குறைவடையும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. விரைவில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும் என்று தெரிவித்தார். (ம-4-5-86)

### டெங்கு ஒழிப்பு பணி மக்களிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், நவ.20

டெங்கு நுளம்பை இல்லாதொழிக்கும் பணிகள் பொதுமக்களிடம் கையளிக்கப்படவுள்ளன. இதற்கென சுகாதார அமைச்சால் பரிசோதனை அட்டைகள் அந்தந்த சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்த அட்டைகள் ஒவ்வொரு குடியிருப்பாளர்களுக்கும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் விநியோகிக்கப்படவுள்ளன.

இவர்கள் தமது குடியிருப்புக்கள் அல்லது வர்த்தக தொழில் நிலையங்களைப் பரிசோதனை செய்து டெங்கு நுளம்பு உற்பத்தி செய்யக் கூடிய தண்ணீர் தேங்கக் கூடிய பொருள்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்தி அட்டையில் பதிவு செய்ய வேண்டும்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் அந்தந்தப் பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகர்கள் வாரத்தில் ஒரு நாள் வீடு வீடாகச் சென்று அட்டையைப் பார்வையிடுவர். அத்துடன் அட்டையில் உள்ள விவரங்கள் சரியாக உள்ளதா என்று உறுதிப்படுத்துவர். (ம-9)

### சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

தென்மராட்சி, நவ 20

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை கடந்த மாதம் தொடக்கம் அதிகரித்து வருகிறது.

**தினமும் 600 இற்கும் மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுகின்றனர்.**

அண்மையில் பெய்த மழையை அடுத்து வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தினமும் 600 இற்கு மேற்பட்டோர் வெளிநோயாளர் பிரிவிலும் 30 இற்கு மேற்பட்டோர் விடுதிகளிலும் தங்கி சிகிச்சை பெறுகின்றனர்.

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் வைத்தியசாலை விடுதியில் 696 பேர் சிகிச்சை பெற்றுள்ள அதேவேளையில் ஒக்ரோபர் மாதத்தில் ஆயிரத்து 38 ஆக அந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வரை 656 பேர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி, வடமராட்சி கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இந்த வைத்தியசாலைக்கு பல்வேறு நோய்களுக்காக சிகிச்சை பெற வருவதே அதிகரிப்புக்குக் காரணம் என்று அறியமுடிகிறது. (ம-9)

### வீதியில் செல்லும் பெண்களை வழிமறித்து அசடு வழியும் 'காக்கியுடை மன்மதன்'மார்

யாழ்ப்பாணம்,நவ.20

ஊர்காவற்றுறை மற்றும் வேலணைப் பகுதிகளில் பொழுது சாயும் வேளையில் பிரதான வீதிகளில் நிற்கும் இரு காக்கியுடை தரித்த 'மன்மதராசாக்கள்' மோட்டார் சைக்கிளில் செல்லும் இளம் பெண்களை வழிமறிக்கின்றனர்.

அவர்களை வழிமறித்து சோதனை என்ற பெயரில் நீண்ட நேரம் காக்க வைத்து அசடு வழியும் இந்த இரு இளசுகளும் 'மன்மத லீலை'களைக் காட்ட முனைகின்றனர் என்று பெண்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கடமை முடிந்து வீடுகளுக்குச் செல்லும் பெண்களை சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் போன்றவற்றை கேட்டு வாங்கி நீண்ட நேரம் காக்க வைக்கின்றனர் என்று அரச உத்தியோகத்தரான ஓர் இளம் பெண் வருத்தத்துடன் தெரிவித்தார்.

இவ்வாறான நிலைமை நீடித்தால் வடக்கின் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் தாம் நேரில் முறையிடப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இரு 'மன்மதராசாக்'களும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களின் இலக்கங்களை குறித்து வைத்திருக்கிறோம் என்றும் பாதிக்கப்பட்ட பெண்கள் கூறுகின்றனர். (ஒ)

### இரும்புகளுடன் கடத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரிடம் சிக்கின

தென்மராட்சி, நவ.20

யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற லொறியை நிறுத்துமாறு பொலிஸார் சமிக்ஞை செய்தும் நிறுத்தாமல் சென்றதால், துரத்திச் சென்று லொறியை மறித்துச் சோதனையிட்ட போது, ஆறு மோட்டார் சைக்கிள்களும் இரண்டு உழவு இயந்திர அடிச் சட்டங்களும் காணப்பட்டன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

பொலிஸார் விசாரித்த போது முல்லைத்தீவிலிருந்து பழைய இரும்புப் பொருள்கள் சேகரித்துக் கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் லொறியை தீவிரமாகப் பொலிஸார் சோதனையிட்ட போது பழைய இரும்புக் குவியலுக்குள் மறைக்கப்பட்டிருந்த நிலையில் மோட்டார் சைக்கிள்களும், உழவு இயந்திர அடிச் சட்டங்களும் (செசி) காணப்பட்டன.

இதனை அடுத்து லொறியின் சாரதியையும் உதவியாளரையும் சாவகச்சேரி பொலிஸார் கைது செய்ததுடன் லொறியையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று தடுத்து வைத்துள்ளனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

### தென்மராட்சி தெற்கில் டெங்கு விழிப்புணர்வு

தென்மராட்சி, நவ.20

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு, மறவன்புலோ ஆகிய பகுதிகளில் சுகாதார திணைக்களத்தால் டெங்கு விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை சுகாதாரத் திணைக்கள பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல சேவையாளர்கள், தொண்டர்கள் ஆகியோர் வீடு வீடாகச் சென்று பரிசோதனைகளை மேற்கொண்டதுடன் விழிப்புணர்வு செயற்பாடுகளையும் மேற்கொண்டனர்.

இந்தப் பகுதியில் நெல் வயல் சூழ்ந்து இருப்பதால் டெங்கு நுளம்பின் தாக்கம் ஏற்படலாம் என்று விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

### பிரதான வீதிகள் திருத்தப்பட்டதும் குறுக்கு வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், நவ.20

வலி. மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட குறுக்கு வீதிகளின் திருத்தப் பணிகள் பிரதான வீதிகளின் திருத்தப்பணிகள் நிறைவடைந்த பின்னரே மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார் வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி. நாகரஞ்சினி ஐங்கரன்.

மூளாய் பிள்ளையார் ஆலயத்தின் அருகாக கிழக்கு நோக்கிச் செல்லும் மூளாய் மாவடி வீதியிலுள்ள தபால் பெட்டிச் சந்தியைச் சந்திக்கும் குறுக்கு வீதியின் திருத்தப் பணிகள் எப்போது மேற்கொள்ளப்படும் என்பது தொடர்பாகக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதேசசபை ஊடாக வலி. மேற்குப் பிரதேசத்தில் பிரதான வீதிகளின் கட்டங் கட்டமாக திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மிக அதிகமான வீதிகள் இன்னும் திருத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளன. பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் பொது இடங்களில் திருத்தப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றன.

மூளாய் மாவடி தபால் பெட்டிச் சந்தியின் குறுக்கு வீதி தனியாருக்குச் சொந்தமானது. இதனைத் திருத்தித் தருமாறு கடந்த மாதமே சபையிடம் மக்களால் கோரிக்கை விடப்பட்டது. எனினும் பிரதான வீதிகளின் திருத்தப்பணிகள் நிறைவடைந்த பின்னரே சபையூடாக குறுக்கு வீதிகளின் திருத்தப் பணிகள் [illegible] நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மேலும் தெரிவித்தார். (ம-14)

### சங்கானை ஆஸ்பத்திரியில் சீரற்ற நிலையில் பிரேதஅறை

யாழ்ப்பாணம், நவ. 20

சங்கானை பிரதேச வைத்தியசாலையின் பிரேத அறை உரிய வசதிகளுடன் காணப்படாமையால் சடலங்கள் பழுதடைகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சங்கானைப் பிரதேசத்தைச் சேர்ந்த 59 வயதுடைய நபர் பனையால் தவறி வீழ்ந்து உயிரிழந்திருந்தார். இவரது சடலம் சங்கானை வைத்தியசாலையில் சம்பவம் இடம்பெற்ற 14ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு சேர்க்கப்பட்டது.

எதுவித வசதிகளும் இல்லாத பிரேத அறையில் அவரது சடலம் வைக்கப்பட்டு மறுநாள் பிற்பகல் 2 மணியளவிலேயே யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப் பப்பட்டிருந்தது. சடலம் மோசமாகப் பழுதடைந்து, துர்நாற்றம் வீசும் நிலையிலேயே உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இறந்தவரின் உறவினர்கள், சங்கானை வைத்தியசாலையில் எதுவித வசதிகளுமில்லாத அறை ஒன்றில் சடலத்தை வைத்தாலேயே பழுதடைந்ததாகக் குற்றம் சாட்டினர்.

இந்த விடயம் தொடர்பாகச் சங்கானை வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்ட கேட்டபோது, தனது பெயரைத் தெரிவிக்க மறுத்த அந்த வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் ''எங்களது பிரேத அறையில் எதுவித குறைபாடுகளும் இல்லை. குளிரூட்டி மாத்திரம் தான் அங்கு இல்லை.

''அவ்வாறு எந்தவொரு சடலமும் பழுதடையவில்லை. உறவினர்கள் சும்மா தெரிவிப்பார்கள். நீங்கள் வேண்டுமானால் யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியிடம் கேட்டுப்பாருங்கள்'' என்றார்.

சடலம் ஏன் மறுநாள் அனுப்பப்பட்டது என்று கேட்டதற்கு, ''அதனை நீங்கள் நீதிமன்றத்துடன் தொடர்பு கொண்டு கேளுங்கள்'' என்று தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியிடம் கேட்ட போது:-

''சடலம் எமக்கு 15 ஆம் திகதி தான் சங்கானை வைத்தியசாலையால் அனுப்பி வைக்கப்பட்டது. சடலம் பழுதடைந்த நிலையிலேயே வந்தது'' -என்றார். (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கம்போடியத் தலைநகர் நாம்பெனுக்குச் சென்ற பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அந்நாட்டுக் குழந்தைகள் பாரம்பரிய முறைப்படி வரவேற்பளித்தனர். அருகில் அவரது பாரியார்.

## இஸ்ரேல்—பலஸ்தீனம் இடையே உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்குக

### இந்தியா வலியுறுத்தல்

டில்லி, நவ.20

காஸா பகுதியில் அதிகரித்து வரும் போர்ச்சூழலை இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் தவிர்த்து, இரு நாடுகளும் நேரடிப் பேச்சை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று இந்தியா கேட்டுக்கொண்டுள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் கடந்த ஞாயிற்றுக் கிழமை இதுகுறித்து தெரிவித்ததாவது:-

அமைதி மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில், காஸா பகுதியில் நடைபெற்றுவரும் தாக்குதல் குறித்து இந்தியா கவலை கொண்டுள்ளது.

போர் நடவடிக்கைகளை இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளும் தவிர்ப்பதுடன், அதிகபட்ச கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து, தாமதிக்காமல் நேரடிப் பேச்சை ஆரம்பிக்க வேண்டியது அவசியம்.

பலஸ்தீனப் பிரச்சினை குறித்து ஐ.நா. பாதுகாப்பு சபையில், கடந்த 14ஆம் திகதி இந்தியா தலைமையில் நடந்த அவசர கூட்டத்தில், காஸா பகுதியில் அதிகரித்து வரும் பதற்றத்தை தணிக்கும் வகையில், தாக்குதலை உடனடியாக நிறுத்தும்படி வலியுறுத்தப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார். (வ)

# இந்திய – சீன உறவு வலுவான நிலையில்

### கம்போடியா சந்திப்பின் பின்னர் இருநாட்டு தலைவர்கள் அறிவிப்பு

சீனாவில் அடுத்த ஜனாதிபதிக்கான தேர்தல் நடைபெற்றிருக்கும் நிலையில் வரும் மார்ச் மாதம் வரையில் சீன அரசுக்கு அடுத்த தலைவர் தெரிவு செய்யப்பட்டாலும் இந்த நட்புறவு நீடிக்கும்

சீன ஜனாதிபதி வென் ஜியாபோவின் உறுதியான ஆழமான விசாலமான நட்புறவு இரு தரப்பு உறவுகளையும் மேம் படுத்த உதவின என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார். மேலும் இந்திய- சீனா உறவுகள் வலுவாக உள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தென்கிழக்காசியான் மாநாட்டில் கலந்துகொள்ள கம்போடியா சென்றிருக்கும் மன்மோகன் சிங், சீன ஜனாதிபதி வென் ஜியாபோவைச் சந்தித்துப் பேசினர்.

நேற்றுக் காலை இந்த சந்திப்பு குறித்துப் பேசிய சீனஜனாதிபதிவென்ஜியாபோ, கடந்த 8 வருடங்களில் 14 முறை மன்மோகன் சிங்குடன் நட்புறவில் சந்தித்துள்ளதாகவும், இரு தரப்புக்கும் இடையில் நல்ல சூழலும் நட்புறவும் நிலவுவதாகவும் தெரிவித்தார்.

இது இரு பெரிய நாடுகளின் மக்களிடமும் பிரதிபலிப்பதாகவும் வென் ஜியோபோ குறிப்பிட்டார்.

தற்போது சீனாவில் அடுத்த ஜனாதிபதிக்கான தேர்தல் நடைபெற்றிருக்கும் நிலையில் வரும் மார்ச் மாதம் வரையில் சீன அரசுக்கு அடுத்த தலைவர் தெரிவு செய்யப்பட்டாலும் இந்த நட்புறவு நீடிக்கும் என்றார்.

இதையடுத்து பிரதமர் மன்மோகன் சிங், வென்னின் உறுதியான ஆழமான விசாலமான நட்புறவு இரு தரப்பு உறவுகளையும் மேம்படுத்த உதவினஎன்று கூறினார்.

குறிப்பாக, 2005, 2010 ஆகிய ஆண்டுகளில் வென்னின் இந்தியப் பயணங்களைக் குறிப்பிட்ட மன்மோகன் சிங், இந்தப் பயணங்கள் சீன இந்திய உறவை வலுப்படுத்த உதவின.

2005 ஆம் ஆண்டு முதல் முறை வந்தபோது, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு வலுவானது, 2010ஆம் ஆண்டில், இரு தரப்பு உறவின் 60ஆம் ஆண்டு விழாவாக அது அமைந்தது என்று குறிப்பிட்டார். (வ)

## மிரட்டுகின்றனர் நித்தியின் சீடர்கள்

### மதுரை ஆதீனம் முறைப்பாடு

ஆரணி, நவ.20

சர்ச்சைக்குரிய நித்தியானந்தாவின் சீடர்களால் தமக்குத் தொடர்ந்து மிரட்டல்விடுக்கப்பட்டுவருவதாக மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் முறைப்பாடு தெரிவித்தார். இதுகுறித்து ஆரணியில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:-

அருணகிரிநாதர், நித்தியானந்தாவை நியமித்து, நீக்கி பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டும் என்பது இறைவனின் கட்டளை. நித்தியானந்தாவால் பிரச்சினை இல்லை. ஆனால் அவரது சீடர்களால் அச்சுறுத்தல் இருக்கிறது.

மீண்டும் இளைய ஆதீனமாக தற்போது யாரையும் நியமிக்கப் போவது இல்லை. மதுரை ஆதீன மடத்தை அரசு கையகப்படுத்தலாம். தமிழக முதல் வரைப் பொறுத்தவரை சிறப்பான ஆட்சி நடத்துகிறார். போதுமான மின் உற்பத்தி இல்லாததால்தான் அவரால் மின்சாரத்தை கொடுக்க முடியவில்லை-என்றார்.(வ)

## கூடங்குளத்தில் டிசெ.15 இல் மின்சார உற்பத்தி ஆரம்பம்

### மத்திய இணையமைச்சர் தெரிவிப்பு

புதுச்சேரி, நவ.20

கூடங்குளம் அணுமின் நிலையத்தில், எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதி மின்சார உற்பத்தி ஆரம்பிக்கப்படும் என்று மத்திய இணையமைச்சர் நாராயணசாமி தெரிவித்தார். இது குறித்து அவர் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

கூடங்குளம் அணு மின் நிலையத்தில், கடந்த ஒக்ரோபரில் யுரேனியம் நிரப்பி, மின் உற்பத்திக்கான பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதை, உலக அளவிலான அணு சக்திக் கழக அதிகாரிகளும், எமது நாட்டின் அணுமின் கழக அதிகாரிகளும் பார்த்து, அனுமதி அளித்துள்ளனர். ஜேர்மன் தொழில்நுட்ப நிபுணர்கள் மேற்பார்வை யில் உயர் அழுத்த சக்தி கொண்ட வெப்பக் காற்று செலுத்தப்பட்டு, பரிசோதனை நடைபெற்று வருகிறது. எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதி கூடங்குளத்தில் மின்சார உற்பத்தி ஆரம்பிக்கும் சூழ்நிலை உள்ளது. முதல் அணு உலையில், 100 சதவீத மின் உற்பத்தி செய்வ தற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன-என்றார். (வ)

## நீர்தேக்கத்தொட்டி இடிந்து விழுந்தது

### 14 பேர் உயிரிழப்பு

மத்திய பிரதேச மாநிலத் தலைநகர் போபாலில் நீர்த்தேக்கத் தொட்டி இடிந்து விழுந்ததில் 14 பேர் உயிரி ழந்தனர்.

தலைநகர் போபாலில் நீர்த்தேக்கத் தொட்டி அமைந்திருந்த பகுதியில், திடீரென பலத்த சத்தம் கேட்டு மின் இணைப்பு துண்டிக்கப் பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அந்தப்பகுதி மக்கள் வெளியே வந்து பார்த்த போது நீர்த்தேக்கத் தொட்டி இடிந்து விழுந்துள்ளது.

இந்தச்சம்பவத்தில் 50 வீடுகள் சேதமடைந்துள் ளதாகக் கூறப்படுகிறது. இடிபாடுகளில் பலர் சிக்கி யிருக்க கூடும் என்றும் அஞ்சப்படுகிறது. மீட்கப்பட்ட அனை வரும் மருத்துவமனையில் அனும திக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு மீட்புப் பணிகள் தீவிரமாக நடை பெற்று வருகின்றன. (வ)

## 'உலகம் சுற்றும் வாலிபன்' நான்!



ஆட்சியில் இருக்கும் போது உலகம் சுற்றும் தலைவர்களில் ஒபாமாவும், மன்மோகன்சிங்கும் அரை சதத்தைத் தொட்டுள்ளனர். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தனது பதவிக் காலத்தில் 50 நாடுகளுக்கு சென்றுள்ளார். இதில் ஒபாமா 50 ஆவது பயணமாக கம்போடியா சென்றடைந்துள்ளார். அதேபோன்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தற்போது பயணமாக கம்போடியாவுக்குச் சென்றுள்ளதன் மூலம் 47 நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

இருவரும் கம்போடியாவில் நடைபெறவுள்ள ஆசியான் மற்றும் கிழக்கு ஆசிய உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளனர். (வ)

## இந்தியர்களின் கறுப்புப் பணம் குறித்து சுவிஸ் வருவாய் துறையை நாடிய இந்தியா

இந்தியர்களின் கறுப்புப் பணம் பற்றிய இரகசிய கணக்குகள் பற்றி தகவல்களைப் பெறுவதற்காக சுவிற்ஸர்லாந்து வருவாய் துறை அதிகாரிகளை இந்தியா அணுகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சுவிஸ் வங்கிகளில் கறுப்புப் பணம் வைத்திருக்கும் தொழிலதிபர்கள் பட்டியலை ஊழலுக்கு எதிரான இந்தியா இயக்கத்தின் தலைவர் அர்விந்த் கேஜ்ரிவால் அண்மையில் வெளியிட்டார்.

இதையடுத்து 700 பேரின் இரகசியக் கணக்கு விவரங்கள் குறித்து இந்திய வரித்துறையினர் ஆய்வு செய்ததுடன், இதில் 80 பேர் சட்டத்துக்குப் புறம்பாக, ரூபா 435 கோடி ரூபாவை வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைத்திருப்பதை உறுதி செய்தனர்.

இதற்கிடையே சுவிற்ஸர்லாந்து வருவாய்த் துறை அதிகாரிகளை இந்திய வரித்துறையினர் நாடியி ருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியா- சுவிற்ஸர்லாந்து இடையிலான இரு வழி வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்தின் கீழ் உள்ள விதியொன்றின் படி, சுவிஸ் வங்கிகளில் பணம் போட்டு வைத்திருக்கும் இந்தியர் ஒருவரின் பெயர், விலாசம், இரகசியக் கணக்கு எண்ணையோ அல்லது, குறிப்பிட்ட கணக்கில் உள்ள தொகை குறித்த விவரத்தை இந்தியா கோரிக்கை விடுத்தால் சுவிஸ் வங்கிகள் அதற்கு பதில் அளிக்க வேண்டும் [illegible] உள்ளது குறிப்பிடத்தக்கது.

## காங்.வேட்பாளர்களைத் தெரிவு செய்ய தந்தையின் பாணியில் தனயன் ராகுல்

### பல மாநிலங்களுக்கும் 'ஒற்றர்'கள் படையெடுப்பு



டில்லி, நவ.20

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பணியில் ராகுல் காந்தி ரகசியமாக ஈடுபட்டிருப் பதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக ராகுல் அண்மையில் நியமிக்கப்பட்டார். அவர்தற்போது தனது தந்தை ராஜீவ் மற்றும் சிறிய தந்தை சஞ்சய் காந்தி கடைப்பிடித்த முறையில் வேட்பாளர் தெரிவில் இறங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

உத்தேச வேட்பாளர் [illegible] மற்றும் அரசியல் வாழ்க்கை குறித்த தகவல்களைச் சேகரிப்பதற்காக பல்வேறு மாநிலங்களுக்கும் தனது நம்பிக்கைக்குரிய தலைவர்களை அனுப்பி வைப்பது ராஜீவின் வழக்கம். அதே பாணியில் ராகுலும் தனது நம்பிக் கைக்குரிய நபர்களை ஒற் றர்கள் போல் பல மாநிலங் களுக்கும் அனுப்பிஉள்ளார்.

அவர்கள் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் குறித்தும் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் குறித்தும் தகவல்களைச் சேகரித்து ராகுலுக்கு அனுப்புவார்கள். இதேபோல் ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள இளம் சட்ட சபை உறுப்பினர்கள், உத்தேச வேட்பாளர் பட்டியலைத் தயாரித்து அளிப்பர். அவற்றின் அடிப்படையில் இறுதி வேட்பாளர்களை ராகுல் தெரிவு செய்வார் என்று அந்தக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கராச்சியில் குண்டு வெடிப்பு; 3 பேர் சாவு




கராச்சி, நவ.20
பாகிஸ்தானில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் சிக்கி 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

பாகிஸ்தான்,கராச்சி நகருக்கு அருகிலுள்ள அப்பாஸ் நகரில் நேற்றுமுன்தினம் மாலை சக்திவாய்ந்த குண்டு ஒன்று வெடித்தது. மசூதி அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் இருந்த குண்டுகளே வெடித்தன. 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 15 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தக் குண்டுகள் 5 கிலோ எடை கொண்டவை எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் குண்டுவெடிப்பு ஷியா-சன்னி முஸ்லிம்களிடையே நடந்துவரும் மோதல்களுடன் தொடர்புடையதாக இருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## 34 மாடிக் கட்டடத்தில் பயங்கரத் தீ விபத்து



துபாயில் ஜுமிரா லேக் டவர்ஸ் என்ற 34 அடுக்குகள் கொண்ட கட்டடத்தில் நேற்றுமுன்தினம் பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டது. உடனடியாக கட்டடத்தில் தங்கியிருந்தவர்கள் வெளியேற்றப்பட்டனர். இதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் கட்டடத்தில் இருந்த பொருள்கள் தீயில் கருகி நாசமாயின. இந்த விபத்து குறித்துப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## பாகிஸ்தான் விமானத்தில் தீ; உயிர்தப்பினர் பயணிகள்

பாகிஸ்தான் விமானத்தில் திடீரென தீ ஏற்பட்டதை தொடர்ந்து விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

பாகிஸ்தானில் கராச்சி ஜின்னா விமான நிலையத்தில் இருந்து லண்டன் புறப்பட்ட விமானமே இவ்வாறு தீப்பிடித்தது. விமானம் மேலேழும்பிய சிறிது நேரத்தில் விமானத்தின் பின்புறத்தில் தீப்பிடித்து எரிந்துள்ளது.

இதையடுத்து விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டு தீ அணைக்கப்பட்டது. அதிர்ஷ்டவசமாக பயணிகள் அனைவரும் உயிர் தப்பினர்.

# பங்களாதேஷில் தீ விபத்து

### 4 குழந்தைகள் உட்பட 11 பேர் சாவு

டாக்கா, நவ. 20
பங்களாதேஷ் தலைநகர் டாக்காவுக்கு அருகே உள்ள சாண்டி நகரின் குடிசைப் பகுதியில் திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டது. இதில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர்.

இந்தப் பகுதியில் கூலித் தொழிலாளர்களே அதிகமாக வசிக்கிறார்கள். நேற்றுமுன்தினம் காலை திடீரென குடிசைகள் தீப்பிடித்து எரிந்தன. இதில் 500இக்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து சாம்பலாயின. இதில் 5 பெண்கள், 4 குழந்தைகள் என 11 பேர் உயிரிழந்தனர். பெரும்பாலான குடிசைகள் தீயில் முற்றாக எரிந்து நாசமாகிவிட்டன.



விபத்துக்கான காரணம் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இஸ்ரேலின் தாக்குதலை நிறுத்தக் கோரி கனடாவில் பேரணி

காஸா மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களை நிறுத்தக்கோரி கனடாவில் உள்ள இஸ்ரேல் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

பலஸ்தீனத்தின் காஸா பகுதி மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல்களை நடத்தி வருகின்றது. இந்தத் தாக்குதல்களில் குழந்தைகள் உட்பட பலர் கொல்லப்பட்டு வருகின்றனர்.


இஸ்ரேலின் காஸா மீது நடத்தும் தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பல நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள் நடந்து வருகின்றன.

இந்தநிலையில் கனடாவில் உள்ள பலஸ்தீனர்களும், இஸ்ரேலியர்களும் தத்தமது நாடுகளில் அமைதி திரும்ப வேண்டும் என்று பேரணி நடத்தினர்.

கனடாவில் உள்ள இஸ்ரேல் தூதரகத்திற்கு முன்பாக நடந்த பேரணியில், ''பலஸ்தீன மக்களை கொல்லாதே'', ''அநியாயம் செய்யாதே'' போன்ற பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் கோஷமிட்டனர்.

# பலஸ்தீனம் மீதான தாக்குதலை எந்தவேளையும் நடத்தத் தயார்

எல்லையில் நேருக்கு நேர்...



காஸா எல்லைப் பகுதியில் இஸ்ரேல் படையினரை நோக்கிக் கல்வீச்சு நடத்தும் பலஸ்தீன இளைஞர்கள் இருவர்.

### இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு

**இஸ்ரேல் நேற்றுமுன்தினம் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர். காஸா வீதிகள் அனைத்தும் பெரும்பாலும் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.**

அல்அவிஸ், நவ.20
பலஸ்தீனத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எந்த வேளையிலும் தாக்குதலை ஆரம்பிக்க நாம் தயார் என்று அறிவித்துள்ளார் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு.


பலஸ்தீனத்தின் காஸா பகுதி மீது இஸ்ரேல் தொடர்ந்து 5 ஆவது நாளாக வான்வழி தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதல்களில் இதுவரை 52 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையிலேயே பலஸ்தீனத்தின் மீது தாக்குதல் நடத்த சகல ஏற்பாடுகளும் தயார் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கையை ஜேர்மன் ஆதரித்துள்ளது. எதிரிகளிடமிருந்து பாதுகாத்து கொள்ளவே இஸ்ரேல் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பலஸ்தீனத்தின் மீது நடத்தப்பட்டு வரும் வான்வழி தாக்குதலை இஸ்ரேல் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று எகிப்து ஜனாதிபதி முகமது முர்சி கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தநிலையில் இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் நடத்தப் பயன்படுத்தும் ஏவுகணைகள் ஈரானில் தயாரிக்கப்பட்டவை என்று இஸ்ரேல் குற்றம்சாட்டியுள்ளது. ஆனால் அந்தக் குற்றச்சாட்டை ஈரான் மறுத்துள்ளது.



## 5 வயது சிறுவர்களின் தற்கொலை படையணி

### அல்–குவைதாவின் படங்களும் வெளியீடு

பாகிஸ்தானில் உள்ள வடக்கு வாஸிரிஸ்தான் பகுதியில் சுமார் 5 வயதுச் சிறுவர்களைத் தற்கொலைப் படையினராக அல்குவைதா மாற்றும் படங்கள் வெளியாகியுள்ளன.

கொல்லப்பட்ட அல்குவைதா அமைப்பினரின் ஆதரவற்ற குழந்தைகளுக்கு, தந்தையர் வழியிலேயே அவர்களும் செல்ல வேண்டும் என்று கட்டளையிடப்படுகிறது. அவர்கள் மூளைச் சலவை செய்யப்பட்டு, அவர்களுக்கு குண்டு வெடிப்பு பயிற்சி தரப்படுகிறது. இந்தத் தகவலை வெளியிட்டுள்ள பத்திரிகையொன்று, அது தொடர்பான புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளது.

''தலிபான்களுக்காகப் போராடும் கூலிப் படையினரைத் தயார் செய்து அனுப்பும் அமைப்பாக அல்குவைதா மாறியுள்ளது. கடந்த 20 வருடங்களில் 200இக்கும் மேற்பட்ட தீவிரவாதச் சதிச் செயல்கள் இந்த அமைப்பினால் நிகழ்த்தப் பட்டுள்ளன என்று தீவிரவாதம் குறித்த ஆய்வுப் பிரிவின் தலைவர் நீல் டோய்ல் தெரிவித்துள்ளார்.

# ஓரினச் சேர்க்கையாளருக்கு 'பச்சைக்கொடி' எதிர்த்து பிரான்ஸ் மக்கள் போராட்டம்

பரிஸ், நவ.20
பிரான்ஸில் ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமணம் செய்து கொள்வதை ஆதரிக்கும் வகையில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

இதை எதிர்த்து மக்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

பிரான்ஸ் நாட்டிலேயே ஓரினச் சேர்க்கையாளர்கள் அதிகம் உள்ளனர். இவர்கள் தங்கள் திருமணத்துக்கு அங்கீகாரம் கோரி நீண்டகாலமாக போராடி வந்தனர். இதையடுத்து இவர்களது திருமணத்தை அங்கீகரிக்கும் வகையில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது ஓரினச் சேர்க்கையாளர்கள் குழந்தையை தத்தெடுத்து வளர்க்கவும் அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டம் நடத்தினர். இவர்கள் ''ஒரு குழந்தைக்கு ஒரு தாயும், ஒரு தந்தையும் தான்'' என்று முழக்கமிட்டனர். தலைநகர் பாரிஸில் மட்டும் 15,000 இற்கும் மேற்பட்ட மக்கள் கூடி போராட்டம் நடத்தினர்.

இப்போராட்டத்தில் இளைஞர்களே அதிகம் பங்கேற்றனர்.

இதற்கிடையே இவர்களை எதிர்த்து ஓரினச் சேர்க்கையாளர்களும் போராட்டம் நடத்தினர்.



மியன்மாருக்கு பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, மியன்மார் யாங்கோன் சர்வதேச விமான நிலையத்தில் பூக்கொத்து கொடுத்து வரவேற்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறுதலாக வெளியாகிவிட்ட தலிபான் ஆதரவாளர் பட்டியல்

தலிபான் பயங்கரவாத அமைப்பினர் தங்களுக்கு நெருக்கமானவர்களின், மின்னஞ்சல் முகவரிகளைத் தவறுதலாக வெளியிட்டு விட்டனர்.

ஆப்கானிஸ்தானில் ஆட்சியை இழந்த தலிபான்கள், பாகிஸ்தான்- ஆப்கன் எல்லைப் பகுதிகளில் பதுங்கியுள்ளனர். இவர்கள் ஆப்கனில் பல்வேறு தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தலிபான்கள் தங்கள் ஆதரவாளர்களின் இரகசிய முகவரிகளை தவறுதலாக மின்னஞ்சலில் வெளியிட்டு விட்டனர்.

தலிபான் தகவல் தொடர்பாளர் யூசுப் அகமதி என்பவர் வழக்கமாக தலிபான்களின் செயல்பாடுகள் குறித்த தகவல்களை, தங்கள் ஆதரவு பத்திரிகையாளர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்புவார்.

இப்படி அவர் அனுப்பும் போது, தவறுதலாக தங்கள் ஆதரவாளர்களின் 400 பேர் விலாச பட்டியலையும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி விட்டார். இதனால் தலிபான் ஆதரவாளர்களின் விலாசங்கள் வெட்ட வெளிச்சமாகி விட்டன. ஆப்கனில் பல்வேறு மாகாண ஆளுநர்கள், சட்டசபை உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்டோர் தலிபான் ஆதரவாளர்கள் பட்டியலில் இருப்பது தற்போது தெரிய வந்துள்ளது.

# நிறுத்துங்கள் தாக்குதல்களை

## ஹமாஸ், இஸ்ரேலிடம் பான் கீ-மூன் வலியுறுத்து



ஹமாஸ் அமைப்பினரும், இஸ்ரேலும் உடனடியாகத் தாக்குதல்களை நிறுத்த வேண்டும். மோதல்களை உடனடியாக முடிவுக்கு கொண்டு வந்து அங்கு போர் நிறுத்தத்தில் ஈடுபட வேண்டும் என்று ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பான் கீ-மூன் வலியுறுத்தியுள்ளார்.

இரு தரப்பினருக்கும் இடையிலான மோதல் ஆறாவது நாளாக நீடித்து வருகின்ற நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

"இந்த வன்முறைகளை உடனடியாக முடிவுக்கு கொண்டு வர வேண்டும். இரு தரப்புகளுக்கும் இடையிலான போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பில் எகிப்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் நானும் கலந்து கொள்ளவுள்ளேன்'' என்றும் ஐ.நா. பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# மியன்மார் சென்றார் ஒபாமா

## மக்கள் உற்சாக வரவேற்பு



ரங்கூன், நவ.20

இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மியன்மாருக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணம் ஒன்றை மேற்கொண்டு நேற்று அங்கு சென்றடைந்துள்ளார்.

அவருடன் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளிங்டனும் சென்றுள்ளார். இந்த இருவருக்கும் மியன்மாரில் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

வீதிகளுக்கு இருமருங்கிலும் உள்ள மதில்களில் ''ஒபாமாவே வருக'' என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது. ஒபாமாவின் புகைப்படம் பொறிக்கப்பட்டிருந்த ரி சேர்ட்டுக்கள் வியாபார நிலையங்களில் தொங்கவிடப்பட்டிருந்தன. அது மட்டுமன்றி அமெரிக்கக் கொடிகள் விமான நிலையம் முதல் பிரதான நகரங்களில் ஏற்றிவைக்கப்பட்டிருந்தன.

ஜனாதிபதி பராக் ஒபாமா மியன்மார் ஜனாதிபதி தெய்ன் செய்னை சந்தித்து இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பில் பேச்சு நடத்தியுள்ளார்.

மியன்மார் ஜனாதிபதியை சந்திப்பதற்காக ஜனாதிபதி பராக் ஒபாமாவின் வாகனத் தொடரணி சென்ற வீதிகளின் இருமருங்கிலும் குழுமியிருந்த மக்கள் அமெரிக்க தேசியக்கொடியை அசைத்து வரவேற்றனர்.

இதேவேளை, ஜனநாயகத்தை ஆதரிக்கும் தலைவரான ஆங் சான் சூகியை சந்தித்து பராக் ஒபாமா பேச்சு நடத்தியதுடன், ரங்கூன் பல்கலைக்கழகத்திலும் அவர் விசேட உரை ஒன்றையும் ஆற்றவுள்ளார்.

மியன்மாரில் 2010ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இராணுவ ஆட்சியின் இறுதியிலிருந்து மியன்மார் ஜனாதிபதி தெய்ன் செய்னினால் முன்வைக்கப்பட்ட சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் அமெரிக்க ஜனாதிபதியின் இந்த பயணம் அமைந்துள்ளது.

## உயிரிழந்த நிலையில் 5 சிறுவர் குப்பைத் தொட்டியிலிருந்து மீட்பு



சீனாவில் தென்மேற்குப் பகுதியில் சிறுவர்கள் ஐந்து பேர் குப்பை தொட்டியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் வீதிகளில் வசித்த ஐந்து சிறுவர்களே இவ்வாறு உயிரிந்துள்ளனர். ''சிறுவர்கள் அனைவரும் சுமார் 10 வயது மதிக்கத்தக்கவர்கள். குளிர்தாங்க முடியாமல் குப்பை தொட்டிக்குள் இறங்கியுள்ளனர். இவர்கள் மூச்சுத் திணறி இறந்திருக்கலாம்'' என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பூமிக்குத் திரும்பினர் சுனிதா குழுவினர்

## கசகஸ்தானில் தரையிறக்கம்

அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் வெற்றிகரமாக பூமிக்கு திரும்பினார்.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், ஆஸ்திரேலியா உட்பட பல நாடுகள் ஒன்றிணைந்து பூமிக்கு மேல் விண்வெளியில் சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைத்துள்ளன.

இந்தச் செயற்கை விண்வெளி நிலையத்தில் விண்வெளி வீரர்கள் தங்கி ஆய்வு மற்றும் பராமரிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

விண்வெளியில் 125 நாள்கள் தங்கியிருந்து பல்வேறு பணிகளை மேற்கொண்ட சுனிதா வில்லியம்ஸ், சோயூஸ் விண்கலத்தின் மூலம் பூமிக்கு நேற்றுமுன்தினம் திரும்பினார். இவருடன் ரஷ்ய மற்றும் ஜப்பானிய விண்வெளி வீரர்களும் கசகஸ்தானில் தரையிறங்கினர்.


## ஆறாம் ஆண்டின் நினைவலைகள்



தோற்றம்
23.05.1929

மறைவு
20.11.2006

ஆயுள்வேத வைத்தியர்
லயன் பேதுரு பிலிப்ஸ்

சித்தர்கள் வழிமுறையில் சித்திபெறு வித்தகனாய்
முத்திரையே பதித்திட்ட முத்தே - வைத்தியனாய்
எங்கும் பெருமையுறும் எங்களுக்கோர் நிழலாக
தங்கமான வாழ்வு தந்த தந்தை

பண்புடன் வளர்த்தீர்
பாசமழை பொழிந்தீர்
பாரெங்கும் புகழ்பரவச் செய்தீர்
பாசமிகு உறவுகள் என்றும் போற்றுகின்றோம்.

நி.மு:- வைத்தியசாலை வீதி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
த.மு:- நவாலி தெற்கு,
மானிப்பாய். (25605)(2.6.7)

குடும்பத்தினர்.

## Computer விற்பனைக்கு

P.4 Samsung (New Key-board, Mouse) free Webcam, Headphone price 16500.00
Contact: 0757601881
(25608)(6-7)

## வீடும் காணியும் விற்பனைக்கு

நல்லூர் முருகன் ஆலயத்துக்கு அண்மையில் பண்டாரக்குள ஒழுங்கையில் 3 ½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:0776016357
(25378)(5-7-6)

## மினிபஸ் விற்பனைக்கு

பாவனையிலுள்ள மிற்சுபிசி ரோசா, 29 -xxxx இலக்கம் கொண்ட மினிபஸ் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 8153 187
(25488)(5.6.7)

## The Royal College of Jaffna

சுலபமாகவும், சரளமாகவும் ஆங்கிலத்தில் கதைக்கப்பயில By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி (18 வருட அனுபவம்)
426, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
ரிளாக்வீதி, சுங்கானை: 077 675 1649
(25470)(3.14)

## காணி விற்பனைக்கு

கச்சாய் கோயில் பற்று வெள்ளாம்போக்கட்டியில் (பூசாரி தோட்டம்) 60பரப்பு தென்னந் தோட்டக்காணி விற்பனைக்குண்டு.
(பகுதிகளாகவும் விற்கப்படும்)
தொடர்பு:077 640 5490, 021 490 1605
(21591)(5-7-6)

## பெயர் மாற்றம்

குலேந்திரன் சிவகாமன் ஆகிய எனது மகனின் பெயரை இன்றில் இருந்து குலேந்திரன் சிவகணேசன் எனப்பெயர் மாற்றம் செய்துள்ளேன் என இத்தால் அறியத்தருகின்றேன்.
கனகப்பிள்ளை குலேந்திரன்
இல.3,செட்டித்தெரு, நல்லூர்.
(25606)(5-7-6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
சிவராஜா குணபூஷணி
திதி: சஷ்டி வளர்பிறை

மலர்வு
31.08.1959

உதிர்வு
21.10.2012

ஒரு மாத காலம் ஓடிப் போனதுவோ அம்மா!
உங்களின் பிரிவுத் துயர் ஆற்றுவாரில்லையே!
கண்ணீரின், அலைகள் கரை மீறுகின்றனவே!
விழி மூடித் தூங்க முடியாது
வேதனையால் தவிக்கின்றோம் அம்மா!
மீண்டுமோர் பிறவி எடுத்து
வாருமம்மா எமக்குத் தாயாய்!

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி. (25497)(45.6.7)

குடும்பத்தினர்.

## நீங்காத நினைவில் ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு
02.02.1940

இறப்பு
01.12.2011

திதி : ஸப்தமி

அமரர்
சிவசம்பு செல்வராஜா

எங்கள் அன்பு அப்பாவே - நீங்கள்
எங்களை விட்டுப் பிரிந்து சென்று ஓராண்டு காலம் சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டு அகலாது அப்பா
அன்பு மனைவி கிளியையும் அருமை மகன்மாரையும் ஆசை
மகளையும் விட்டு எங்கு சென்றீர் உமது ஆத்மா சாந்தி அடைய
நல்லூர்க் கந்தனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!


3ஆம் கட்டை,
பருத்தித்துறை வீதி,கல்வியங்காடு.

மனைவி,
பிள்ளைகள்.
(25491)(5-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(34)



நாம் எந்த வேலையில் இருந்தாலும் அதில் நாம் முதன்மையாக விளங்க வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும். மற்றவர்களின் நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெறமுடியும். வாழ்க்கையில் நமக்கென்று ஒரு லட்சியம் வேண்டும். அதை அடைய நாம் முயற்சி செய்ய வேண்டும்.

டாக்டராக வேண்டும் என்று ஆசைப்பட்டால், அதற்காகப் படித்து, முதல் மார்க் வாங்க வேண்டும். இஞ்ஜினியராக வேண்டும் என்ற இலட்சியம் இருந்தால் அதற்கான படிப்பை மேற்கொள்ள வேண்டும். நாம் சுதந்திரமானவர்கள். யாருக்கும் எப்போதும் அடிமைகளல்லர். ஆகையால் நாம் என்ன செய்ய வேண்டும், எப்படிப்பட்ட தொழிலில் இறங்க வேண்டும் என்று நாமே முடிவு செய்து கொண்டு, அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் நாம் ஏதாவது ஒரு இலட்சியத்தை அடையாவிட்டால், நாம் வாழ்ந்து என்ன பயன்?

தோல்விகள் ஏற்பட்டாலும் அந்த முயற்சியைக் கைவிடக்கூடாது. மீண்டும் மீண்டும் முயற்சிக்க வேண்டும். நாம் அப்படித் தொடர்ந்து முயற்சிகள் செய்யும்போது, நமது உடலும் மனமும் மேலும் சுறுசுறுப்புடன் இயங்குகின்றன.

நாம் நமது முயற்சிகளைக் கைவிட்டு விட்டால், தோல்வியைச் சந்திப்பது உறுதி. நமது உடலும் உள்ளமும் பெட்ரோல் இல்லாத காரைப்போல் செயலற்று விடும்.

தோமஸ் அல்வா எடிஸன் மாபெரும் விஞ்ஞானி. அவர் கண்டுபிடிப்புக்களால்தான் நாம் இன்று விஞ்ஞான உலகில் வாழ்ந்து வருகிறோம். அவரைப் பார்த்து ஓர் இளைஞர் கேட்டார்: 'எனக்கு உங்கள் அறிவுரை என்ன?'

எடிஸன் சொன்ன பதில். ''இளைஞனே, எப்போதும் நீ கடிகாரத்தைப் பார்க்காதே!''

ஒரு வேலையில் இறங்கிவிட்டால் நாம் நேரம் ஆகிவிட்டதா, அத்துடன் நிறுத்திக்கொள்ளலாமா என்று அடிக்கடி கடிகாரத்தைப் பார்க்கக்கூடாது என்பதே அவர் அறிவுரை. அப்படி கடிகாரத்தைப் பார்ப்பவர்களுக்கு வேலையில் எந்தவித ஊக்கமும் இல்லை என்பதே பொருள்.

டாக்ஸி சாரதி ஒருவன் மிகவும் மகிழ்ச்சியுடன் எப்போதும் காணப்பட்டான்.

அவனுடைய டாக்ஸியில் போக ஏகப்பட்ட பேர்கள் விரும்பினார்கள். சிரித்த முகத்துடன் வரவேற்பான். அமைதியாக அடக்கமாகப் பதில் சொல்வான். மீற்றர் கட்டணத்துக்கு மேல் காசு வாங்க மாட்டான். போக வேண்டிய இடத்துக்கு சரியான வழியில் அழைத்துச் செல்வான். அவனிடம் ஒரு பணக்காரர் கேட்டார். ''நீ இவ்வளவு மகிழ்ச்சியாக இருப்பதற்குக் காரணம் என்ன? டாக்ஸி ஓட்டும் வேலை உனக்கு மிகவும் பிடித்திருக்கிறது இல்லையா?''

டாக்ஸி சாரதி சிரித்துக்கொண்டே சொன்னான். ''எனக்குப் பிடித்தது டாக்ஸி ஓட்டும் வேலை அல்ல. டாக்ஸியில் பயணம் செய்பவர்களை மிகவும் பிடித்திருக்கிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி. அவர்களைச் சந்திப்பதில், அவர்களுக்கு உதவி செய்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்''

எத்தனை டாக்ஸி சாரதிகள் இந்த மாதிரி புதியகோணத்தில் தன் வேலையைப் பற்றிக் கருதுகிறார்கள்? ஒவ்வொரு டாக்ஸி சாரதியும் இந்த மாதிரி இருந்துவிட்டால், டாக்ஸியில் பயணம் செய்பவர்கள் தான் எவ்வளவு மகிழ்ச்சியாக இருப்பார்கள்?

நாம் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டுமானால் நம்மைச் சுற்றியுள்ளவர்களை, நம்முடைய நண்பர்களை, நம்முடன் வேலை செய்பவர்களை, நம் உறவினர்களை மகிழ்ச்சிப்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

மற்றவர்கள் நம்மை விரும்பினால், நம் வேலையைப் பாராட்டினால், நம் முயற்சிகளைப் பற்றியும், நமது வாழ்க்கையைப் பற்றியும் உயர்வாகப் பேசினால், வாழ்க்கையில் அதைவிடப் பெரிய வெற்றி வேறு எதுவும் இருக்க முடியாது.

**தோல்வியைக் கண்டு ஓடாதீர்கள்**

தோல்வியைக் கண்டு ஓடுபவர்கள் கோழைகள். வாழ்க்கையில் முன்னேற முடியாதவர்கள். மற்றவர்களின் பாராட்டையோ, நட்பையோ பெற முடியாதவர்கள். தரையில் மேடு பள்ளங்கள் இருப்பதுபோல், வாழ்க்கையிலும் வெற்றி தோல்விகள் சர்வசாதாரணம். தோல்வியைப் படிப்பினையாகக் கொண்டு, அடுத்த தடவை வெற்றிகாண வேண்டும் என்று முயல்வது தான் மனிதத்தன்மை.

(தொடரும்)

-தமிழ்வாணன்-

# மாணவரை தேசிய வாசிப்பு மாதம் மேன்மையடையச் செய்துள்ளது

## வேலணை பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 20

தேசிய வாசிப்பு மாதம் மாணவர்களை நூலக வாசிப்பில் மேன்மையடையச் செய்துள்ளது.

வேலணை பிரதேச சபைக் குட்பட்ட பாடசாலை மாணவர்கள், நூலகத்தைத் தற்போது அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். இது எம்மை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது என்று வேலணை பிரதேச சபை தவிசாளர் சின்னையா சிவராசா தெரிவித்தார்.

முப்பரிமாண நூலக திறனாய்வும்- தேசிய வாசிப்பு மாத நூலக கண்காட்சியும் அண்மையில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சிவராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய வாசிப்பு மாதம் ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதத்தில் இடம்பெறுகின்றது.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வாசிப்பின் பெறுமதியை போஸ்டர் மூலம் காட்சிப்படுத்தலாம். இதனை விட கட்டுரை, பேச்சு, விவாதம், நடனம், பாட்டு போன்ற விசேட போட்டிகளை நடத்தி வெற்றி கொள்ளலாம்.

நூலகத்தின் செயற்பாடுகளையும்- நூலகத்தின் பயன்பாடுகளையும் துண்டுப் பிரசுரம் மூலம் வெளிக்கொணரலாம். இச் செயற்பாட்டை நாம் வினைத்திறனாக செயலாற்றி வடமாகாணத்தில் உள்ள அனைத்து நூலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளோம்.

மேலும் கணினி மற்றும் இணைய வசதிகளை வழங்கி வாசகர்களை அதிகரிக்கலாம் என்றார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பிரதேச சபை செயலாளர் செ. ரமேஷ் தெரிவித்ததாவது:-

வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகத்தின் கீழ் 5 உப அலுவலகங்கள் உள்ளன. இந்த 5 உப அலுவலகங்களிலும் நூல் நிலையங்கள் உள்ள போதும் மண்டைதீவு- அல்லைப்பிட்டி நூலகங்களை விரைவில் மெருகூட்ட தவிசாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

2013 இல் இந்தத் திட்டங்களை முன்னெடுக்க சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி நாடப்படும் - என்றார். (எ-50)

# சதுரங்கப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி, நவ.20

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் இருபதாவது ஆண்டு பூர்த்தியையொட்டி தென்மராட்சி கல்வி வலய அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச மாணவர்களுக்கிடையிலான சதுரங்கப் போட்டிகள் அண்மையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றன.

போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம் வருமாறு:-

**15 வயதுக்கு கீழ் ஆண்கள்**

த.பாசுபதன் - மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, சி.பிருந்தாபன் - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, ஸ்ரீ.பிரதீப் - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

**பெண்கள்**- க.கோபிகா - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, பு.பிரதீபா- கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, கு.பிரியங்கா - மீசாலை வீரசிங்கம் ம.வி.

**19 வயதுக்கு கீழ் ஆண்கள்**

சி.வினுஜன் - மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, ம.சர்வேசன் - மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, பா.நிலுஷன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**பெண்கள்**- ச.சயந்தி - மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, அ.மிதுனா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வி.நிலக்ஸி- கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

இவர்களுக்கான பரிசில்கள் ஆண்டு நிறைவு விழாவில் வழங்கப்படும் என சங்கச் செயலாளர் ம.விவேகானந்தன் தெரிவித்தார். (எ-9)



அகில இலங்கை சேக்கிழார் மன்றம் நடத்தும் சேக்கிழார் அறநெறிப் பாடசாலையின் வாணிவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும் சண்டிலிப்பாய் வடக்கு இரட்டைப்புலம் ஞானவைரவர் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்றன. அவ்வேளை அறநெறிப் பாடசாலை அதிபர் திருமதி சிவதாஸ் செல்வமலர் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குகின்றார். (எ-50)

# அரசறிவியலை வெகுசிறப்பாக மாணவருக்கு புகட்டிய ஆசான்

## அமரர் சிவசுப்பிரமணியம் நினைவு நாளில் உரை

யாழ்ப்பாணம், நவ.20

என்னை ஆளாக்கிய ஆசான் மறைந்த வி.சிவசுப்பிரமணியம் அவர்களாவார். இன்று நான் யாழ். இந்துக் கல்லூரியின் அதிபராக இருப்பதற்கு காரணமானவர் அவரேயாவார்.'

- இவ்வாறு கூறினார் யாழ். இந்துக் கல்லூரியின் அதிபர் வி.கணேசராசா.

யாழ். இந்துக் கல்லூரியில் முன்னாள் ஆசிரியராக இருந்து அண்மையில் மறைந்த வி.சிவசுப்பிரமணியத்தின் 31 ஆவது நினைவு நாள் நினைவஞ்சலி நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வின் போது கணேசராசா மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் ச.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்-

''நான் யாழ். நகருக்குப் புதியவனாகவும், கல்லூரிக்கும் புதியவனாகவும் வந்த அந்தக் காலத்தில் எனக்கு தெம்பும் உற்சாகமும் ஊட்டி அரவணைத்து பாடம் சொல்லித் தந்த அந்த ஆசானை நினைக்கும் தோறும் கண்கள் குளமாகுகின்றன'' என்றார்.

தலைமையுரையாற்றிய பேராசிரியர் எஸ். சத்தியசீலன்; நானும் அமரர் சிவசுப்பிரமணியம் ஐயாவின் மாணாக்கனாவேன். 'அரசறிவியல்' என்ற பாடத்தை சிறப்பாகப் பயிற்றுவிக்கும் ஆசான்களுள் அவரும் ஒருவர். அதனை எனது மாணவப் பிராயத்தில் அறிந்து கொண்டேன்- என்றார்.

மற்றும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் கா.குகபாலன், வி. பொன்னம்பலம், எஸ். வெற்றிவேல், திருமதி தனலக்ஷ்மி, திருமதி இ.பொன்மலர் ஆகியோரும் அஞ்சலி உரையாற்றினர். (ஒ)

# நடிப்புப் போட்டியில் வெற்றி பெற்றோர்

வலி.வடக்கு, நவ.20

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் நடிப்புப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் பெயர், விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

பெயர், பாடசாலை விவரங்கள் வருமாறு:-

**தரம் -10**

மச்சாயினி பாலசுப்பிரமணியம் (உடுவில் மகளிர் கல்லூரி), ஸ்ரீஸ்கந்தராசா சஞ்சீவன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), சிவானந்தி சிவனேசசுந்தரம் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

**தரம் - 11**

விவிதாரணி மகேஸ்கரன் (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி), சுஜத்தனா அரியராசா (மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை), பங்கஜா சுரேஷ் ( சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)

**தரம் -12**

தர்சனா மகேந்திரன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), சிந்துஜன் பத்மநாதன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), டயானா மதிவதனன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி)

**தரம் -13**

ஜெயநாதன் ஐங்கரன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), கிறிஸ்சிகா நாகேஸ்வரன் கிறிஸ்ரி (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), தவலட்சியா கந்தசாமி (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை) (எ-86)

# ஓய்வு பெற்றார்

ஆசிரியராகவும், அதிபராகவும் 37 வருடங்கள் சேவையாற்றி, கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய வேலுப்பிள்ளை சிவசுந்தரம் கடந்த 8 ஆம் திகதி முதல் தமது சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். (எ-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்த. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மாலுசந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்புரசன்' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## ஓங்கி ஒலிக்கட்டும் குரல்கள்

''கூடங்குளம் அணு உலையை மூட வேண்டும்'' என்று போராடி வரும் தமிழகத்தின் இடிந்தகரை மக்களுக்கு ஆதரவாக ஈழத்திலும் குரல்கள் ஒலிக்கத்தொடங்கியிருக்கின்றன.

இலங்கையில் தமிழர்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படும் போதெல்லாம் யாருடைய தூண்டுதலும் இன்றி பொங்கி எழுவது தமிழக மக்கள்தான். கட்சி ரீதியாக அவர்கள் பிளவுற்றிருந்தாலும், ஈழத் தமிழர்களுக்கு இன்னல் என்று வரும்போது ஒரே குரலில் தமது எதிர்ப்புகளை தமிழக மக்கள் பதிவுசெய்தே வந்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்ட பின்னர், ஈழ மக்களுக்காக போராடினால் பாரதூரமான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும் என்ற விடயம் நன்கு தெரிந்திருந்தும்கூட, ஈழ மக்களின் கண்ணீரைத் துடைக்க முனைவதில் தமிழகம் பின்னின்றதில்லை. கருணாநிதி போன்ற சில அரசியல் வாதிகள் தம்முடைய சுயநல அரசியலுக்காக ஈழ ஆதரவுக் கோஷத்தை அவ்வப்போது எழுப்பிவிட்டு பின்னர் அதை மறந்துவிட்டாலும் கூட மக்கள் மறக்கவில்லை. தானாபானியிட்டாலும் தசை ஆடிக்கொண்டே இருந்தது.

முத்துக்குமார், செங்கொடி, விஜயராஜ் என்று ஈழத் தமிழருக்காக தீக்குளித்து தங்கள் உயிரையும் தியாகம் செய்யும் அளவுக்கு ஈழ - தமிழக உறவுநிலை எப்போதும் பிரிக்கப்பட முடியாத அதிஉன்னத நிலையிலேயே இருந்தது. ஆனால் நமக்காக தமிழகத்தவர்கள் குரல் கொடுக்க வேண்டும் என்று நினைக்கும் ஈழத் தமிழர்கள், தமிழகப் பிரச்சினைகள் தொடர்பில் தமது உணர்ச்சிகளை வெளிக்காட்டுவதில்லை. ''அது அவர்களின் பிரச்சினை'' என்ற நினைப்பிலேயே இருந்து விடுகிறோம். இதே மனோநிலையில் தமிழக மக்களும் ஈழத்தவர்கள் பிரச்சினையை அணுகி தாமுண்டு, தம்பாடுண்டு என்றிருந்தால், ''நம்பியிருந்த ஈழத் தமிழர்களுக்கு தமிழகம் துரோகம் இழைத்துவிட்டது.'' என்று வசை பாடியிருப்போம்.

இவ்வாறு நாங்கள் குரல் கொடுக்க மறந்த தமிழகத்தின் சமீபத்திய இன்னல்தான் 'கூடங்குளம் அணு உலை விவகாரம்'. ஜப்பான், அமெரிக்கா போன்ற தொழில்நுட்பத்தைக் கரைத்துக்குடித்த நாடுகளே, அணு உலைகளை பாதுகாப்பாக பராமரிக்க முடியாமல் விழி பிதுங்கிக்கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் ''உலகமே தலைகீழாகப் பிரண்டாலும்கூட கூடங்குளம் அணு உலையால் இம்மியளவும் விபரீதங்கள் ஏற்படாது'' என்று இந்தியா மார்தட்டிக்கொண்டு கூடங்குளம் அணுஉலையை திறக்க பாடுபடுகிறது. ஆனால் போபால் நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இரசாயன தொழிற்சாலையில் இருந்து வெளியேறிய நச்சு வாயுவால் ஒரு கிராமத்தையே பறிகொடுத்த பாடம் இடிந்தகரை மக்களுக்கு விழிப்புணர்வை கொடுத்திருந்தது.

தங்களுடைய சந்ததிக்கும், இடிந்தகரை முதல் இராமேஸ்வரம் வரையிலான கடலோர மக்களுக்கு கூடங்குளம் அணு உலையால் பல்வேறு பாதிப்புகளும் வரும் என்பதை முன்கூட்டியே கணித்து, இந்த அணுஉலையை திறக்க வேண்டாம் என்று இடிந்த கரை மக்கள், உதயகுமார் என்பவரின் தலைமையில் தொடர்ச்சியாக வெகுஜனப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அண்மையில் கூட தமிழக சட்ட சபையை முற்றுகையிட முனைந்த கூடங்குளம் அணு உலைக்கு எதிர்ப்பாளர்கள் அரசால் கைது செய்யப்பட்டிருந்தனர். 'வெளிநாட்டு கைக்கூலிகளின் சதியே கூடங்குளம் எதிர்ப்பு நடவடிக்கை' என்று மக்கள் போராட்டத்துக்கு தேசவிரோதம் என்ற சாயத்தை பூசியுள்ள இந்திய அரசு தனது இரும்புக்கரம் கொண்டு அந்த மக்களை அடக்க முனைகிறது.

இந்த நிலையில் இடிந்தகரை மக்களுக்காக ஈழத்தவர்கள் ஆதரவுக் குரல் எழுப்ப ஏனோ பின்னடித்தனர். உண்மையில் கூடங்குளம் அணு உலையில் இடிந்தகரைக்கு மட்டுமல்ல இலங்கைக்கும் ஆபத்துத்தான். ஏனெனில் கூடங்குள அணு உலைக் கழிவுகள் கொட்டப்படப்போவது மன்னார் கடலில்தான். எனவே இடிந்தகரை மக்களுக்காக இல்லாவிட்டாலும் தமக்காகவாவது போராடவேண்டிய கட்டாயம் இலங்கையர்களுக்கு குறிப்பாக வடபகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கூடங்குள அணு உலைக்கு எதிராக முதலாவது குரல் யாழ். நகரில் இருந்து புதிய ஜனநாயகக் கட்சியின் குரல்வளை ஊடாக வெளிப்பட்டிருக்கிறது. இந்தக் குரலோடு ஏனைய தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணைந்து தமது காத்திரமான எதிர்ப்பை பதிவு செய்யவேண்டும். இயன்றவரை கூடங்குளம் அணு உலையை அமையவிடாது தடுக்க முனையவேண்டும் இல்லாவிட்டால் எங்கள் சந்ததியினரும் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் இன்றைக்கும் ஊனமாகப் பிறக்கும் பிள்ளைகள் போல மாறவேண்டி இருக்கும்.

# எதிர்ப்போருக்கு எதிரான அதிகாரத் தரப்பின் சினம்

மூலம்: ராவய

தமிழில்: வீஎஸ்ரி

> அரசமைப்பு விதிகளால் ஏற்பட்ட தடைகளை நீக்கி திவிநெகும என்ற வாழ்வின் எழுச்சி சட்ட மூலத்தை' சட்டமாக்குவதற்கான அங்கீகாரத்தை வழங்காததன் காரணமாக தற்போது ராஜபக்ஷ சகோதரர்களது கோபம் நீதித்துறை மீது பாய்ந்துள்ளது.

சகோதர அரசியல் கூட்டுத் தரப்பின் விருப்புக்களுக்கு, வாய்ச் சவால்களுக்கு, கற்பனைக் கருத்துக்களுக்கு எதிராகக் கடந்த காலத்தில் கருத்து வெளியிட்டோர், செயற்பட்டோர் நரகத்து நெருப்புக்கு நிகரான ராஜபக்ஷமாரின் கோபாக்கினி குறித்து நன்கறிவர். நாட்டையே தலைகீழாக மாற்றும் ராஜபக்ஷமாரின் அரசியற் பயணத்தை எதிர்ப்பது, தொழில் இழப்பு, உயிர் அச்சுறுத்தல் என்பவற்றுக்கு உட்படும் நிலையைத் தோற்றுவிக்கும் என்பதை மாணவர், தொழிலாளர்கள், தமிழ்ப்பொது மக்கள், சிங்கள விவசாயிகள், ஊடகவியலாளர்கள், இராணுவ அதிகாரிகள், நீர்கொழும்பு மீனவர்கள் மற்றும் கொழும்பின் சேரிவாழ் வறிய மக்கள் எனப் பலரும் அனுபவபூர்வமாக கண்டனுபவித்துள்ளனர்.

ராஜபக்ஷ தரப்பினரின் இந்த அடிப்படை நிலைப்பாட்டை, நாட்டின் அதியுயர் நீதித்துறை அதிகாரத்தரப்பினரும் அனுபவிக்க வேண்டிய சந்தர்ப்பம் தற்போது உருவாகியுள்ளது. ராஜபக்ஷ சகோதரர்களது தரப்புக்கு ஆதரவாகச் செயற்படுவோர் தாம் இழைக்கும் குற்றங்களிலிருந்து விடுபட்டு முன்னேறிச் செல்ல இயலும். அதேவேளை எதிராகச் செயற்படுவோர் குற்றமேதும் இழைக்காத போதிலும் அபாயத்துக்கு உள்ளாக நேரிடும் என்பதும் இன்று எழுதாத விதியொன்றாக ஆகிவிட்டுள்ளது.

அரசமைப்பு விதிகளால் ஏற்பட்ட தடைகளை நீக்கி திவிநெகும என்ற வாழ்வின் எழுச்சி சட்ட மூலத்தை சட்டமாக்குவதற்கான அங்கீகாரத்தை வழங்காததன் காரணமாக தற்போது ராஜபக்ஷ சகோதரர்களது கோபம் நீதித்துறை மீது பாய்ந்துள்ளது. நீதித்துறை வெளிப்படுத்திய இந்தப் பாதகமான பிரதிபலிப்பை ராஜபக்ஷ சகோதரர்கள் தமது அதிகாரத்துக்கு விடுக்கப்பட்ட பாரதூரமான அச்சுறுத்தலாகவே கருதுகின்றனர். அவர்கள் தமது வழமையான போக்கின்படி தற்போது அரசமைப்பு மற்றும் நீதித்துறையின் தடைகளை பெல்லாம் உடைத்தெறிந்து அவற்றை நாசப்படுத்தும் கைங்கரியத்தில் இறங்கியுள்ளனர்.

பொய்களும், வெற்று வேட்டுப் பேச்சுக்களும் சகல அரசியல் வாதிகளது செயற்பாடுகளின் ஓர் அங்கமே. அதிலும் ராஜபக்ஷ சகோதரர்கள் இவற்றைத் தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்தும் தன்மை கொண்டவர்கள். அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தை முன்வைத்த போது பொது மக்கள் தரப்பில் அதற்கு எதிர்ப்புக் கிளம்பிய வேளை, தமது சுருதியைக் குறைத்து அரசமைப்புக்கான 18 ஆவது திருத்த யோசனையை அரசு [illegible] அறிவித்தனர்.

அது குறித்து பொதுமக்களது அக்கறை குறைவடைந்து தீவிர எதிர்ப்பு நிலை நலிவடைந்த பின்னர், தருணத்தைப் பயன்படுத்தி அச்சட்ட மூலத்தை நிறைவேற்றிக் கொண்டனர்.

அதேபோன்று, பிரதம நீதியரசருக்கு எதிராக அரசு குற்றவியல் பிரேரணை முன் வைக்கவுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்ட போது, அவர்கள் அந்தச்செய்திக்கு மறுப்புத் தெரிவித்தனர். அத்தகைய திட்டமெதுவும் அரசுக்குக் கிடையாதெனவும் நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்குமிடையில் பிளவேற்படுத்தி நாட்டின் ஸ்திர நிலையைக் குலைப்பதற்காக சில சக்திகள் இவ்விதத் தகவல்களைப் பரப்பி வருவதாகவும் அமைச்சர் ஸ்ரீபால டி சில்வா தெரிவித்தார்.

அவர் அவ்விதம் கருத்து வெளியிட்ட வேளையில் குறிப்பிட்ட பிரேரணையின் சட்ட நகல் தயாரிக்கப்பட்டிருந்திருக்கக் கூடும். புதிய 'கோப்' அறிக்கை சில ''தவறான கொடுக்கல் வாங்கல்கள்'' குறித்து தனது அறிக்கையில் வெளிக்கொணர்ந்திருந்தது.

ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனத்தின் மில்லியன் ரூபா பெறுமதியான 1137 பங்குகள் மக்கள் வங்கியால் கொள்வனவு செய்யப்பட்டமை, 15.6 மில்லியன் டொலர் பெறுமதியான பணமுறிகளில் மத்தியவங்கி முதலீடு செய்தமை போன்றவை இவற்றுள் அடங்கும். பிரதம நீதியரசர் அரசமைப்பு விதிகளைக் கணக்கில் எடுக்காது 'திவிநெகும' சட்ட மூலத்தை அனுமதிக்க இடமளித்திருப்பாரானால் அவரது கணவரான பிரதிப் காரியவாசம் தேசிய சேமிப்பு வங்கியின் சகல சொத்துக்களையும் முறையற்ற விதத்தில் பயன்படுத்தினாலும் அதற்காகத் தண்டிக்கப்படமாட்டார். இந்த முறையற்ற கொடுக்கல் வாங்கல்களில் ராஜபக்ஷ பரம்பரையைச் சேர்ந்தோர் ஈடுபட்டிருப்பின் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையெதுவும் எடுக்கப்பட்டிருக்காது என்பதைத் தெரிந்து கொள்ள விசேட அரசியல் ஞானம் தேவைப்படாது. ராஜபக்ஷ தரப்பினரின் செயற்பாடுகளுக்கு இடமளித்திருந்தால் பிரதம நீதியரசர் சகல சட்ட விதிகளையும் புறந்தள்ளி பூரண சுதந்திரம் அனுபவிக்க வாய்ப்பிருந்திருக்கும். சிலவேளை 'தேசபந்து' அல்லது 'தேசமானிய' கௌரவப் பட்டங்களையும் சிரமமின்றிப் பெற்றிருக்கலாம். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூட அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டிருந்தாலும் எத்தகைய தவறைச் செய்திருந்தாலும் எவரைக் கொலை செய்திருந்தாலும், வாழ்நாள் பூராகவுமே ஓய்வூதியத்துடன் சுதந்திரமாக வாழ்ந்திருக்கலாம்.

''எம்மை மிஞ்சி எந்தத்தலைவர்களும் கிடையாது. அரசமைப்புச் சட்டமோ, மனச்சாட்சியோ பெறுமதியற்றவை, நீங்கள் எங்களுக்குக் கீழ் பணிந்து நடந்தால் உங்களால் சகல சௌகரியங்களையும் அனுபவிக்க இயலும். அவ்விதம் நடக்கத் தவறினால் உங்களுக்கு எதுவும் கிட்டப் போவதில்லை'' என்பதே ராஜபக்ஷ தர்ம உபதேசத்தின் ஆரம்ப வாக்கியம். இதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்வது மிகச் சுலபம். ஆனால் சட்டத்தையும், அதே சமயம் அரசமைப்பையும் மதிக்க வேண்டுமானால், மேற்கண்ட நிலைப்பாட்டின் முடிவு என்னவாகும்?

ராஜபக்ஷ தரப்பின் கோபத்துக்கு ஆளாகாதிருப்பதற்காக நீதித்துறை தனது சுதந்திரத்தைக் கைவிட இயலுமா? அவ்வாறு அமையுமானால் நாட்டின் ஜனநாயக வாதம் அற்றுப் போக நேரிடும். நீதித்துறை கீழ்படியுமானால் திவிநெகும சட்ட மூலம் சுலபமாக நிறைவேற்றப்பட்டிருக்கக் கூடும். அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தின் மூலம் 17 ஆவது திருத்தம் ஒழிக்கப்பட்டமை போன்று, 19 ஆவது திருத்தத்தின் மூலம் 13 ஆவது திருத்தத்தின் பயன்பாடு இல்லாதொழிக்கப்படலாம். அதிகாரப் பரவலாக்கலை இல்லாதொழிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளை அரச தரப்பிலுள்ள இடதுசாரி மற்றும் சிறுபான்மைத் தமிழ்க்கட்சிகள் எதிர்க்குமா என்பது தெளிவாக இல்லை.

வெளிப்படையாக எதிர்த்துக் கருத்து வெளியிட்டு வரும் அவை சட்ட மூலத்துக்கான வாக்கெடுப்பின் போது ஆதரவாக வாக்களிக்கவும் கூடும். அதிகாரப் பகிர்வு நடைமுறையை ஒழிப்பதன் மூலம் விடுதலைப் புலிகளது கோரிக்கையை நியாயப்படுத்துவதாக அமையும்.

இலங்கைப் பிரதிநிதிகள் ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் பங்கேற்றுக் கொண்டிருந்த வேளையிலேயே பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை இங்கு முன்வைக்கப்பட்டது.

இந்தியாவின் கோபத்தையோ, மேற்குலக நாடுகளின் கருத்துக்களையோ ராஜபக்ஷ தரப்பு கொஞ்சமேனும் கணக்கில் எடுப்பதில்லை. தாம் சீனாவின் ஆதரவைக் கொண்டிருக்கும் வரை தாம் எவருக்கும் அஞ்சப்போவதில்லை என்பது அவர்களது நிலைப்பாடாக இருக்கக் கூடும். நிலவும் பிராந்திய அதிகாரப் போட்டியில் இலங்கை தானாக விரும்பி தூண்டில் முள்ளின் இரையாகப் போகிறதா? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரீட்சையில் உயர் பெறுபேறு பெற......

ப.அருந்தவம்,
ஆசிரிய ஆலோசகர்.

பரீட்சையில் ஒரு மாணவன் வெற்றி பெறுவது அவனது அறிவு, மற்றும் முயற்சியில் தங்கியிருக்கவில்லை. பரீட்சைக்குத் தயாராவதும் உயர் பெறுபேறு பெறுவதும் அவர்களோடு பெற்றோர்கள் எவ்வளவு தூரம் உறுதுணையாக இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தும் அமைகிறது.

பெற்றோரின் முக்கிய கடமைகளில் ஒன்று அவர்களின் பிள்ளைகளுக்கு, பிள்ளைப் பருவத்தே சிறப்பான உணவு வழங்குதலாகும். இதிலும் பரீட்சைக் காலத்திலும், பரீட்சை நெருங்கும் காலத்திலும் சிறப்பான ஆகாரத்தைத் தேர்ந்தெடுத்து வழங்குவதன் மூலம் உயர்பெறுபேறு பெறமுடியுமென ஆய்வுகள் கூறுகின்றன.

அண்மைக் காலத்தில் மூளை மற்றும் நரம்பியல் துறையில் நிகழ்த்திய ஆய்வு முடிவுகளும், உணவியல் துறையில் நடைபெற்ற ஆய்வு முடிவுகளும், கல்வியல் துறை ஆய்வு முடிவுகளும் இதையே எடுத்துக் காட்டுகின்றன. உணவின் அடிப்படையில் மூளையின் செயல்திறன் நினைவாற்றல், புத்திக் கூர்மை, உளவியல் நிலை என்பன மேம்பாடடைகின்றன.

மனித உடலில் இருபத்துநான்கு மணிநேரமும் செயற்திறனுடன் இயங்கும் உறுப்புகளில் ஒன்று மூளையுமாகும். இது நன்கு உத்வேகத்துடன் இயங்க வேண்டுமெனில் சகல போசாக்குகளும் தடையின்றிக் கிடைப்பதற்கு வகை செய்தல் வேண்டும்.

பரீட்சைக் காலங்களில் பெற்றோர் பிள்ளைகளுக்கு எவ்வகையான உணவுகளை வழங்க வேண்டும் என்பதையும், எவ்வாறான உணவுகளைத் தவிர்க்க வேண்டுமென்பதையும் தெரிந்து வைத்திருப்பதன் மூலம் தமது பிள்ளைக்கு உடலியல் ரீதியிலும், உளவியல் ரீதியிலும் ஒரு பலமான நிலையை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

**பரீட்சைக் காலத்தில் விலக்க வேண்டிய உணவுகள்:**

பொதுவாக இனிப்பான உணவு, நொறுக்குத்தீனி, பாஸ்ட்பூட் வகை, மென்மையான வகை போன்றவற்றை பரீட்சைக் காலத்தில் பெற்றோர் பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுப்பதனை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இவை தவிர்க்கப்பட வேண்டியவையாகும்.

எதுவித கலோரிப் பெறுமானமுமற்ற செயற்கைப் பழச்சாறு வகை, பல்வேறு சோடா வகை என்பன தவிர்க்கப்பட வேண்டியவை. இயற்கையான இளநீர், எலுமிச்சம் பழம், பழப்பானம், தோடம்பழப் பானம் போன்றவற்றை அருந்தக் கொடுத்தல் சிறப்பானது.

இதே போல் சாதாரண சிற்றுண்டிச் சாலைகளில் தயாரிக்கப்படும் எண்ணெயில் பொரித்த பண்டங்களும், பேக்கரிமா கொண்டு தயாரிக்கப்பட்ட கேக் வகை, பிஸ்கட் வகை போன்றனவும் தவிர்க்கப்படலாம். இங்கு சாதாரண சிற்றுண்டிச்சாலைகளில்தரங்குறைவான எண்ணெய் கொண்டு தயாரிக்கும் போது வயிற்றுக் கோளாறுகள் இடம்பெற சந்தர்ப்பம் உண்டு.

எமது பிரதேசத்தில் மாணவருக்கு பரீட்சைக் காலத்தில் நொறுக்குத் தீனியாக வழங்குவதில் முக்கியமானதாக அமைவது மிக்ஸர் வகையும், உருளைக்கிழங்கு பொரியல் துண்டு வகையும், பகோடா வகையும் ஆகும். இவற்றின் தயாரிப்பின் போது "அஜினமோட்டோ" எனும் சுவையூட்டும் சேர்மானம் சேர்க்கப்படலாம். இது பிள்ளையின் சமிபாட்டு ஆற்றலைச் சிதைத்து பிள்ளைக்கு அஜீரணக் கோளாறைக் கூட ஏற்படுத்தி விடும்.

இதைவிட பிள்ளை சாப்பிட்டுக் கொண்டிருக்குமென நொறுக்குத் தீனியைக் கொடுப்பதும் பிள்ளையின் கவனத்தைச் சிதைப்பதாகவும் அமைந்து விடுகிறது.

இதே போல் சமைத்து நீண்ட நேரமான உணவையும் தவிர்த்தல் சிறப்பானது. பொதுவாக சமைத்து சூடு ஆற முன்னர் இக் காலத்தில் உண்ணல் ஒரு சிறப்பான முற்காப்பு நடைமுறையாக அமையும்.

**பரீட்சைக் காலத்தில் வழங்க வேண்டிய உணவுகள்**

பரீட்சைக் காலத்தில் உண்ணும் உணவுகள் மூளைக்கு ஆற்றலைத் தருவனவாகவும், மாணவனின் நினைவுத் திறனை அதிகரிப்பனவாகவும், மாணவனின் மன இறுக்கத்தை போக்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

இவ்வாறான உணவுகளை எமது உள்ளூரில் கிடைக்கும் மூல வளங்களைக் கொண்டே எமது சமயலறையிலேயே தயாரித்துக் கொள்ளக் கூடியதாயிருக்கும்.

பரீட்சைக் காலத்திலும் சரி, பரீட்சை நெருங்கும் காலத்திலும் சரி மாணவனுக்கு வழங்கும் உணவில் காலை உணவே அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். காரணம் மாணவனால் நண்பகல் வரை எதுவித உடற்சோர்வுக்கோ, மனச் சோர்வுக்கோ உள்ளாகாது புத்துணர்வுடன் செயற்பட இது வழி செய்கிறது.

காலை ஆகாரம் உட்கொள்ளாது இருக்கும் மாணவனை பரீட்சைக்கோ அல்லது பாடசாலைக்கோ அனுப்புதல் தவறான செயலாகும். மாணவன் அன்றைய நாளை சுறுசுறுப்புடனும், உத்வேகத்துடனுமிருந்து வெற்றி கொள்வதற்கு காலையுணவு இன்றியமையாதது.

காலை உணவாக பொங்கல், பூரி, சப்பாத்தி போன்ற திடம் என்றிருக்கும் உணவு வகைகளைத் தவிர்த்து இடியப்பம், இட்லி போன்ற ஆவியில் அவிக்கும் உணவு வகைகளை அதிகம் தேர்ந்தெடுக்கலாம். இதைக் கூட அளவாக உள்ளெடுத்தல் சிறப்பானது. கொஞ்ச நேரத்தில் பிள்ளைக்கு பசி எடுப்பின் இயற்கையிலிருந்து தயாரித்த ஜூஸ் வகை, சூப் வகை என்பவற்றை பருகக் கொடுக்கலாம்.

காலை உணவில் பல்வேறு மரக்கறிகளும் சேர்த்தல் மேலும் சிறப்பானது. காலையில் கண்டிப்பாக ஒரு டம்ளர் பாலும், ஒரு பழமும் சேர்த்தல் வேண்டும்.

எமது நாட்டைப் பொறுத்தவரை பொதுவாக மதிய உணவு சோறும் கறியுமாகும். பரீட்சை நெருங்கும் காலங்களில் வாரத்தில் 4 நாள்களாவது வல்லாரை கொண்டு தயாரித்த உணவு போன்றன அமைதல் வேண்டும். காரணம் வல்லாரை "மெமறி பூஸ்ட்" எனக் கூறப்படுகிறது. அதாவது இது ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யும் ஒன்றாகும். இதே போல் வெண்டிக்காயும் ஞாபக சக்தியை அதிகரிக்குமுகமாக உணவில் சேர்க்கப்படலாம். இத்துடன் பருப்பு, கரட், போஞ்சி, தக்காளி, முருங்கை போன்றவையும் இடம்பெறலாம். புளிப்பை பாதயிரும் உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

அசைவ உணவு உண்பவர்கள் தரமான மீன்களைத் தெரிவு செய்து உண்ணலாம். மீன் நினைவாற்றலை மேம்படுத்தும் ஓர் உணவு என போசாக்குத் துறைசார் வல்லுநர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதனை விட நுகர்வுக்கு வேண்டிய புரதத்தையும் ஈடுசெய்வதாகவும் அமையும்.

இக்காலத்தில் உணவில் அளவாக உப்புச் சேர்ப்பதுடன் காரம் குறைவாகவும், எண்ணெயையும் மிகக்குறைந்த நிலையில் பாவித்து வழங்குதல் சிறந்த பலனைத் தருவதாகவும் அமையும்.

பரீட்சைக்காலங்களில், பரீட்சை நெருங்கும் காலங்களிலும் உணவு இடைவேளையின் போது பழங்களை வெட்டி உண்ணக் கொடுக்கலாம். இங்கு பழங்களிலிருக்கும் இயற்கை வெல்லம் மாணவனின் உடற்சோர்வைப் போக்கிப் புத்துணர்வை கொடுக்கிறது. இது மட்டுமன்றி கனிகளில் பொதிந்துள்ள கனியுப்புக்களும், விட்டமின்களும் மூளையின் செயற்திறனை விரைவுபடுத்தி மாணவனின் விடை பகருமாற்றலுக்குக்கும் அனைத்துக்கொடுக்கிறது.

பரீட்சைக் காலங்களில் பிள்ளைகள் தேவையான நீரைப் பருகுதல் இன்றியமையாதது. பிள்ளைகளின் மூளை சிறப்பாகச் செயற்பட சுத்தமான நீர் அவசியமானது ஆகும்.

**நித்திரைக்கு நேரம் ஒதுக்குங்குகள்**

இரவு நேரம் நித்திரைக்குச் செல்லும் பிள்ளைக்கு ஒரு டம்ளர் பாலும் ஒரு பழமும் சாப்பிடக் கொடுப்பது களைப்புத் தீர்வதுடன், நிம்மதியான தூக்கத்தையும் தருவதாக அமையும். தினமும் 06 முதல் 08 மணிநேரம் வரை தூங்க வேண்டிய அவசியத்தை மாணவனுக்கு உணர்த்தி அதற்கான தொந்தரவில்லாத சூழலை உருவாக்கிக் கொடுத்தலும் பெற்றோரின் கடமையாகும்.

பரீட்சைக் காலங்களிலும் பரீட்சை நெருங்கும் காலங்களிலும் நலமான உணவுகளைத் தேர்ந்தெடுத்து சரியான அளவில் சரியான முறையில் கொடுப்பதன் மூலம் மாணவன் சிறப்பான முறையில் பரீட்சையை எதிர்கொண்டு உயர்வான பெறுபேற்றை பெறுவான் என்பதில் ஐயம் இல்லை. ★

# வாழ்வில் அமைதி வேண்டுமா?

கோ.நந்தகுமார்
விரிவுரையாளர், தாதியர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

ஒரு புதிய சூழல் அல்லது பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்ற பொழுது எங்கள் உடலிலும், உள்ளத்திலும் ஏற்படுகின்ற மாறுதல்களே (எதிர்வினைகளே) நெருக்கீடுகளாகும்.

இவ்வகையான நெருக்கீடுகளை நாம் எல்லோரும் அன்றாடம் அனுபவிக்கும் வேறுசில வகையான நெருக்கீடுகள் கடுமையான தாக்கத்தை வாழ்வில் ஏற்படுத்துகின்றன. சாதாரண வாழ்வியல் அனுபவங்களுக்குள் வராத பேரழிவுகள், உயிரிழப்புக்கள், எதிர்பாராத வகையில் ஏற்படுகின்ற எங்களது கட்டுப்பாட்டையும் மீறி நிகழ்கின்ற நெருக்கீடுகள் பெரும்பாலானவர்களின் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாக உள்ளன.

நீண்டகாலப் போர்ச் சூழலில் சிக்குண்டு இருந்த எமது தமிழ்ச் சமூகம், தற்போது அதில் இருந்து மீண்டு வந்து கொண்டிருக்கிறது. அதேவேளை சமூகத்தில் ஏற்படுகின்ற கொலை, கொள்ளை, கற்பழிப்புக்கள், வழிப்பறிகள் என்பன எமது மக்களை சுதந்திரமாக செயற்பட விடாது தடுக்கின்றன. இதனால் பல உளரீதியான நெருக்கீடுகள் ஏற்படுகின்றன.

மேலும் குடும்பத்தில் ஏற்படுகின்ற வன்முறைகள், இழப்புக்கள், கொடூரமான முறையில் ஏற்படுகின்ற மரணங்கள், வறுமை, போசாக்கின்மை, நோய்களின் தாக்கம், புதிய வாழ்க்கையைத் தொடங்குவதில் உள்ள சிக்கல்கள், உழைப்பின்மை, அதிகரித்து வரும் பொருளாதாரச் செலவு, எதிர்காலம் பற்றிய நிச்சயமற்ற தன்மை இடப்பெயர்வுச் சூழலில் இருந்து மீண்டும் பழைய இடத்துக்கு திரும்ப முடியாமை போன்ற பல சூழ்நிலைகள் நெருக்கீடுகளைத் தோற்றுவிக்கலாம்.

உலகம் பலவிதம். அதில் ஒவ்வொருவரும் தனிரகம். எல்லோருடைய கருத்துக்களும் ஒன்றாக இருக்காது. மாறுபட்டுத்தான் இருக்கும். உண்மையில் இசைந்த கருத்து, ஒருமித்த கருத்து என்று எதுவும் இல்லை. இன்றைய சமூகச் சூழலில் கணவன், மனைவி இருவருக்குமிடையில் கூட ஒத்தகருத்து காணப்படுவதில்லை. இதனை மிக அழகாக ஆங்கிலத்தில் குறிப்பிட வேண்டுமாயின் Let us agree to disagree என்பது தான் சரியான நிலைப்பாடு.

ஆகவே நாம் ஒவ்வொருவரும் உள நெருக்கீடுகளில் இருந்து விடுபட்டு அமைதியாக வாழ என்ன வழி என ஒவ்வொருவரும் நினைத்துக் கொண்டு இருக்கிறீர்கள்.

"கதவைத் திறந்து வை காற்று வரும்" என்பதைப் போல நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் மனக்கதவைத் திறந்து வையுங்கள். உங்கள் அமைதி கெடுவதற்குரிய வழிகளை அடைத்து விடுங்கள். உங்களிடம் அமைதி பூத்துக் குலுங்குவதை நீங்கள் உணர்வீர்கள். அமைதி வேண்டுமா? இதோ அதற்கான வழிகள்.

**1.தேவையில்லாமல் மற்றவர்களது பிரச்சினைகளில் தலையிடாதீர்கள்.**

அடிக்கொருதடவை மற்றவர் விடயங்களில் மூக்கை நுழைப்பதால் உங்கள் அமைதி கெட்டுவிடும். ஏனெனில் நம்முடைய கருத்துத்தான் சரியானது. நமது வழிதான் சரியானதுஎன்ற தவறான எண்ணமே மற்றவர் விடயத்தில் நாம் தலையிடக் காரணம்.

**2.மன்னிப்போம் மறப்போம்**

மன்னிப்பதும், மறப்பதும் தெய்வகுணம். எனவே அமைதி குலையாமல் இருக்க வேண்டுமாயின் இதுவே சிறந்த வலிமையான முறையாகும். அவமதிப்பு ஒருமுறைதான் நடைபெறுகிறது. ஆனால் நாம் அவற்றை மறந்து விடாது திரும்பத் திரும்ப நினைப்பதனால் தான் யானைக்கு ஒருகாலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வருமல்லவா என நெஞ்சு குமுறுகிறது. சும்மா இருக்க முடியாமல் கொந்தளிக்கின்றோம்.

**3.அங்கீகாரத்திற்காக ஏங்காதீர்கள்**

இவ்வுலகில் உள்ள யாவரும் சுயநலவாதிகளே, தங்களது சுயலாபம் இல்லாமல் யாரையும், எதற்காகவும் பாராட்டமாட்டார்கள். ஒவ்வொருவரும் உங்கள் பணபலம், அந்தஸ்து, அதிகாரம் என்பனவற்றைக் கொண்டே உங்களைக் கெட்டிக்காரன், புத்திசாலி எனப் புகழ்வார்கள். உங்களது பதவி பறிபோனால் அடுத்த நிமிடம் உங்களில் தவறு கண்டுபிடிக்கத் தயங்கமாட்டார்கள்.

**4.பொறாமை என்னும் சிறுமை கொண்டு அலையாதீர்கள்.**

அழுக்காறு, அவா, வெகுளி இன்னாசொல், இவை நான்கும் இழுக்கா இயன்றது அறம் என்றார் வள்ளுவர்.

பொறாமை நமது உள் அமைதிக்கு தீங்கு விளைவிக்கும் அலுவலகத்தில் நீங்கள் பணி செய்கின்றீர்கள், உண்மையாக உழைக்கின்றீர்கள். ஆனால் சக ஊழியருக்குப் பதவி உயர்வும், ஊதியமும் கிடைத்துவிட்டால் நீங்கள் பொறாமையினால் மனம் வருந்துகின்றீர்கள். மற்றவர்கள் மீது பொறாமைப் படுவதால் உங்கள் அமைதியை தொலைத்து விடுகின்றீர்கள். எது நடக்க வேண்டுமோ அது நன்றாகவே நடந்தது என்ற மனநிலை உங்களுக்கு வேண்டும். கிடைத்ததை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும்.

**5.சூழ்நிலைக்கு ஏற்ப உங்களை மாற்றியமைத்துக் கொள்ளுங்கள்.**

உங்களால் ஒருபோதும் இயல்பான சூழ்நிலையை மாற்ற முடியாது. அதற்கு இசைவாக நடந்துகொள்வதே புத்திசாலித்தனம். ஏறும் போது ஏறவும் இறங்கும் போது இறங்கவும் தெரிந்து கொள்ளுங்கள். ஆற்றின் போக்கில் போனால் தான் கரை சேரலாம். எதிர்த்து போனால் ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுவீர்கள்.

**6.தீர்க்க முடியாத பிரச்சினைகளை ஏற்றுக் கொள்ளப் பழகுங்கள்**

இவ்வாறு ஏற்றுக் கொள்ளும்மனநிலையானது உங்களுக்கு அனுகூலமாக மாறிவிடும். "இடுக் கண் வருங்கால் நகுக" என்ற வார்த்தைக்கு இணங்க துன்பத்தைக்கண்டுதுவண்டுவிடாதீர்கள். உங்கள்மீதுநம்பிக்கை வையுங்கள். பொறுமையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானத்தெளிவு

ஓர் ஊரில் குரு ஒருவர் வாழ்ந்து வந்தார். ஒருநாள் அவரைத் தேடி ஒருவர் சென்றார். "உனக்கு என்ன வேண்டும்?" என்று குரு கேட்டார். "எனக்கு ஞானத்தெளிவு வேண்டும்... அதற்கு உங்கள் உபதேசம் தேவை!" என்றார்.

"உபதேசம் வேணும் என்றால் அதைப் பெற்றுக் கொள்ளும் அளவுக்குத் தகுதியுள்ளவனாக உன்னைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும்!" என்றார்.

அதற்கு நான் என்ன செய்யவேண்டும்" என்றான்.

"முதலில் நீ செய்ய வேண்டியது என்னவென்றால் உன்னிடம் உள்ள சகல கெட்ட குணங்களையும் நீக்கிவிட்டு ஒரு வருடம் கழித்து வா... அதன் பின் பார்க்கலாம்" என்றார்.

"அவ்வளவுதான்... சரி!" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

ஒரு வருடம் கழித்து வந்தான்.

அவன் அங்கே வந்த வேளையில் அந்த ஆச்சிரமத்தின் மண் தரையை ஒரு வேலைக்காரன் பெருக்கிச் சுத்தம் செய்து கொண்டிருந்தான்.

மண் தரையிலேயிருந்து எழுந்த புழுதி அதிகமாக இருந்தது. அது காற்றிலே கலந்தது. சீடனையே மறைக்கின்ற அளவுக்கு வந்துவிட்டது. ஒரே புழுதி மயம்.

சீடனுக்குக் கோபம் வந்துவிட்டது. அந்தவேலைக்காரனை அடிப்பதற்காக கையை ஓங்கிக் கொண்டு போனான். அவன் ஓடிப்போய் குருவிடம் சொன்னான்.

"குருவே! உங்கள் உத்தரவுப்படிதான் நான் தரையைச் சுத்தம் செய்தேன். ஆனால் அந்த நபர் என்னை அடிக்க வருகிறார்!" என்றான்.

குரு பார்த்தார்.

அந்த சீடனைக் கூப்பிட்டார்.

"இதோ பாருப்பா! உன்னுடைய எண்ணங்களில் பாம்புகள் புகுந்து விட்டன! அதையெல்லாம் விரட்டிக் கலைத்து விட்டு வருடம் கழித்து வா! என்றார்.

சீடன் சிந்தித்தான். 'சரி என்று சொல்லிவிட்டுச்சென்றான்.

ஒரு வருடம் கழித்து மறுபடியும் வந்தான். இப்ப அந்த வேலைக்காரன் என்ன செய்தான் தெரியுமா?

குருவின் கட்டளைப்படி தரையைப் பெருக்கினான். அதன்பின் அந்தப் புழுதியை எடுத்து வேணும் என்றே அந்தச் சீடன் மேலே தூவினான்.

அவ்வளவுதான்.

சீடனுக்கு கடும் கோபம் வந்தது.

அந்த வேலைக்காரனைப் பிடித்து கண்டபடி ஏசினார்.

வேலைக்காரன் குறுக்கிட்டு ஓடினான்.

"ஐயா! அந்த நபர் வாய்க்கு வந்தபடியெல்லாம் ஏசுகிறார் என்றான்.

குரு பார்த்தார்.

"ஓ.... அப்படியா? அப்படி என்றால் இந்தத் தடவை பாம்புகள் அல்ல.... இப்போது அவன் இதயத்துக்குள்ளே நுழைந் திருப்பவை நாய்கள்!"

அவற்றை விரட்டியடித்துவிட்டு இன்னும் ஒரு வருடம் கடந்தபின் அவனை வரச்சொல்! என்று சொல்லி அனுப்பி விட்டார்.

சீடன் திரும்பிப் போய்விட்டான்.

ஒரு வருடம் கழித்து மறுபடியும் வந்தான். இப்போது அவன் வரும் போது என்ன செய்யவேண்டும் என்பதை அந்த வேலைக்காரனிடம் குரு ஏற்கனவே சொல்லி வைத்துள்ளார்.

அதன் பிரகாரமே அவன் செயற்பட்டான்.

அவன் என்ன செய்தான் தெரியுமா?

கூட்டிப் பெருக்கிய புழுதியை எல்லாம் ஒரு வாளி தண்ணீரிலே போட்டு நன்றாகக் கலக்கி அவன் தலையிலே ஊற்றினான்.

இவ்வளவு செய்தும் இந்தத் தடவை அவனுக்குக் கோபமே வரவில்லை! அதற்குப் பதிலாக அவனைப் பார்த்து 'நன்றி' என்றான்.

எதற்கு நன்றி தெரியுமா?

எதையும் சகித்துக் கொண்டு அமைதியாக இருக்கும் குணத்தைக் கற்றுக் கொள்வதற்கு உதவியாக இருந்ததுக்காக அந்த வேலைக்காரனுக்கு நன்றி.

இதைக் கேள்விப்பட்டவுடன் அந்தக் குரு ஓடி வந்தார். அவனைக் கட்டி அணைத்தார்.

"இனிமேல் நான் உனக்கு உபதேசம் பண்ணலாம். அதற்கான தகுதி உனக்கு வந்துவிட்டது" என்றார்.




இதிலிருந்து தெரிவது என்ன தெரியுமா?

ஒருவரிடம் உபதேசம் வாங்க வேணும் என்றால் கூட அதற்கென்று ஒரு தகுதி எமக்குத் தேவைப்படுகின்றது. சகிப்புத் தன்மை ஒவ்வொரு மனிதனுக்கும் தேவைதான்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# மாணவர்களின் வழிபாட்டு மையமான பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயம்



(கடந்தவாரத் தொடர்ச்சி....)

**எஸ்.யேசுதாஸ்**

யாழ். பல்கலைக்கழகத்தின் கேந்திர நிலையத்தில் அதன் இதயமாக அமைந்துள்ள ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய அமைப்பு பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வியாங்கொடையில் இருந்து கொண்டுவரப்பட்ட கருங்கற்களால் தெற்கு வாசல் கொண்டதாக பிரதான கோயில் அமைக்கப்பட்டுள்ளது.

தென்திசையில் உள்ள மேல்மாடி வரையுள்ள பகுதியும் கருங்கல்லினால் வடிவமைக்கப்பட்டது. இங்குள்ள மூலஸ்தானம் அர்த்த மண்டபம் என்பவற்றில் முறையே சிவலிங்கமும் அம்மன் சிலையும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. கோயிலின் முன்பக்கத்தில் வலது புறத்திலே விநாயகருக்கான சிறிய கோயிலும், இடது புறத்திலே முருகனுக்கான சிறுகோயிலும் அமைந்துள்ளன.

மூலஸ்தானத்துக்கு நேரே நந்தியும் பலிபீடமும் அமைக்கப்பட்டுள்ளன. தென்கிழக்குப் பகுதியையடுத்து மடப்பள்ளி காணப்படுகிறது.

ஆசிரியர்கள் மாணவர்கள் மழை, வெயில் படாது அமைதியாக வழிபாடுகளை மேற்கொள்ள வசதியாக வடக்குத் தெற்காக விசாலமான நீண்ட மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இம் மண்டபத்தினுள் வடக்குச் சுவரையண்டி சுவாமி, பக்தர்கள் வீதி வலம்வர இடைவெளிவிட்டு பிரதான கோயில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மண்டபத்தின் இருபக்கமும் 24 தூண்களும் , பின்புறம் ஒரு தூணும் கொண்டு பொருத்தப்பட்ட மேல்வளைகளில் ஓட்டினால் வேயப்பட்ட கூரை அமைக்கப்பட்டுள்ளது.

**1974 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக வளாகம் திறந்து வைக்கப்பட்டது. வைபவ ரீதியாக இந்த ஆலயத்திலே சிறப்பான அபிஷேக ஆராதனை வழிபாடுகள் இடம்பெற்றன. அன்று இலங்கைப் பிரதமராக இருந்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவால் வளாகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.**

இராமநாதன் தம்முடைய மதிப்பிற்குரிய ஆலோசகரும் சிவாச்சாரியாருமான சிவஸ்ரீ கார்த்திகேயக்குருக்களின் ஆலோசனைகளைப் பெற்றே பெருமளவு காரியங்களை மேற்கொண்டார் எனக் கூறப்படுகின்றது. வழமையாக தெற்கு வாசல் கொண்ட கோயில்கள் அரிதாகக் காணப்படுகின்றபோதிலும் பரமேஸ்வரன் ஆலயம் தெற்கு வாசலாக உருவாக்கப்பட்டமைக்கு பல காரண விளக்கங்கள் குறிப்பிடப்படுகிறன. தமிழகத்திலே மாணிக்கவாசகப் பெருமானைச் சிவபெருமான் குருமூர்த்தியாக எழுந்தருளி ஆட்கொண்ட திருப்பெருந்துறையிலே சுவாமி தெற்கு நோக்கியே எழுந்தருளியிருக்கிறார். சிவபிரான் தெற்கு நோக்கி தட்ஷிணாமூர்த்தியாக எழுந்தருளி சனகர் முதலிய முனிவர்களுக்கு ஞானஉபதேசம் செய்துள்ளார். மாணவர்கள் கல்வி மூலம் உண்மையான அறிவைப்பெற இலட்சியநோக்குடன் கற்க வேண்டும் என்ற குறிக்கோளை உணர்த்தும் வகையில் இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கலாம்.

அதேவேளை யமனுக்குரிய தென்திசை நோக்கி வீற்றிருக்கும் பரமேஸ்வரன் யமபயத்தினைக் களைந்தெறியும் சக்தியை வழங்குவார் எனவும் எண்ணலாம். மேலும் சிவபிரானின் திருமுகங்கள் ஐந்தில் நான்கு திசைகளையும் மற்றையது மேல் நோக்கியும் உள்ளன. எனவே எத்திசையிலிருந்தும் இறைவனை வழிபடலாம். இவ்வாறு பல சான்றுக்காரணங்கள் காமிகம், காரணாகமம் ஆகியவற்றில் உள்ளதாக யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிக பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணன் எடுத்துக்காட்டியுள்ளார்.

இந்தக்கோயிலிலுள்ள லிங்கமும், அம்மன், பிள்ளையார், முருகன், நவக்கிரகங்கள், நந்தி முதலிய கற்சிலைகள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டன. இவற்றுள் நவக்கிரகங்களை விட ஏனையவை ஆரம்பத்திலேயே பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தன. தாமிர விக்கிரகங்களிலே சோமஸ்கந்த திருவுருவம் முதலில் உருவாக்கப்பட்டுள்ள போதிலும், காலப் போக்கில் நடராஜர், சிவகாமி அம்மன் போன்ற விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

பரமேஸ்வராக் கல்லூரிக் காலத்திலே இந்தக் கோயில் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களின் சமய பண்பாட்டுச் செயற்பாட்டு மையமாக விளங்கி வந்தது. நவராத்திரி, திருவெம்பாவை, நடேஷர் அபிஷேகங்கள், தைப்பூசம், இராமநாதன் குருபூசை, மகா சிவராத்திரி, மணவாளக்கோலநாள் முதலிய விழாக்கள் சிறப்பாக நடைபெற்றன.

பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற லண்டன் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைக்கான வகுப்புகள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பண்டிதர் வகுப்புகள், சித்த ஆயுள்வேத வைத்திய வகுப்புக்கள் என்பவற்றில் கற்று வந்த மாணவர்களும் இந்த ஆலயச் செயற்பாடுகளில் பங்குபற்றி கல்வியில் நிறைவு கண்டனர்.

சேர் பொன்.இராமநாதன் இந்த ஆலயத்தினை நிறுவியது மட்டுமன்றி அதனைத் தொடர்ந்து நடத்தும் வகையில் "தான்யலஷ்மி" என்ற பெயரில் சுமார் 350 ஏக்கர் நெற்காணியை கிளிநொச்சியிலே வாங்கி மானியமாக வழங்கியுள்ளார். இதனை விட கொழும்பிலும் இதர இடங்களிலும் பல சொத்துக்களை ஆலயத்துக்கு விட்டுச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இராமநாதனுக்குப் பின் அவரின் மனைவி திருமதி லீலாவதி இராமநாதனும் தொடர்ந்து அவரது மருகர் சு.நடேசபிள்ளையும் பரமேஸ்வராக் கல்லூரி பரமேஸ்வரன் ஆலயம் என்பவற்றின் அறங்காவலர்களாக விளங்கினர். இவர்களின் காலத்திலே கல்லூரிக்கு வருகை தந்த பல்வேறு அரசியல், கல்வி, சமய, பண்பாட்டு பிரமுகர்கள் பரமேஸ்வரன் ஆலயத்தையும் தரிசித்துச் செல்லத் தவறுவதில்லை.

பிரதேச வாரியாக பல்கலைக்கழகங்கள் நிறுவப்படவேண்டுமென ஆணித்தரமாகக் கூறிவந்த இராமநாதனின் கனவு நனவாகும்படி இலங்கைப்பல்கலைக்கழகத்தின் யாழ். வளாகமொன்று நிறுவும் நடவடிக்கைகள் அரசினால் மேற்கொள்ளப்பட்டன. பெரிய நிலப்பரப்பிலே விசாலமான கட்டட வசதிகளுடன் கூடிய பரமேஸ்வராக் கல்லூரி இதற்கெனத் தெரிவு செய்யப்பட்டது.

இந்தத்தீர்மானம் பரமேஸ்வராக் கல்லூரிக்கு மட்டுமன்றி வடபகுதி கல்வித்துறைக்கும் ஒரு திருப்புமுனையாக மாறியது. 1974 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக வளாகம் திறந்து வைக்கப்பட்டது. வைபவ ரீதியாக இந்த ஆலயத்திலே சிறப்பான அபிஷேக ஆராதனை வழிபாடுகள் இடம்பெற்றன. அன்று இலங்கைப் பிரதமராக இருந்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவால் வளாகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கல்லூரிக்கான கோயில் பல்கலைக்கழக கோயிலாக மாறியது. அன்றிலிருந்தே பல்கலைக்கழகத்தில் முக்கியமான வைபவங்கள் தொடங்கு முன் விசேட ஆராதனைகள் இடம்பெறுவது வழக்கமாயிற்று. வளாகம் 1979 இல் யாழ்.பல்கலைக்கழகமாக மலர்ச்சியுற்றது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அம்பாறை மாவட்டம், காரைதீவுப் பிரதேசத்தில்

# வீதி புனரமைப்பில் முறைகேடு; அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவு

எருவில்,நவ.20

காரைதீவு பிரதேசத்தில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வந்த வீதி புனரமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் முறைகேடுகள் இடம்பெற்று வருகின்றன என்று ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தன.

இதனையடுத்து கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ் உதுமாலெப்பை, குழுவொன்றை நியமித்து விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு செயலாளர் ஏ.எச்.எம். அன்சாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சினால் கொங்கிறீட் பாதைகள் கிழக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களிலும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் காரைதீவு பிரதேசத்திலும் வீதி புனரமைப்பு வேலைகள் இடம்பெற்றன. இதன்போது முறையற்ற விதத்தில் வீதி புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனை உயரதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இதுகுறித்து விசாரணைகளை விரைவுபடுத்தி உரிய முறைகேடுகளைக் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.- என்றார். (ச-31)

## நிமிர்ந்து நின்ற தமிழர்கள் இன்று அல்லற்படும் அவலம்

**மட்டு.அரச அதிபர் சொல்கிறார்**



எருவில்,நவ.20

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பல்வேறு துன்பங்களுக்கும் தோல்விகளுக்கும் உட்பட்ட மாகாணங்கள். ஒரு காலத்தில் கல்வியிலும் உயர் பதவிகளிலும் தலை நிமிர்ந்து நின்ற தமிழர் சமுதாயம் இன்று அல்லற்பட்டு வாழும் நிலை ஏற்பட்டுள்ளது- என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு,கல்லடி இராமகிருஷ்ண மிசன் மகளிர் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

30 வருடகால போருக்குப் பின்னர் மீண்டும் எழுந்து நிற்கின்ற இந்த சமூகத்திலே எமது பிள்ளைகளின் கல்விதான் மிக முக்கியமானது. அவர்கள் மீண்டும் எழுந்து நிற்கவேண்டும்.

பாடசாலைக் கல்வியை விடுத்து தனியார் வகுப்புக்களில் முற்றுமுழுதாக தங்கியிருப்பது மாணவர்களுக்கு மட்டுமல்ல பெற்றோருக்கும் அழுத்தங்களை ஏற்படுத்தும் நடவடிக்கையாக உள்ளது.

எனவே பாடசாலைக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பாடசாலை என்பது தனியாகப் புத்தகங்களை மட்டும் கற்பிக்கும் இடமல்ல. மாணவர்கள் வாழ வேண்டிய முறைகள், அவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்க விழுமியங்கள், கலை, கலாசாரம், அவர்கள் எதிர்கால வாழ்வில் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது போன்ற விடயங்களைக் கற்பிக்கும் கலைக்கூடமே பாடசாலையாகும்.- என்றார். (ச-31)



சுவீடன் நாட்டைச் சேர்ந்த ரோட்டரிக் கழகத்தின் 8 பிரதிநிதிகள் திருகோணமலை பொதுவைத்தியசாலையை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்று பார்வையிட்டனர்.

## கணவனை இழந்த பெண்களுக்கு உதவி

மட்டக்களப்பு,நவ.20

ஏறாவூர்பற்று, மயிலம்பாவெளி கிராமத்தில் கணவனை இழந்த பெண்களுக்கு வாழ்வாதார மேம்பாட்டு உதவி வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

மயிலம்பாவெளியில் 51 குடும்பங்களுக்கும், விபுலானந்தபுரத்தில் 55 குடும்பங்களுக்குமாக சுமார் 30 லட்சம் ரூபாபணம் வழங்கப்பட்டது.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரின் நிதியொதுக்கீட்டின் கீழ் இந்த உதவித் திட்டம் வழங்கப்பட்டது. (ச)

## மூடப்பட்ட பாடசாலைகள் நேற்று மீண்டும் திறப்பு

இரத்தினபுரி,நவ.20

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணத்தில் மாணவர்களது திடீர் சுகவீனம் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் மீண்டும் நேற்று திங்கட்கிழமை திறக்கப்பட்டுள்ளன.

கம்பளை, ஜினராஜ மகளிர் பாடசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாணவிகள் திடீர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது அந்தப் பாடசாலையின் மாணவிகள் கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை பலாங்கொடை பிரதேச பாடசாலை ஒன்றிலும் சுகவீனம் காரணமாக மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. எனினும் இந்தத் திடீர் சுகவீனத்துக்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

மாணவர்களுக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டமை குறித்து அச்சம் கொள்ளத்தேவையில்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

## ரூ.20,000 அபராதம்

கண்டி,நவ.20

1,800 கிராம் மான் இறைச்சியை வைத்திருந்ததாகக் கூறப்படும் ஒருவருக்கு அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேகநபர் கலகெதர பொலிஸாரினால் கண்டி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே, நீதிவான் சந்தேகநபருக்கு 20,000 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ச)

## வடிகாலுக்கு அடிக்கல்

அம்பாறை,நவ.20

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள்எழுச்சித் திட்டத்தின் கீழ், ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கோளாவில் வடிகால் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இந்த வடிகால் 37 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

## ஆய்வு கூட அடிக்கல்லை நட்டு வைத்தார் ஹிஸ்புல்லா



மட்டக்களப்பு,நவ.20

ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் காத்தான்குடி மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலை உட்பட மூன்று பாடசாலைகளுக்கு மஹிந்தோதய ஆய்வு கூடத்துக்கான அடிக்கல்லை பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லா நேற்று திங்கட்கிழமை காலை நட்டு வைத்தார்.

பத்து மில்லியன் ரூபா செலவில் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவின் முயற்சியினால் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த ஆய்வு கூட கட்டடத்தில், விஞ்ஞான ஆய்வுகூடம், தகவல் தொழில்நுட்பம், மற்றும் கணித ஆய்வு கூடங்கள் அமைக்கப்படவுள்ளன. இந்தநிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக், காத்தான்குடி நகர முதல்வர் எஸ்.எச்.அஸ்பர், நகர சபை உறுப்பினர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.சுபைர், பாடசாலை அதிபர் யு.எல்.முபாறக் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)

## சிறுவர் பிரச்சினையைக் குறைக்க கிராம மட்டக் குழுக்கள் அவசியம்

**வெருகல் பிரதேச செயலர் கூறுகிறார்**

மட்டக்களப்பு,நவ.20

சிறுவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் குறைப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு கிராம மட்ட குழுக்கள் மற்றும் சமூகத் தலைவர்களின் பங்களிப்பு மிகவும் அவசியமாகும். அவர்கள் தொடர்ந்தும் சிறப்பாக இயங்கவேண்டிய தேவையுள்ளது என்று வெருகல் பிரதேச செயலர் பி.தனேஸ்வரன் குறிப்பிட்டார்.

'சிறுவர்கள் தொடர்பான அரச கட்டமைப்பும், அதன் பொறிமுறைகளும்', 'கிராம மட்ட கண்காணிப்புக் குழுக்களும் அவற்றின் அவசியமும்' ஆகிய தலைப்புகளில் பிரதேச செயலகத்தில் செயலமர்வு இடம்பெற்றது.

இந்தச் செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தச் செயலமர்வில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர் திலங்கா, யுனிசெப் அமைப்பின் ஆலோசகர் எஸ். ரவிச் சந்திரன், பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் வி.நவநீதன், அகம் சிறுவர் திட்ட முகாமையாளர் த.திலீப்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தேசத்துக்கு மகுடம் அபிவிருத்திப் பணிகள் ஏற்பாடு துரிதம்

திருகோணமலை,நவ.20

கிழக்கு மாகாணத்தில் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் இடம்பெறவுள்ள தேசத்துக்கு மகுடம் அபிவிருத்தித் திட்டங்களுக்கு என்று பல கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2013 ஆம் ஆண்டு தேசத்துக்கு மகுடம் நிகழ்வு கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மற்றும் பொலநறுவை மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் பிரதான நிகழ்வுகள் அம்பாறை மாவட்டத்தில் நடைபெறவுள்ளன.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை தேசத்துக்கு மகுடம் கண்காட்சி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

## அம்பாறை டிப்போவுக்கு இரட்டைத் தட்டு பஸ்



எருவில்,நவ.20

தேசத்துக்கு மகுடம் நிகழ்வை முன்னிட்டு போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவினால் 'அம்பாறை பஸ் டிப்போவுக்கு புதிய இரட்டைத் தட்டு பஸ்ஸொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ்ஸின் முதல் பயண சேவை அம்பாறை டிப்போவில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்து பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**இடபம்:** மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் மகிழ்ச்சியுண்டு. குழந்தைகளின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.

**மிதுனம்:** உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலை தூக்கும். உறவினர், நண்பர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்துக்கு ஆளாவீர்கள். மற்றவர்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

**கடகம்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். பிள்ளைகளின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். அயலில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும்.

**சிங்கம்:** புதுப்பொலிவுடன் காணப்படுவீர்கள். கடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். முன்கோபம் விலகும். வியாபாரத்தில் பழைய மிகுதிகளை விரைந்து வசூலிப்பீர்கள். அரசுக் காரியங்களில் அனுகூலம் உண்டு.

**கன்னி:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். வியாபார ரீதியாக சில பிரபலங்களைச் சந்திப்பீர்கள். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் கூடும்.

**நாளை**

கார்த்திகை -06 புதன்கிழமை 21.11.2012
திதி: அட்டமி பி.ப. 01.35 வரை
நட்சத்திரம்: சதயம் பி.இ. 05.39 வரை
சுபநேரம்: 04.40 - 06.10 வரை
ராகுகாலம்: 12.10- 01.40 வரை

**துலாம்:** முகமலர்ச்சியுடன் காணப்படுவீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. எதிர்காலத் திட்டங்களைப் பற்றி நண்பர்களிடம் விவாதிப்பீர்கள். தாயாரின் உடல்நிலை சீராக இருக்கும். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.

**தனுசு:** திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். அரசு விடயங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.

**மகரம்:** ஓய்வெடுக்க முடியாமல் உழைக்க வேண்டி வரும். விமர்சனங்களைக் கண்டு அஞ்சாதீர்கள். கணுக்கால் வலிக்கும். அயலில் உள்ளவர்களுடன் அனுசரணையாகப் பேசுங்கள். வியாபாரத்தில் வேலையாள்களால் விரயம் வரும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**கும்பம்:** எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். அயலவர் சிலரின் செயற்பாடுகளால் கோபம் அடையலாம். பேச்சில் கண்டிப்பு வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களால் பதற்றம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறைமுகப் பிரச்சினைகள் வரும்.

**மீனம்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்தில் அமைதி நிலவும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. மாணவர்களுக்கு படிப்பில் அதிக ஆர்வம் ஏற்படும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | | 2 | 1 | | 8 | | |
| | 2 | | | | 3 | | | |
| | 1 | | 5 | 4 | | | 2 | |
| | | 2 | | | | 7 | | |
| 3 | 4 | 5 | | | 2 | 1 | 8 | 9 |
| | | | | | | 4 | | |
| | 3 | | | 2 | 6 | 5 | 4 | |
| | | | 3 | | | | 9 | |
| | | 6 | | 5 | 4 | | 7 | 1 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 9 | 3 | 2 | 4 | 7 | 1 | 8 |
| 3 | 2 | 4 | 7 | 8 | 1 | 5 | 9 | 6 |
| 8 | 7 | 4 | 6 | 5 | 9 | 4 | 2 | 3 |
| 6 | 1 | 3 | 2 | 9 | 7 | 8 | 5 | 4 |
| 4 | 8 | 7 | 1 | 6 | 5 | 9 | 3 | 2 |
| 2 | 9 | 5 | 4 | 3 | 8 | 6 | 7 | 1 |
| 1 | 4 | 8 | 5 | 7 | 3 | 2 | 6 | 9 |
| 9 | 5 | [illegible] | 8 | 1 | 6 | 3 | 4 | 7 |
| 7 | 3 | [illegible] | 9 | 4 | 2 | 1 | 8 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் போட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

எமக்கு உயிர்தந்து உணர்வாய் எம்முடன் வாழும் தந்தைக்கு

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
13 01 1943

மறைவு
02 12 2011

அமரர் சுப்பையா சிவசுப்பிரமணியம்

(முன்னாள் செயலாளர், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை, முன்னாள் தலைவர், யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசம்)

திதி : 20.11.2012

பண்பும் பாசமும் புகட்டி சிறப்போடு நலமே வாழ
நித்தம் உழைத்திட்ட எம் தெய்வமே!
ஆண்டு ஒன்று கழிந்ததையா இன்றோடு அறிந்தோம்
உமதருமையை உமை பிரிந்த நாள் முதலாய்
அப்பா என்றதும் என்ன என கேட்டபடி ஓடிவரும் நீங்கள்-
அப்பா அப்பா என நாம் கதறியழைத்தும்
வாராதது தான் ஏனோ.........
இத்தனை தான் வாழ்க்கையென
சொல்லி வைத்தவனின் தத்துவங்கள் புரிந்தும்
துடிக்கிறதே எம் மனம் உம் பிரிவால்
உங்கள் ஆத்மா சாந்தியடைந்து மீண்டும் உயிர் பெற்று எமை
வழிநடத்த இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

**சாரதி தேவை**

யாழ் நகரில் இயங்கிவரும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு AD சாரதி அனுமதிப் பத்திரமுள்ள சாரதி தேவை. தகுதியுடையவர் உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 0773565607

(25602)(6-7)

## அம்மாவின் அருள் வாக்கு

ஞான வைரவர் ஆலயம் துன்பம் தீர்க்கும் தெய்வம்
கலியுக நாகபூஷணி அம்மா

26/13 A, பெர்னாண்டோ றோட், வெள்ளவத்தை.

அம்மாவின் அருள் வாக்கு கூறப்படும் நேரம்
காலை : 8.00 - 10.30 மணி வரை
மாலை : 4.00 - 6.00 மணி வரை

திருநெல்வேலி யாழ்ப்பாணத்தில்
21.11.2012
22.11.2012 } அருள் வாக்கு கூறப்படும்

தொடர்புகளுக்கு:
2 ஆவது ஒழுங்கை, கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
T.P : 077 8012226

(25489)(6.7.45)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் சரவணை



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி வடக்கு, விளங்கியாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சரவணை நேற்று முன்தினம் (18.11.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சரவணையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - ஆச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், இராஜேஸ்வரி, இந்திராணி காலஞ்சென்றவர்களான, தவராசா, ஞானசேகரம் மற்றும் சந்திரலேகா, வசந்தாதேவி, தேதீஸ்வரன், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் குலசேகரம், வாசுகி, சுதாஜினி, மேனகா ஆகியோரின் பாசமிகு தாயும், செல்வராணி, கிளாறிஸ், சாந்தகுமாரி, கிரிசாந்தினி, சத்தியகாந்தி, யோகராசா, யுவராசா, சிறிஸ்கந்தராஜா, கெங்காதரன், இளங்கோவன், விஜயகாந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியும், சந்திரபூபதியின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு, விளங்கியாவத்தை,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(25493)(6.7.45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாத்தறை மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிக்க மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரணவால் சீமெந்துப் பைக்கெற்றுக்கள் வழங்கப்பட்டன.

## பயிற்சிக் கல்லூரி களஞ்சியசாலையில் தீ

கொழும்பு,நவ.20

வத்தேகம, பொல்கொல்ல பயிற்சிக் கல்லூரியில் உள்ள களஞ்சியசாலை ஒன்றில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு இந்தத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தீயின் காரணமாக குறித்த களஞ்சியசாலை முற்றாக அழிவடைந்துள்ளது.

பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# சொத்துக்கள் குறித்த தகவல்களை அரசியல்வாதிகள் வழங்கவில்லை

## 'பவ்ரல்' பணிப்பாளர் தகவல்

கொழும்பு,நவ.20

சொத்துக்கள், பொறுப்புக்கள் குறித்து தேர்தல்கள் ஆணையாளருக்கு தகவல் வழங்குவதில் அரசியல்வாதிகள் முறையாகச் செயற்படவில்லை என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராய்ச்சி குற்றம் சாட்டியுள்ளார்.



கடந்த ஜூன் மாதத்துக்கு முன்னர் சொத்துக்கள், பொறுப்புக்கள் குறித்து விவரங்கள் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

சொத்துக்கள், பொறுப்புக்கள் குறித்து தகவல் வழங்காத அரசியல்வாதிகள் குறித்து பொதுமக்களுக்கு தெளிவுபடுத்துமாறு பவ்ரல் அமைப்பு தேர்தல்கள் ஆணையாளருக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஒரு லட்சம் ரூபா பெற முயன்ற பொலிஸ் அதிகாரிகளுக்கு மறியல்

கொழும்பு,நவ.20

ஒரு லட்சம் ரூபா லஞ்சம் பெற முயற்சித்த புறக்கோட்டை பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மற்றும் சார்ஜன்ட் ஆகியோர் லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிருலபனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரிடம் குறித்த லஞ்சப் பணத்தை கோட்டை பொலிஸ் நிலையத்தில் வைத்து பெற்ற போது இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தங்க ஆபரண கடையொன்றில் கொள்ளையிட்ட நபர் மீது சட்டநடவடிக்கை எடுக்காதிருக்க என்றே இந்த லஞ்சம் பெறப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச)

# சிறைச்சாலை ஆயுதங்கள் பாதுகாப்பு அமைச்சிடம்

## ஒப்படைக்குமாறு உத்தரவிட்டது அரசு

கொழும்பு,நவ.20

சிறைச்சாலையின் ஆயுதங்களைப் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளது.இதற்கமைய சிறைச்சாலைத் திணைக்களத்துக்குச் சொந்தமாகக் காணப்பட்ட ஆயுதங்கள் அனைத்தும், பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

**கடந்த 9 ஆம் திகதி இடம் பெற்ற வெலிக்கடை சிறைச்சாலை கலவரத்தின் போது ரி 56 தானியங்கி துப்பாக்கிகளை கைதிகள் பெற்றுக் கொண்டதனால் அதிக அழிவுகள் ஏற்பட்டன.**

ரி 56 ரக துப்பாக்கிகள் அனைத்தும் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கடந்த 16 ஆம் திகதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி இடம் பெற்ற வெலிக்கடை சிறைச்சாலை கலவரத்தின்போது ரி56 தானியங்கித் துப்பாக்கிகளை கைதிகள் பெற்றுக் கொண்டதனால் அதிக அழிவுகள் ஏற்பட்டன.

சில ஆண்டுகளுக்கு முன்னர் கம்பஹாவில் சிறைச்சாலை அதிகாரிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி பாதாள உலகக் குழுத் தலைவர் ஒருவர் தப்பிச் சென்றதைத் தொடர்ந்து, சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு ரி 56 ரக துப்பாக்கிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## முகத்துவாரத்தில் ஹெரோயின் விற்ற தாய், மகன் கைது



கொழும்பு,நவ.20

மட்டக்குளி, முகத்துவாரம் பிரதேச சுற்றிவளைப்பின் போது, ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டிருந்த தாய் மற்றும் மகன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகத்துவாரம், சமித்புர பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட இளைஞரிடமிருந்து 18 கிராம் 700 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது. இதேவேளை கைது செய்யப்பட்ட பெண்ணிடம் இருந்து ஆறு கிராம் 600 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (ச)

## சோதனைக்கு உட்படுத்தப்பட்ட 35 ஆயிரம் வர்த்தக நிலையங்கள்

கொழும்பு,நவ.20

இதுவரையான காலப்பகுதியில் நுகர்வோர் சட்டங்களை மீறிய 35 ஆயிரம் வர்த்தக நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அவ்வாறான வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று அதிகார சபையின் தலைவர் ரூமி மர்ஹூக் தெரிவித்தார். (ச)

## கசகஸ்தான் புறப்பட்டார் மஹிந்த

கொழும்பு,நவ.20

உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கசகஸ்தானுக்கு சென்றுள்ளார்.

மூன்று நாள் பயணமாக நேற்றுக் காலை சிறப்பு விமானத்தில் அவர் கசகஸ்தான் தலைநகர் அஸ்ரானா சென்றுள்ளார்.

கசகஸ்தானில் மூன்று நாள்கள் தங்கியிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதாரம் மற்றும் கனிய வளங்கள் தொடர்பில் முக்கிய கலந்துரையாடல்களை அந்த நாட்டுத் தலைவர்களுடன் மேற்கொள்ளவுள்ளார்.

மத்திய ஆசியாவில் அமைந்துள்ள கனிய வளங்கள் மிக்க நாடாக கசகஸ்தான் காணப்படுகின்றது.

எனவே தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள கனியவள பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள கசகஸ்தானுடன் புதிய ஒப்பந்தங்களை மேற்கொள்ள வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

# எல்லா அதிகாரமும் எனக்கே!

## மேர்வின் சில்வா கூறுகிறார்


கொழும்பு,நவ.20

களனி பிரதேசத்தின் எல்லா அதிகாரமும் எனக்கே உள்ளது என்று அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

களனி பிரதேசத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளை முன்னிட்டு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய தேர்தல் சட்டத்தின் அடிப்படையில் மட்டுமே களனி தேர்தல் தொகுதியில் போட்டியிட முடியும்.



களனியில் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்படுவதை எவராலும் தடுக்க முடியாது. எதிர்காலத்தில் நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் எமது பரிந்துரையுடன் கூடிய வேட்பாளர்கள் மட்டுமே போட்டியிடவுள்ளனர்.

சாதாரண வீடுகளில் வாழ்ந்த சில அரசியல்வாதிகள் இன்று அடுக்கு மாடிக் கட்டடங்களில் வாழ்ந்து வருகின்றனர். மோசடியான முறையில் பணம் சம்பாதித்து இவ்வாறு வீடு கட்டியுள்ளனர்.- என்றார். (ச)

# வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகள் திட்டமிட்டே படுகொலை

## பெயர் கூறி அழைக்கப்பட்டு சூடு

கொழும்பு,நவ.20

வெலிக்கடைச் சிறைச்சாலையில் அண்மையில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவத்தின்போது பல கைதிகள் திட்டமிட்ட முறையில் படு கொலை செய்யப்பட்டனர் என்று சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. சிறைச்சாலையில் வன்முறை அடக்கப்பட்ட பின்னர் கைதிகள், சிறப்பு அதிரடிப் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர் என்று சிறைச்சாலை அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கலவரம் முற்றாக முடிவுக்கு வந்த பின்னர் கைதிகள் அனைவரும் சிறைக் கூண்டுக்குள் சென்றனர். அதன்பின்னர் சிறப்பு அதிரடிப்படையினர் பெயர்ப்பட்டியல் ஒன்றுடன் வந்து அவர்களை வெளியே வருமாறு அழைத்தனர். இவ்வாறு வெளியே அழைக்கப்பட்டவர்கள் 11 பேர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டனர் என்று சிறைச்சாலை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

சிறைச்சாலையில் நடைபெற்ற உண்மையான நிலை குறித்த தகவல்கள் வெளியே கசிவதைத் தடுக்கும் வகையில் அதிகாரிகள் பலர் தொலைபேசியில் கதைக் கும்போது ஒட்டுக் கேட்கப் படுகிறது.

இவ்வாறான அச்ச சூழ்நிலை காரணமாக பல தகவல்களை வெளியிட சிறைச்சாலை அதிகாரிகள் தயங்குகின்றனர் என்று கூறப்படுகிறது. (ச)

# மனநிலை பாதிக்கப்பட்ட இளைஞன் குத்திக் கொலை

## சந்தேகத்தில் நால்வர் கைது

கொழும்பு,நவ.20

பொரலஸ்கமுவ, திவுலபிட்டி வீதியில் மனநிலை பாதிக்கப்பட்ட இளைஞன் கத்தியால் குத்திக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தக் கொலை குறித்து நேற்று திங்கட்கிழமை அதிகாலை பொரலஸ்கமுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சனக அமில (வயது-22) என்ற இளைஞனே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கங்கொடவில நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

பொரலஸ்கமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# அனுமதி இன்றி மாவின் விலை உயர்த்தப்பட்டதா?

இரண்டு கோதுமை மா நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. பிறிமா மற்றும் செரண்டிப் ஆகிய நிறுவனங்களுக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அதிகார சபையின் தலைவர் ரூமி மர்ஷூக் தெரிவித்தார்.

தமது அனுமதியின்றி பல சந்தர்ப்பங்களில் மாவின் விலையை அதிகரித்தமையே இதற்குக் காரணம் என்று அவர் மேலும் கூறினார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தம்பையா தர்மலிங்கம்

(ஓய்வுபெற்ற தபாலதிபர், அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் கோயில் பரிபாலனசபைத் தலைவர்)

திதி: ஸப்தமி: 20.11.2012

அன்னை மடியில் 24.02.1939

நல்லூரான் சந்நிதியில் 02.11.2011

ஆண்டு ஒன்று சென்றாலும் இன்றும் நீங்கள் தான் எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கும் குடும்பவிளக்கு.

அரியாலை. குடும்பத்தினர். (25620) (45.6.7)

# நீண்டகாலம் திருத்தப்படாத கிழக்கு அரியாலை வீதி

கொழும்புத்துறை, நவ.20

கிழக்கு அரியாலைக்குச் செல்லும் பிரதான வீதி நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாது உள்ளது என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் அமைந்துள்ள பூம்புகார், கிழக்கு அரியாலைக் கிராம மக்கள் இரண்டு வருடங்களுக்கு மேலாக அப்பகுதிகளில் மீளக் குடியமர்ந்து விவசாயம், மீன்பிடித் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பகுதிகளிலுள்ள மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளுக்காகவும், தொழிலாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த நகருக்குச் செல்லவும் இந்த ஒரேயொரு வீதியையே பயன்படுத்த வேண்டியுள்ளது.

இந்த வீதியிலுள்ள நாவலடிக் கிராமத்தில் அமைக்கப்பட்ட இந்திய உதவி வீட்டுத்திட்டத்தைத் திறந்து வைக்கும் முகமாக கடந்த ஆண்டு நாவலடி வரைக்கும் குறித்த வீதி செப்பனிடப்பட்டது.

அதற்கு அப்பால் சுமார் 3 கிலோமீற்றர் வரையான வீதி மிகவும் சேதமடைந்து பயணம் செய்யமுடியாது குன்றும் குழியுமாக காட்சி தருகின்றது.

சுமார் 25 வருடங்களுக்கு மேலாகத் திருத்தம் செய்யப்படாத இந்த வீதியின் போக்குவரத்து அடுத்து வரும் மழை காலங்களில் மேலும் மோசடையும் என்று அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

200 குடும்பங்களுக்கு மேல் வசித்து வரும் இப்பகுதி மக்கள் வீதியைப் புனரமைத்து போக்குவரத்தை இலகுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

(ம-135)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்




கொழும்பு இராஜகிரிய - ஸ்ரீ ஜயவர்த்தனபுர இந்து வித்தியாலயத்தை தனித்தமிழ் வித்தியாலயமாக உருவாக்கி அப்பகுதி வாழ் தமிழ் மக்களுக்கு பெரும் சேவையாற்றிவரும் இடைக்காடு தம்பாலையைச் சேர்ந்த

கந்தசாமிஐயர் இரமணீசுரசர்மா

அவர்கள் மேல்மாகாணத்தின் சிரேஷ்ட பணிக்குத் தலைமைத்துவத்தை வழங்கிப் பாடசாலையை வெற்றியின் பாலிட்டுச் சென்ற மிகவுயர் சேவைக்காக சிறந்த அதிபராக ஜனாதிபதி அவர்களால் குரு பிரதீபா பிரபா - 2012 விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையை பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் பணியில் மேன்மேலும் உயர்ச்சி பெற இறையருளை வேண்டுகின்றோம்.

தம்பாலை, இடைக்காடு, வளலாய் வாழ்மக்கள்.

(25614)(6.7.8)


# 40ஆம் நாள் நினைவு ஆராதனை

நீதிமான் மடிந்து போகிறான், ஒருவரும் அதை மனதில் வைக்கிறதில்லை; புத்திமான்கள் எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள், ஆனாலும் தீங்குவராததற்கு முன்னே நீதிமான் எடுத்துக் கொள்ளப்படுகிறான் என்பதைச் சிந்திப்பார் இல்லை. [ஏசா 57:1]

மண்ணில் 07 * 11 * 1994



விண்ணில் 13 * 10 * 2012

அமரர் விஜயச்சந்திரன் டினேஷ்

(சென்.ஜோன்ஸ் கல்லூரி 2013 வர்த்தகப்பிரிவு மாணவன்)

எம் செல்வ மகனே டினே!

நீ எம்மை விட்டுப்பிரிந்து 40 நாள்கள் வெகு விரைவில் கடந்து சென்றாலும் 40 நாள்கள் அல்ல 40 வருடங்கள் கடந்து சென்றாலும் உன் மழலை மொழிகள் எம்மை விட்டு நீங்காதையா இந்த மண்ணில் உன்னைப் பிரிந்தாலும் விண்ணில் உன்னை காண்போம் என்ற நம்பிக்கையில் மிகுதி நாள்களைக் கழிப்போம், நீங்காத நினைவாய் என்றும் எம் உள்ளத்தில் உள்ளாய் மகனே!

நாளை (21.11.2012) புதன்கிழமை எமது இல்லத்தில் மு.ப.10.00 மணியளவில் ஆராதனை நடைபெற உள்ளதால் அனைவரும் ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுங்கள். இந்த அழைப்பினை உங்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

88/46,சிவன் புதுவீதி, மணல்தறை லேன், கந்தர்மடம். (25619)(5-6-7)

என்றும் உன் நினைவுகளுடன் பெற்றோர்.

# மாபெரும் இலவச முன்னோடிக் கருத்தரங்கு

பரீட்சை வழிகாட்டலுக்கான மாதிரி வினாத்தாள் கருத்தரங்கு

பாடங்கள் ★ கணிதம் ★ ஆங்கிலம் ★ விஞ்ஞானம்

காலம்: 22, 23 rd November - 2012

நேரம்: 09 am to 04 P.m.

இடம்: இணுவில் கந்தசாமி கோயில் இளந்தொண்டர் சபை மண்டபம்

கொழும்பு பிரபல ஆசிரியர் குழாமினால் கருத்தரங்குகள் நடத்தப்படும் ஒவ்வொரு மாணவருக்கும் விசேட மாதிரி வினாத்தாள்கள் விடையுடன் இலவசமாக வழங்கப்படும். (25615)(45.6)

# துயர் பகிர்கிறோம்



எமது கல்வி முதுமாணி கற்கைநெறி (MEd) சக ஆசிரியரான

செல்வி கந்தலீலா நடராசா

அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி நடராசா நகுலாம்பிகை

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு, அவரின் குடும்பத்தாரின் துயரிலும் பங்குகொள்கின்றோம்.

கல்வி முதுமாணி கற்கை இணைப்பாளர், விரிவுரையாளர்கள், சக ஆசிரியர்கள், தேசிய கல்வி நிறுவக பிராந்திய கற்கை நிலையம், யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி. (25613) (45.6.7)

# மரண அறிவித்தல்

## திருமதி கலைவாணி குணராசசிங்கம்



கிராமக்கோடு,மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் கிழக்கு வளவு, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கலைவாணி குணராசசிங்கம் நேற்று (19.11.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பு-அருந்தவநாயகி தம்பதியரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-பொன்னுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற குணராசசிங்கத்தின் (சவாரிப் பெரியண்ணை) அன்பு மனைவியும் ரோகினி (அதிபர், யா/நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம்), அனுசன் ஆகியோரின் அருமைத் தாயும் தயானந்தனின் பாசமிகு மாமியும் ரவிசாந் (யா/யூனியன் கல்லூரி),சங்கவி (யா/வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர் களான குமாரசிங்கம், ஜெயலக்சுமி மற்றும் சுந்தரலிங்கம் (லிங்கண்ணை) ஆகியோரின் மைத்துனியும்ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்று(20.11.2012) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கபதி, கிழக்கு வளவு, மல்லாகம். (25617)(5-6-7)

தகவல்: கு.அனுசன் (மகன்).


## விற்பனைக்கு

ஆங்கில தட்டச்சு புத்தம் புதியது, தொலைநகல் இயந்திரம் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 7740377 (25611)(6-7)

## JOIN OUR BIO GROUP

20 திறமைமிக்க சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர்களுக்கான சந்தர்ப்பம்.......

Call now:077 039 9883

SARA- Jaffna (25612)(5-7-6)

## வான் விற்பனைக்கு

62-xxxx தொடரிலக்கமுடைய (HAIRS) வான் விற்பனைக்கு உண்டு.

(25609)(5-6-7) தொடர்பு: 077 741 9216

## விற்பனையாகிறது

மூன்றாந்தவணை அறிவொளி, பரீட்சைநோக்கு, பரீட்சைப் பொதி, சைவச்சுடர் மற்றும் O/L பரீட்சைக்கான இறுதிக்கருத்தரங்கு விஞ்ஞான வழிகாட்டி செயலட்டைகள் அன்னை, பூபாலசிங்கம், துர்க்கா, அறிவுநதி, கமலா புத்தகசாலைகளில் - தொடர்புகள் ஸ்ரார் பப்ளிகேசன் இ.நிர்மலன் 0777413990


# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.09.2011 வரை அடகு வைத்து (மீட்புக்காலம் ஒருவருடத்துக்கானது) மீட்கப்படாத நகைகளும், 31.03.2012 வரையும் அடகு வைத்து (மீட்புக்காலம் 6 மாதத்துக்கானது) மீட்கப்படாத நகைகளும் - 08.12.2012, 09.12.2012, 15.12.2012, 16.12.2012 ஆகிய தினங்களில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | - |
| நெல்லியடி | - |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# கட்டுவன் சனசமூக இளைஞர்கள் முன்மாதிரி சிரமதானத்தில் ஈடுபடுகின்றனர் வாரம் ஒருநாள்

அளவெட்டி, நவ.20

கட்டுவன் மேற்கு வள்ளுவன் சனசமூக நிலைய இளைஞர்களின் முயற்சியால் அந்தக் கிராம சுற்றுச்சூழல்பகுதிகள் சிரமதானப் பணிமூலம் சுத்தம் செய்யப்பட்டுவருகின்றன.

மேற்படி சனசமூக நிலையத்தினரால் வாரத்தில் ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை பிரதேச சபையின் அனுசரணையுடன் வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் சிரமதானப் பணி செய்வதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இப் பிரதேசத்தில் மிகவும் அச்சுறுத்தலாக உள்ள உயிர்க் கொல்லி நோயான டெங்கைப் பரப்பும் நுளம்புகளை அழித்தல் அண்மையில் மீள்குடியமர்ந்து அடிப்படை வசதிகளின்றி வாழும் மக்களுக்கு உதவியாக பிரதேசத்தில் காணப்படும் காடுகள், பற்றைகள் என்பவற்றை அகற்றி சுத்தம் செய்தல். என்பவற்றை இலக்காக வைத்தே இந்தச் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆரம்பத்தில் இந்தச் சிரமதானப் பணியில் 10, 12 பேர் மட்டுமே பங்களித்தனர். ஆனால் தற்போது இறுதியாக மேற்கொண்ட சிரமதானத்தில் 30 பேர் வரை கலந்துகொண்டனர்.

இந்தப் பணிக்கு இளைஞர்களின் ஒத்துழைப்பும் பொதுமக்களின் ஆதரவும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதன் மூலம் நாம் மேற்கொண்டுவரும் சிரமதானப்பணி வாரத்தில் ஒருநாள் தொடரும் என்று மேற்படி சனசமூக நிலைய தலைவர் தெரிவித்துள்ளார். (3-36)

# காக்கைதீவு துறைமுகப் பகுதிக்கு எப்போது கிடைக்கும் மின்சாரம்?

காக்கைதீவு துறைமுகப் பகுதி நீண்டகாலமாக மின்சார வசதி இன்றிக் காணப்படுகின்றது.

இதனால் இரவு நேரங்களில் கடற்றொழிலாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வடக்கின் வசந்தத்தின் கீழ் இந்தத் துறையை நவீனமயப்படுத்தித் தரலாம் என உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருந்தும், இதுவரை இந்தப் பகுதிக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை.

இதனால் இரவு 9மணி வரை கூடும் மீன் சந்தைக்கு கடலுணவுகளைப் பெற வருவோர் 'ரோச் லைற்' வெளிச்சத்திலும், மோட்டார் சைக்கிள் வெளிச்சத்திலும் கடலுணவுகளை வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதேநேரம் மீன்களை நிலத்திலும், உரப் பைகளிலும் கொட்டி விற்பனை செய்வதால் சுகாதாரச் சீர்கேடும் ஏற்பட ஏதுவாகின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க மாட்டார்களா? என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (3-100)

# டிப்ளோமாக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் விசேட தேவைகள் சார் பட்ட மேற்கல்வி டிப்ளோமாக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு பட்டதாரி ஆசிரியர்கள், கல்விசார் பதவியினர் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரிகள் 18.12.2012 இற்கு முன்னதாக விண்ணப்பங்களை யாழ். பிராந்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கலாம் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (3)

# மாவிட்டபுரம் பராசக்தி ஆலயத்துக்கு நிதி உதவி

வலி.வடக்கு, நவ.20

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மாவிட்டபுரம் ஸ்ரீபராசக்தி ஆலயத்துக்கு பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக உயர் பாதுகாப்பு வலய மாக இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதியில் அமைந்துள்ள ஆலயம் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

மீளக்குடியேறிய மக்கள் உடனடியாக ஆலய வழிபாட்டை மேற்கொள்வதற்கு வசதியாக யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் தனக்கு ஒதுக்கிய நிதியில் இருந்து 25 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளார்.

ஆலய பரிபாலன சபையினர் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து இந்தநிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (3-86)

# கைதடிப் பிரதேசத்தில் நுளம்பு பெருக்கம்

கைதடி,நவ.20

கைதடிப் பிரதேசத்தில் நுளம்பின் பெருக்கம் அதிகரித்திருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பிரதேசத்தில் அண்மையில் பெய்த மழையைத் தொடர்ந்து பெருமளவு நுளம்புகள் பெருகிக் காணப்படுகின்றன. இதனால் டெங்கு நோய் ஏற்படக்கூடிய அதிக வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை இவற்றைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனப் பலராலும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிகள் உடனடியாகக் கவனமெடுத்து இவற்றை முற்றாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோருகின்றனர். (3-288)

# முள்ளிவெளி பிரதேச பாலத்தின் புனரமைப்புப் பணி இடைநிறுத்தம்

## தொடர்ந்து பெய்த மழையால்

கொடிகாமம்-பருத்தித்துறை வீதியில் முள்ளிவெளிப்பிரதேசத்தில் பாலம் அமைக்கும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது. இரண்டு வருடங்களுக்கு மேலாக பழுதடைந்த நிலையில் இருந்த பாலம் உடைக்கப்பட்டு பதிலாக புதிய பாலம் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் அண்மையில் பெய்த கடும் மழையால் கடந்த ஒரு மாதகாலமாக பாலத்தின் கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

உடைக்கப்பட்ட பாலப் பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்பதனால் புனரமைப்புப் பணிகளைத் தொடரமுடியாத நிலை காணப்படுகின்றது. கட்டுமானப் பணிகள் தொடங்குவதற்காக தற்காலிகமாக அமைக்கப்பட்ட பாலத்தின் ஊடாக தற்சமயம் போக்குவரத்து இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-122)


ஜெய் குருதேவ்
பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்
தியானம் பிராணாயாமா, சுதர்சன கிரியா, யோகாசனங்கள் ஆகியவை பயிற்றுவிக்கப்படுகின்றது.
திகதி:- 20.11.2012 - அறிமுக உரை - மாலை 5 மணி
இடம்:- நல்லூர் மகேஸ்வரன் மணிமண்டபம்
T.P.0770474757, 0777607008
(25607) (2-6-7)

கடை வாடகைக்கு
பருத்தித்துறை, மெத்தை கடை சந்தியில் தும்பளை வீதியில் அமைந்துள்ளது.
தொடர்பு:077 724 3354

10 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
06.09.1932

இறப்பு
11.11.2002

ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தரும் பிரபல விஷகடி வைத்தியரும் சமூக சேவையாளரும், மும்மொழி வித்தகருமாகிய


அமரர் செல்லையா திருநாவுக்கரசு

கடந்த 11.11.2002 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்ப ஒளி விளக்கு அமரர் செல்லையா திருநாவுக்கரசு அவர்களின் 10 ஆவது ஆண்டு நினைவஞ்சலி இன்று (20.11.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் மறவன்புலோவில் அமைந்துள்ள வராகி அம்மன் ஆலயத்தில் இடம்பெறும் இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும். மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மறவன்புலோ கிழக்கு,
சாவகச்சேரி. (21596) (45.6.7)

குடும்பத்தினர்.

உங்கள் பரீட்சை வெற்றி எனது கையில்
இப்படிக்கு புலமை 06
என்னுடன் இணைந்து
நீங்களும் வெற்றியாளராகுங்கள் 5




உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855
விளம்பரத்தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பி.சி.எச்.எஸ் நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த மாதம் 8 ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களுடன் சான்றிதழ் பெற்றோர் காணப்படுகின்றனர். (த)

# கிரிப்டன் ஸ்விட்ஸின் 20 ஆவது விநியோகத்தராக பிலியந்தலை, கண்டி ஹாட்வெயார் நியமிப்பு

அபிமானம் பெற்ற நஷனல் பிவிசி நீர்க் குழாய்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் தயாரிப்பு நிறுவனமான சென்ரல் இன்டஸ்ரீஸ் பிஎல்சி நிறுவனத்தின் மூலம், கிரிப்டன் ஸ்விட்ச் வகைகளை விற்பனை செய்வதற்கான 20 ஆவது அங்கீகாரம் பெற்ற விநியோக முகவர் நிறுவனமாக பிலியந்தலை, மடபாத்தப் பகுதியைச் சேர்ந்த ''கண்டி ஹார்ட்வெயார்'' நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

கிரிப்டன் இலத்திரனியல் ஸ்விட்ச் வகைகள் மற்றும் உதிரிப்பாகங்களை நாடு முழுவதும் விற்பனை செய்வதற்கான விநியோகத்தர்களை நியமிக்கும் திட்டத்தின் ஓரங்கமாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கிரிப்டன் இலத்திரனியல் ஸ்விட்ச் வகைகள் மற்றும் உதிரிப்பாகங்கள் போன்றன 100 வீதம் உள்நாட்டில் தயாரிக்கப்படுவதுடன், இவை "Click.. on to Reliability" எனும் தொனிப் பொருளுக்கு அமைவாக உயர் தரங்களுக்கு அமைய, வெவ்வேறு வடிவத் தெரிவுகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

''கண்டி ஹார்ட்வெயார்'' நிறுவனத்தை அங்கீகாரம் பெற்ற முகவராக நியமிக்கும் நிகழ்வு இல. 143/2, மாகந்தர வீதி, பிலியந்தலை எனும் முகவரியில் அமைந்துள்ள ஹார்ட்வெயார் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சென்ரல் இன்டஸ்ரீஸ் பிஎல்சி நிறுவனத்தின் விற்பனை முகாமையாளர் பிரியங்கர பாயாகலகே கருத்துத் தெரிவிக்கையில், ''எமது கிரிப்டன் ஸ்விட் வகைகள் மற்றும் உதிரிப்பாகங்களுக்கு அதிகரித்துச் செல்லும் கேள்விகளை நிவர்த்தி செய்யும் வகையில், நாடு பூராகவும் எமது அங்கீகாரம் பெற்ற விநியோகத்தர்களை நியமிக்கும் திட்டமொன்றை நாம் ஆரம்பித்திருந்தோம்.

இந்தத் திட்டத்துக்கு அமைய, நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் ஏற்கனவே நாம் அங்கீகாரம் பெற்ற முகவர்களை நியமித்துள்ளோம். இதர பகுதிகளில் நாம் வேகமாக எமது விஸ்தரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

இதன் மூலம் எமது தயாரிப்புக்களின் மீது அதீத நம்பிக்கை கொண்டுள்ள எமது வாடிக்கையாளர்களுக்கு எமது தயாரிப்புகளை கொள்வனவு செய்வதில் சிக்கல் நிலைகள் தோன்றக்கூடாது என்பது எமது முக்கிய நோக்காக அமைந்துள்ளது''- என்றார். (த)

# தங்க மயில் விருதை வென்ற கெய்ன் இந்தியா

ஆசியாவில் மிக வேகமாக வளர்ந்து வருகின்றதும் இந்தியாவின் முன்னிலை எண்ணெய் மற்றும் எரிவாயு அகழ்வாராய்ச்சி நிறுவனமுமான கெய்ன் இந்தியா 2012 இற்கான 'கூட்டாக நிறுவன ஆளுகைக்கான தங்க மயில்' விருதை வென்றெடுத்துள்ளது.

பிரித்தானியாவின் சமூக மற்றும் உள்ளூராட்சி மன்றத்துக்கான வெளிவிவகார செயலாளர் எரிக் பிக்கல்ஸிடமிருந்து கெய்ன் நிறுவனம் சார்பாக அதன் அனர்த்த பாதுகாப்பு பணிப்பாளரும் கூட்டு நிறுவன செயலாளருமான நிர்ஜா சர்மா விருதினைப் பெற்றுக்கொண்டார்.

சுவீடனின் முன்னாள் பிரதமரும் வனாந்தரம் மற்றும் சூழல் பாதுகாப்பு அபிவிருத்திக்கான உலக ஆணைக்குழுவின் இணைத் தலைவருமான ஒலா உல்ஸ்டனும், பணிப்பாளர்களுக்கான இந்திய நிறுவனத்தின் தலைவரான லெப்டினன்ட் ஜெனரல் ஜே.எஸ். அளுவாலியா ஆகியோரும் விருது வழங்கும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். இந்த விருதை வென்றெடுத்தமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த கெய்ன் இந்தியாவின் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் பி.இளங்கோ, எமது வர்த்தக நடவடிக்கைகள்-உயர்ரக தரங்களை கொண்டும், சிறப்பான ஒழுக்க நெறிமுறைகளையும் சிறந்த செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது.

இதன்மூலம் கூட்டாக நிறுவன ஆளுகையின் கீழ் உத்தரவாதம், பொறுப்பு ஆகியவற்றை மேம்படுத்தி எமது பங்காளர்களையும் பாதுகாக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்' எனக் கூறினார். கடந்த 17 ஆண்டுகளாக கெய்ன் இந்தியா ஹைதரோகார்பன் ஆய்வு, கண்டுபிடிப்பு ஆகியவற்றை மேற்கொண்டுள்ளதுடன் தமது நடவடிக்கைகள் மூலம் நாளாந்தம் 200,000 பீப்பாய் கச்சா எண்ணெய் உற்பத்தி செய்கின்றது. இது இந்தியாவின் நாளாந்த உற்பத்தியின் 20வீதமாக அமைந்துள்ளது. (த)

# சிறந்த கட்சி கூட்டத்துக்கான விருது வென்றது ஆர்ப்பிகோ

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற 2012 நிர்மாணத் துறையை சேர்ந்த கண்காட்சியில், சிறந்த காட்சிகூடத்தை அமைத்திருந்தமைக்கான விருது, றிச்சர்ட் பீரிஸ் குழுமத்தின் (ஆர்பிகோ) தேசிய உற்பத்தி மற்றும் விநியோக பிரிவுக்கு வழங்கப்பட்டிருந்தது. இலங்கையின் நிர்மாணத் துறையை சேர்ந்த பல்வேறு நிறுவனங்கள் பங்கேற்றிருந்த இந்த 2012 கண்காட்சியின் விருதுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ராலின் தலைமையின் கீழ் கொழும்பு கலதாரி ஹோட்டலில் இடம்பெற்றது.2012 கண்காட்சியை பார்வையிட வருகை தந்திருந்த பார்வையாளர்கள் அநேகமானோரின் கவனத்தையும் ஈர்த்திருந்தது றிச்சர்ட் பீரிஸ் குழுமத்தின் காட்சிக் கூடம். (த)

# ஜனசக்தியின் மோட்டார் கிளினிக்



வாகன உரிமையாளர்களுக்கு தமது வாகனங்களை முறையாகப் பராமரிப்பது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் அனுராதபுரத்தில் மோட்டார் கிளினிக் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

காப்புறுதி நிறுவனமொன்றின் மூலம் முதன் முறையாக இவ்வாறானதொரு விழிப்புணர்வுத் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நடவடிக்கைக்காக இலங்கை மோட்டார் வாகன ஆய்வு மற்றும் பயிற்சி கல்வியகத்தின் வழிகாட்டல்களையும் ஜனசக்தி பெற்றிருந்தது.

இந்த நிகழ்வில் ஜனசக்தி புல் ஒப்ஷன் சென்ரரை சேர்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் சுமார் 244 வாகனங்களை பரிசோதித்து, உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங் கியிருந்தனர். வாகனங்களின் என்ஜின் கொன்ரோல் சிஸ் டம்ஸ் மற்றும் ட்ரான்ஸ் மிஷன் கொன்ரோல்ஸ் போன்றவற்றை இவர்கள் பரிசோதித்திருந்தனர்.

அத்துடன், இந்த அனைத்து 244 வாகனங்களினதும், எயர் கண்டிஷன் மற்றும் கிளைமேட் கொன்ரோல் சிஸ்டம் போன்றவையும் பரிசோதிக்கப்பட்டிருந்ததுடன், பெயின்ட் மற்றும் வெளிக் கட்டமைப்பு நிலைகள் குறித்தும் மேற்பார்வை செய்யப்பட்டன.

ஜனசக்தி நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் தலைமை அதிகாரி ரவி பால்ராஜ் கருத்துத் தெரிவிக்கையில், ''வாகனங்கள் குறித்த அடிப்படை அறிவும் ஆளுமையையும் கொண்டிருப்பதன் மூலம் பெருமளவான தொகையை பழுது பார்த்தலுக்காகச் செலவிடத் தேவையில்லை. (த)

# எக்ஸ்போ லங்கா ஹோல்டிங்ஸின் வரிக்கு முன்தேறிய இலாபம் உயர்வு

எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. நிறுவனமானது, 2012/13 நிதியாண்டின் முதலாம் அரையாண்டில் ஒன்றுதிரட்டிய வரிக்குப் முன்னரான தேறிய இலாபத்தை ரூபா 1,007 மில்லியனாக அதிகரித்துக் கொண்டுள்ளது.கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட ரூபா 861 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 17% அதிகரிப்பாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாம் காலாண்டில் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 546 மில்லியனாக பதிவுசெய்யப்பட்டுள்ளமையானது, கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 23% அதிகரிப்பாக காணப்படுகின்றது.2012/13 ஆம் நிதியாண்டின் முதலாவது காலாண்டில் ரூபா 12.64 பில்லியனையும் முதல் 6 மாதங்களில் ரூபா 23.04 பில்லியனையும் நிறுவனம் வருமானமாக உழைத்துள்ளது.கடந்த வருடத்தின் தொடர்புபட்ட காலப்பகுதிகளில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 8.64 பில்லியன் மற்றும் ரூபா 17.06 பில்லியனுடன் ஒப்பிடுகையில், இவை முறையே 46% மற்றும் 35% அதிகரிப்பாக அமைந்துள்ளது.சரக்கு அனுப்புதல் மற்றும் உபகரண வழங்கல் துறையின் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் இரண்டாம் காலாண்டில் ரூபா 443 மில்லியனாகவும் முதலாம் அரையாண்டில் ரூபா 768 மில்லியனாகவும் பதிவுசெய்யப்பட்டது.

பயணம் மற்றும் விடுமுறைகால வசதிகள் துறையானது முதலாம் அரையாண்டு காலப்பகுதியில் வரிக்கு முன்னரான தேறிய இலாபமாக பெற்றுக்கொண்ட ரூபா 87 மில்லியன், தனிச்சிறப்புமிக்க விதத்திலான 280% அதிகரிப்பாக காணப்படுகின்றது. (த)

# விவசாயிகளின் அங்கீகாரத்தைப் பெறும் முதல் விவசாய நோக்கிலான நீர்ப் பம்பி

இலங்கையில் விற்பனையாகும் முன்னணி நீர்ப் பம்பி வர்த்தக நாமமான ''ஆர்பிடெக்'' மூலம் தயாரிக்கப்படும் நீர்ப் பம்பிகள், இலங்கையின் விவசாயத் துறையில் பயன்படுத்தப்படும் சிறந்த மின் நீர்பம்பியாகத் தரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த தரப்படுத்தலை மஹாஇலுக்பல்லமப் பகுதியில் அமைந்துள்ள விவசாயிகள் பொறியியல் ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. 3 வெவ்வேறான [illegible] சக்தி வாய்ந்ததாக ஆர்பிடெக் மூலம் நீர்ப் பம் பிகள் விவசாய பாவனைக் கென விசேடமான முறையில் அமைந்ததாக சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. இலங்கையில் இந்த தரப்படுத்தல் அந்தஸ்தை பெறும் ஒரே நீர்ப் பம்பி நாமமாக ஆர்பிடெக் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனத்தின் உள்நாட்டு உற்பத்தி மற்றும் விநியோக பிரிவின் முகாமைத்துவப் பணிப்பாளரான சுனில் லியனகே கருத்துத் தெரிவிக்கையில், நாம் விற்பனை நடவடிக்கைகளின் போது கையாண்ட உயர்தர நிர்ணயங்களின் காரணமாகவும், நீடித்து உழைக்கக் கூடிய திறனைக் கொண்டிருப்பதன் காரணமாகவும் ஆர்பிடெக் நீர்ப் பம்பிகள் சந்தையில் முன்னிலைக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. விவசாயிகள் பொறியியல் ஆராய்ச்சி நிலையத்தின் மூலம் கிடைத்துள்ள சான்றானது, எமது அர்ப்பணிப்பையும் சந்தையில் வெளியிடும் உற்பத்திகளின் உயர் தரத்தை உறுதி செய்யும் வகையில் அமைந்துள்ளது'' என்றார்.

வீட்டுப்பாவனை, தொழில் சார் மற்றும் விவசாயத்துறை போன்ற பல்வேறு தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ளக்கூடிய வகையில் ஆர்பிடெக் நீர்ப்பம்பிகள் வெவ்வேறு தெரிவுகளில் காணப்படுகின்றன.

அத்துடன் இந்த பம்பிகள் அனைத்தும் துருப்பிடிக்காத ஸ்ரீல் கொண்டு தயாரிக்கப்படுகின்றமை விசேட அம்சமாகும். மேலும், இந்த பம்பிகள் தூய இரும்புகளைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றமையால், நீர் இறைக்கும் சந்தர்ப்பங்களில் எவ்விதமான சோமாணப்பதார்த்தங்களையும் நீருடன் சேர்க்க மால் 100% வீதம் தூய நீர் இறைக்கப்படுவதை உறுதி செய்கிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், நவ.20

இணுவில் கந்தசுவாமி கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேக நிகழ்வு நாளைமறுதினம் வியாழக்கிழமை மாலை 4மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகவுள்ளது. மறுநாள் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணி 59 நிமிடம் தொடக்கம், 10 மணி 41 நிமிடம் வரை கும்பாபிஷேக நிகழ்வு நடைபெறவுள்ளது. (எ)

## பிற்போடப்பட்டது பயிற்சிப் பட்டறை

யாழ். மாவட்டத் தொழில் அலுவலகத்தினூடாக நடைபெறவிருந்த பயிற்சிப் பட்டறை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தப் பட்டறை புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று தினங்களிலும் நடைபெற விருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

# இராவணன் காலப் பழைமையான சுரங்கப் பாதை வெள்ளவாயவில்

இராவணன் காலத்து. மிகவும் பழைமையான சுரங்கப்பாதை ஹெல்ல- வெள்ளவாய பிரதேசத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஹெல்ல- வெள்ளவாய வீதியில் 10 ஆம் கட்டை பிரதேசத்தில் சாதின்னாகல கந்த ஊடாக உமா ஓய திட்டத்துக்கான ஆய்வுகள், அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது, இராவணன் காலத்தில் பயன்படுத்தப்பட்ட மிகவும் பழைமையான சுரங்கப் பாதை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இராவணன் ஆற்றின் ஊடாகச் செல்வதாகக் கூறப் படும் மேற்படி சுரங்கப்பாதையை இராவணன், ஹெல்ல- வெள்ளவாய பிரதேசத்தில் இருந்து பண்டாரவளை தோவ பன்சலை வரை செல்லப் பயன் படுத்தி இருக்கலாம் என்று அனுமானிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தித் திட்டப் பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள், கல் மலை ஒன்றை வெடி வைத்து அகற்றியபோது, இந்த சுரங்கப் பாதை இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. 11 அடி உயரம் மற்றும் 4 அடி அகலம் கொண்ட இந்தச் சுரங்கப் பாதையில், கீழ் நோக்கிச் செல்லப் படிகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் இருபக்கச் சுவர்கள் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புராதன இதிகாசங்களின் படி மன்னர் இராவணன், 7 ஆயிரத்து 500 வருடங்களுக்கு முன்னர், இந்தியாவுக்குச் சென்று, சீதையைக் கடத்தி வந்து, இராவணன் ஆற்றுக்கு அருகில் மறைத்து வைத்திருந்தாகக் கூறப்படுகிறது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில், இராவணன் ஆற்றில் உள்ள ஒரு சுவரில் இராவணனின் தோற்றம் கொண்ட உருவம் ஒன்றும் வரையப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. கண்டு பிடிக்கப்பட்டுள்ள புதிய சுரங்கப் பாதை அமைந்துள்ள பிரதேசத்தில் கடும் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. (வ)



ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் மரநடுகைத் திட்டத்தின் கீழ் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் மயிலணி ஆலயச் சூழலில் மரங்கள் நடப்படுகின்றன. உடுவில் பிரதேச செயலர் மு. நந்தகோபாலன் மரக்கன்றை நடுகிறார். (ம-86)


## ஏலத்துக்கு வருகிறது காந்தியின் கடிதங்கள்

மகாத்மா காந்தி கைப்பட எழுதிய 2 கடிதங்கள் அடுத்த மாதம் லண்டனில் ஏலத்துக்கு விடப்படவுள்ளன.

லண்டனில் உள்ள பிரபல ஏல நிறுவனமான சோத்பை நிறுவனத்தில் அவ்வப்போது அரிய கலைப்பொருள்கள், இலக்கியம் மற்றும் வரலாற்று ஆவணங்களும் ஏலம் விடப்படுகின்றன. மேற்படி நிறுவனம், மகாத்மா காந்தி கைப்பட எழுதிய 2 அரிய கடிதங்கள் உட்பட 200 பொருள்களை அடுத்த மாதம் ஏலம் விடவுள்ளது.

மகாத்மா காந்தி 1922 இல் அகமதாபாத்தில் உள்ள சபர்மதி சிறையில் இருந்த போது, தன் கைப்பட ரவீந்திரநாத்தாகூரின் அண்ணன் விஜேந்திரநாத்துக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில், இந்தியாவின் பலம் அதன் சமூக அமைதியில் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். இளைஞர்களைத் தயார்படுத்த பணியாற்றுமாறும் எழுதியுள்ளார். பென்சிலால் எழுதப்பட்ட இந்தக் கடிதம் 5 ஆயிரம் தொடக்கம் 7 ஆயிரம் பவுண்ஸுக்கு ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்னொரு கடிதம், அதே ஆண்டில் தனது நண்பரின் அம்மா மறைவுக்கு இரங்கல் தெரிவித்துக் காந்தி எழுதிய கடிதம். இது 3 ஆயிரம் தொடக்கம் 4 ஆயிரம் பவுண்ஸுக்கு ஏலம் போகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இது தவிர, 1950இல் முதன் முதலாக வெளியிடப்பட்ட இந்திய அரசமைப்புச் சட்டத்தின் நகல். இதில் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் கையெழுத்திட்டுள்ளார். இது 4 ஆயிரம் தொடக்கம் 5 ஆயிரம் பவுண்ஸுக்கு ஏலம் போகும் எனத் தெரிகிறது. (வ)



வலி. வடக்கு, நவ 20

விவேகானந்தரின் நூற்றி ஐம்பதாவது ஜெயந்தி தினத்தைமுன்னிட்டு நேற்று ஏழாலை மகா வித்தியாலயத்தில் இருந்து ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம் வரை விவேகானந்தரின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. மாணவர்கள் பொது மக்கள் ஆசிரியர்கள் கலந்துகொண்ட இந்த ஊர்வலத்துக்கு பொது மக்கள் வீதிகளில் மகர தோரணங்கள்கட்டி கும்பங்கள் வைத்து மரியாதை செலுத்தினர். இதனைத் தொடர்ந்து மாநாடு ஏழாலை சைவமகாஜனா வித்தியாலய மண்டபத்தில் ஓய்வு பெற்ற அதிபர் செ.சிவநடராசா தலைமையில் இடம் பெற்றது. மாணவிகளின் நடன நிகழ்வுகள் மற்றும் சொற்பொழிவுகள் என்பனவும் இடம்பெற்றன. (ம-86)

## சண்டிலிப்பாயில் மானிய உரம் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.20

சண்டிலிப்பாய் கமநல கேந்திர நிலையம் ஊடாக மானிய உரம் துரிதமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

புதிதாக நியமனம் பெற்ற பெரும்பாக அலுவலரின் முயற்சியால் முதலாம், இரண்டாம் கட்ட மானிய உர விநியோகம் நடைபெறுகின்றது என்று கூறப்பட்டது.

சண்டிலிப்பாய் கமநல கேந்திர நிலையத்துக்கு உட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கே ரிஎஸ்பி, எம்ஓபி, யூரியா ஆகிய உரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (ம-41)

## சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் புலமைப்பரிசில் மாணவர் கௌரவிப்பு



தென்மராட்சி, நவ. 20

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி கல்வி வலயத்தில் கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை தென்மராட்சிக் கலைமன்றக் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கழகத் தலைவர் லயன் ச.மனோகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட உப ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோவும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுடன் முதன் முறையாக அவர்களின் பெற்றோர், பாடசாலை அதிபர்கள், பாட ஆசிரியர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் மாணவர்களுக்கு கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கணக்குப் புத்தகங்களும் தேசிய சேமிப்பு வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி ஆகியவற்றின் பரிசு வவுச்சர்களும் வழங்கப்பட்டன. (3-9)

## கொழும்புத்துறை பகுதிக்கு நுளம்பு எண்ணெய் விசிறல்

கொழும்புத்துறையின் சில பகுதிகளில் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் முகமாக நுளம்பு எண்ணெய் விசிறும் பணிகள் கடந்தசில தினங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பகுதியில் டெங்கு மற்றும் மலேரியா நோய்த் தாக்கத்துக்கு ஆளானவர்கள் இனங்காணப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் வீடுவீடாகச் சென்று நுளம்புத் தடை மருந்து விசிறும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் நல்லூர் பிரதேச சுகாதாரப் பகுதித் தொழிலாளர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். மாநகர சபையில் இரசாயன மருந்துகளை பம்பிகள் மூலம் விசிறும் பணியாளர் பற்றாக்குறை உள்ளது. இந்த நிலையில் பணியாளர்களைப் புதிதாக இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-135)

## சங்கானை பாடசாலை புனரமைப்புக்கு நிதி

வலி.வடக்கு, நவ.20

சங்கானை கல்விக்கோட்டத்துக்கு உட்பட்ட சங்கானை ஸ்தான அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை கட்டடத்தை திருத்துவதற்காக பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சங்கானை டச்சு வீதியில் அமைந்துள்ள இந்தப் பாடசாலை பழைய கட்டடத் தொகுதியில் இயங்குவதுடன் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலையாகவும் காணப்படுகின்றது.

சுமார் இரு நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலைக் கட்டடத்தில் உள்ள திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு வசதியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா 50 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து வழங்கியுள்ளார். பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.(3-86)

## வீதிப் புனரமைப்பு வாகனம் மோதித்தள்ளியது மின்கம்பத்தை

கொழும்புத்துறை, நவ.20

கொழும்புத்துறை கடற்கரைவீதி புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்ட கனரக வாகனம் மோதியதில் துண்டி ஐயனார் கோயிலடியிலுள்ள மின்கம்பம் முறிந்து வீழ்ந்தது.

இதன்போது மின்னிணைப்பு, கேபிள்கள் அறுந்து சேதமடைந்தமையால் எழிலூர், மகேந்திரபுரம் கிராமங்களுக்கான மின்விநியோகம் கடந்த சில நாள்களாக தடைப்பட்டது.

நீண்ட காலத்துக்குப் பின் புனரமைத்துக் காப்பெற் வீதி அமைக்கும் பணிகளில் ஈடுபட்ட போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்றுமுன்தினம் முதல் தற்காலிக இணைப்பு வழங்கப்பட்டு இந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(ம-135)

## டிசெம்பர் மாத மாதாந்த உதவி

தென்மராட்சி பிரதேச பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான டிசெம்பர் மாதக் கொடுப்பனவுப் பட்டியல் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

டிசெம்பர் மாதம் கணக்குகள் முடிவுறுத்தவுள்ளதால் இந்தக் கொடுப்பனவை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

நவம்பர் மாதத்துக்குரிய கொடுப்பனவுகள் நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்மையில் ஆஸ்திரேலியா அல்பேர்ட் பார்க்கில் நடைபெற்ற சர்வதேச கனிஷ்ட மட்ட மெய்வன்மைப் போட்டியில் 16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தல் நிகழ்வில் பங்குபற்றி இரண்டாமிடத்தினைப் பெற்றுக் கொண்ட, யாழ். இந்துக் கல்லூரி மாணவன் இ.செந்தூரனுக்கு நேற்று திங்கட்கிழமை யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைச் சமூகத்தினரால் கௌரவிப்பு வழங்கப்பட்டது.இதன் போது கல்லூரி சமூகத்தினர் பொன்னாடை போர்த்து சாதனை வீரன் ஆர். செந்தூரனை பாண்ட் வாத்திய மரியாதையுடன் அழைத்து வந்தனர்.

## இன்றைய ஆட்டங்கள்

ஆளுநர் வெற்றிக் கிண்ணத்துக்கான வடமாகாண அமைச்சுகளுக்கு இடையிலான 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 11 பேர் பங்குபற்றும் கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

**பிற்பகல் 2 மணி**

உட்கட்டமைப்பு அமைச்சு அணி எதிர் விவசாய அமைச்சு அணி.

**3:30 மணி**

ஆளுநர் செயலக அணி எதிர் சுகாதார அமைச்சு அணி (ரு-23)

# மத்திய கல்லூரியின் பந்து வீச்சில் மண்டியிட்டது ஸ்கந்தவரோதய

யாழ்ப்பாணம்,நவ.20

இலங்கைப் பாடசாலை துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான பிரிவு III கிரிக்கெட் போட்டி ஒன்றில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

நேற்று திங்கட்கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லாரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. நாணயச் சுழற்சியில் வெற்றிய பெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது .

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி 32 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் லோசன் 9 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றார்.

பந்து வீச்சில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சார்பில் மகீபன் 12 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து 7 இலக்குகளையும், தா்மிலன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 15 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கினையும், தனுஷன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 6 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய ஸ்தகந்தவரோதயக் கல்லூரி அணி 22 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 35 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதில் அதிகபட்சமாக விதுஷன் 15 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றார்.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் மதுஷன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 2 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், யான்ஷன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 10 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், அண்டர்ஷன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 43 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் தேனுஜன் 14 ஓட்டங்களையும், பெல்மன் 11 ஓட்டங்களையும், சிம்ஷன் 10 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சார்பில் தனுஜன் 11 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், தனுஜன் 11 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 6 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், கஜூபன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், மகீபன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

அதன் பின்னர் 97 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் தமது இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 21 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 38 ஓட்டங்களையே பெற்றது. இதில் கஜீபன் 14 ஓட்டங்களையும், தா்மிலன் ஆட்டமிழக்காது14 ஓட்டங்களையும் .

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் மதுஷன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 6 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், அண்டர்ஷன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

இதனால் 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஸ்கந்தாவை மத்திய கல்லூரி வெற்றி கொண்டது. (ரு-23)

# தேசிய மட்ட உதைபந்து நவ.22 முதல் 25 வரை

யாழ்ப்பாணம்,நவ.20

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து நடத்தும் தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களை தெரிவு செய்வதற்கான தேசிய மட்ட உதை பந்தாட்டப் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டிக்காக வடமாகாண அணியில்இடம் பெற்றுள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி,முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீரர்கள் கொழும்புக்கு புறப்படவுள்ளனர். (ரு-23)

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி.மேற்கில் மரதன்,சைக்கிள் ஓட்டம்

யாழ்ப்பாணம், நவ.20

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு 25 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட சைக்கிள் ஓட்டப் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி என்பவற்றை வலி.மேற்கு பிரதேச சபைநடத்தவுள்ளது.

மேற்படி போட்டிகளி வலி. மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்டவர்கள் பங்குபற்ற முடியும். அவ்வாறு பங்குபற்ற விரும்புவோர் வலி. மேற்கு பிரதேச சபையின் வட்டுக்கோட்டை, சங்கானை, சுழிபுரம், அராலி ஆகிய உப அலுவலங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று , பூரணப்படுத்தி 22 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா. ஐங்கரன் கேட்டுள்ளார்.

சைக்கிள் ஓட்டப் போட்டி 24 ஆம் திகதியும்,மரதன் ஓட்டப் போட்டப் போட்டி 25 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன. (ரு-23)

# மூதூர் பிரதேச கரப்பந்தாட்டத்தில் இல்ஹெறாம்,முகத்துவாரம் வெற்றி



மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஜனாதிபதி தங்க வெற்றிக்கிண்ணத்துக்கான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் ஆண்கள் பிரிவில் இல்ஹெறாம் விளையாட்டுக் கழகமும், பெண்கள் பிரிவில் மூதூர் இலங்கை முகத்துவார விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்று சம்பியனாகின.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மூதூர் நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் முகமதியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இல்ஹெறாம் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் இல்ஹெறாம் விளையாட்டுக் கழக அணி 25:18, 25:19, 25:16 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் மூதூர் இலங்கை முகத்துவார விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மூதூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் மூதூர் இலங்கை முகத்துவார விளையாட்டுக் கழக அணி 25:10, 25:20என்றபுள்ளிஅடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. (ரு-23)

# நாளைய உதைபந்து

யாழ்ப்பாணம், நவ.20



யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கிடையே நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நாளை புதன் கிழமை பி.ப 3.45 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மேற்படி போட்டி 90 நிமிடங்களைப் கொண்டதாக நடைபெறவுள்ளது என்று போட்டிக்குழுவின் செயலாளர் செ. கனியூ தெரிவித்துள்ளார். (ரு-23)

# இளைஞர் சேவைகள் மன்ற தடகளப் போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ. 20.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 24 ஆவது தேசியமட்ட தடகளப் போட்டிகள் நாளை மறுதினம் வியாழக் கிழமை கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி எதிர்வரும் 25 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

மேற்படி போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திலிருந்து 75 க்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கொழும்பு செல்லவுள்ளனர்.

இதேவேளை பெரு விளையாட்டில் தேசியமட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் , ஆண்களுக்கான உதைபந்தாட்டம் என்பவற்றில் யாழ்.மாவட்ட அணிகளே முதலாமிடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரு-23)



[illegible] கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி அணித் தலைவரிடம் வெற்றிக்கிண்ணத்தை பிரதம விருந்தினர் கையளிக்கிறார். (ரு-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஹேரத்தின் சுழலில் அடங்கியது நியூஸி.

நியூஸிலாந்து அணியுடனான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் அதிரடியாக விளையாடி இலங்கை அணி 10 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று மூன்றாவது நாளிலேயே ஆட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து அணி 2 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் காலியில் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி களமிறங்கிய நியூஸிலாந்து அணி ஆரம்பம் முதலே இலங்கையின் சுழல் பந்து வீச்சுக்குத் தட்டுத் தடுமாறி இலக்குகளை தொடர்ச்சியாக இழந்தது. இறுதியில் 221 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது.

துடுப்பாட்டத்தில் நியூஸிலாந்து சார்பில் பிரண்டன் மக்கலம் 68, டானியல் பிளைன் 53, வன் விக் 28 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பில் ஹேரத் 5, எரங்க 3, குலசேகரா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இலங்கை அணியும் நியூஸிலாந்தின் பந்து வீச்சுக்கு திணறியது. 50 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து தடுமாறிய நிலையில் மஹேல, மத்தியூஸ் இணைப்பின் மூலம் மீண்டது. இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் மஹேல ஜெயவர்தன 91, மத்தியூஸ் 79, சமரவீர 17 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சவுத் தீ 4, ஜித்தன் பட்டேல் 3, போல்ட் 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

26 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் நேற்று முன்தினம் மாலையே இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது நியூஸிலாந்து அணி. ஆட்டநேர நிறைவில் 10 பந்துப் பரிமாற்றங்களில் 35 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கை இழந்திருந்தது. களத்தில் குப்தில் 13, வில்லியம்ஸன் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய மூன்றாவது நாள் ஆட்டம் ஆரம்பமானது. ஆட்டம் ஆரம்பித்து சிறிது நேரத்திலேயே குப்தில் மேலதிக ஓட்டங்கள் எதனையும் பெறாது குலசேகராவின் வேகத்தில் 'போல்டானார்'. வில்லியம்ஸனும் 10 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அதன் பின்னர் மீண்டும் கலக்கத் தொடங்கினார் ஹேரத். அவரது சுழலில் நியூஸிலாந்து வீரர்கள் களத்துக்கு வருவதும் பவிலியன் திரும்புவதுமாக இருந்தனர். அணித் தலைவர் ரெயிலர் 18, முதல் இன்னிங்ஸில் அரைச்சதம் அடித்த பிளைன் 20 ஓட்டங்கள் என்று அடுத்தடுத்து வெளியேறினர். மதியபோசன இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்படுகையில் நியூஸிலாந்து அணி 96 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்திருந்தது.

மதியபோசன இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பித்த முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே ஜித்தன் பட்டேல் ஓட்டமெதனையும் பெறாது வெளியேறினார். இறுதி இலக்குக்காக போல்ட் முடிந்த வரையில் ஆடிப் பார்த்தார். இறுதியில் ரந்தீவின் சுழலில் அவரும் ஆட்டமிழக்க நியூஸிலாந்தின் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

நியூஸிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 118 ஓட்டங்களைப் பெற்றது. வன் விக் ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். பந்து வீச்சில் ஹேரத் 6, குலசேகரா, ரந்தீவ் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

93 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு இலங்கை அணி துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக தரங்க பரணவிதாரன, கருணாரத்ன களமிறங்கினர். இந்த இணை நியூஸிலாந்தின் பந்து வீச்சை அடித்து நொருக்கி ஓட்டங்களை வேகமாகக் குவித்தது. அறிமுக வீரர் கருணாரத்ன 56 பந்துகளில் தனது கன்னி அரைச் சதத்தை கடந்தார்.

இலங்கை அணி 18.3 பந்துப் பரிமாற்றங்கில் இலக்கு நஷ்டமின்றி வெற்றியிலக்கை அடைந்தது. கருணாரத்ன 60, பரணவிதாரன 31 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக் கொடுத்தனர். ஆட்டநாயகனாக ஹேரத் தெரிவானார். இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் இலங்கை அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. (5)

# பாய்ந்தது இந்தியா பணிந்தது இங்கிலாந்து



இங்கிலாந்து அணி இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்த போதும், இந்திய அணியின் பந்து வீச்சுக்கு நேற்றுப் பணிந்தது. பதிலளித்து ஆடிய இந்திய அணி ஓர் இலக்கினை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் அஹமதாபாத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது.

இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 8 இலக்குகளை இழந்து 521 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது. துடுப்பாட்டத்தில் இந்திய அணிசார்பில் புஜார ஆட்டமிழக்காமல் 206, சேவாக் 117, யுவராஜ் 74 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். இங்கிலாந்து சார்பில் பந்து வீச்சில் சுவான் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

முதலாவது இன்னிங்ஸிற்கு பதிலளித்து ஆடிய இங்கிலாந்து அணி இந்திய சுழல் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 191 ஓட்டங்களுக்குள் சுருண்டது. 'பலோன்' நிலைக்குத் தள்ளப்பட்ட இங்கிலாந்து அணி அணித் தலைவர் குக்கின் போராட்டத்தின் உதவியுடன் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்த்தது. இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்றுமுன்தினம் ஆட்ட நேரநிறைவில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து 340 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் குக் 168, பிரையர் 84 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய நாளில் தடுப்பாட்டத்தை மேற்கொண்டு ஆட்டத்தை சமநிலையில் முடிக்கும் நோக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு இந்திய அணி அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது. நேற்றைய நாளில் 16 ஓட்டங்கள் மேலதிகமாகப் பெற்ற நிலையில் பிரையர் 91 ஓட்டங்களுடன் ஓஜாவின் சுழலில் வீழ்ந்தார். பிரையர் ஆட்டமிழந்து சிறிது நேரத்திலேயே மறுமுனையில் ஆரம்பம் முதல் சிறப்பாக ஆடிய அணித் தலைவர் குக் 176 ஓட்டங்களுடன் ஓஜாவின் சுழலில் 'போல்டானார்'.

அதன் பின்னர் இங்கிலாந்தின் பின்வரிசை வீரர்கள் தம்மால் முடிந்த பங்களிப்பை வழங்க இங்கிலாந்து அணி 400 ஓட்டங்களைத் தாண்டியது. சுவான் 17, பிறஸ்னன் 20 ஓட்டங்களைப் பின்வரிசையில் பெற்றுக் கொடுக்க இங்கிலாந்து அணி சகல இலக்குகளையும் இழந்து 406 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் ஓஜா 4, யாதவ் 3, சகீர்கான் 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

77 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்து ஆடத் தொடங்கியது இந்திய அணி. சேவாக் - புஜாரா ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கியது. சேவாக் தனது வழமையான அதிரடியில் ஓட்டங்களைக் குவிக்க மறுமுனையில் புஜாராவும் அதிரடியாக துடுப்பெடுத்தாடினார்.

வெற்றியிலக்கை விரட்டிய இந்திய அணி 57 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது முதலாவது இலக்கைப் பறிகொடுத்தது. சேவாக் 21 பந்துகளில் 25 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சுவானின் சுழலில் சிக்கி ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த ஹேறக்லி, புஜாரவுடன் இணைந்து துடுப்பெடுத்தாடி 15.3 பந்துப் பரிமாற்றங்களில் 80 ஓட்டங்களைப் பெற்று 9 இலக்குகளால் வெற்றியைப் பெற்றுக் கொண்டனர். புஜாரா 41, ஹேறக்லி 14 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டனர். ஆட்டநாயகனாக புஜாரா தெரிவானார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின் இன்னும் 7 ஆண்டுகள் விளையாடலாம்

சர்வதேச கிரிக்கெட்டில் 23 ஆண்டுகளை நிறைவு செய்த சச்சின் 30 ஆண்டுகள் விளையாட வேண்டும் என்று விரும்புகிறேன். இவ்வாறு இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கபில் தேவ் தெரிவித்துள்ளார். சமீபத்தில் இந்திய 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின், கிரிக்கெட் அரங்கில் காலடி வைத்து 23 ஆண்டுகளை பூர்த்தி செய்தார்.

இது குறித்து இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கபில்தேவ் கூறுகையில், சச்சின், 23 ஆண்டுகளுக்கு மேலாக விளையாடி வருவது மகிழ்ச்சி அளிக்கிறது.

இவர், சர்வதேசகிரிக்கெட்டில் 30 ஆண்டுகளைநிறைவு செய்ய விரும்புகிறேன். தற்போது சிறப்பாகவிளையாடி வரும்இவர், நல்லதிறனில்உள்ளார்.

திறமையான விளையாட்டு நட்சத்திரங்களுக்கு பாரத ரத்னா போன்ற உயரிய விருது கிடைக்கும் பட்சத்தில், நாடே பெருமை அடையும். மேலும் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டபோது, நாங்கள் எல்லாம் மிகுந்த பெருமை அடைந்தோம் எனவும் கூறியுள்ளார்.

## பணிப் பெண் தேவை

2 பேர் கொண்ட குடும்பத்தில் சமையல் உட்பட அனைத்து வேலைகளையும் வீட்டில் தங்கியிருந்து செய்யக் கூடிய 36 வயதுக்குட்பட்ட நல்ல பண்பும் பொறுமையும்முள்ள ஒரு பணிப்பெண் உடன் தேவை. சம்பந்தப்பட்ட பணிப்பெண் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 0212228125

(சி/1901)(3.5)

## மரண அறிவித்தல்

### திருமதி வளர்மதி விஜயகுமார் (மதி)



கண்டாவளையைப் பிறப்பிடமாகவும், புதுமுறிப்பு உருத்திரபுரத்தை விசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வளர்மதி விஜயகுமார் (மதி) 10.11.2012 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் விஜயகுமாரின் அன்பு மனைவியும், ஆறுமுகம்- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகளும், நாகேந்திரம் -அன்னம்மா தம்பதியரின் மருமகளும், திலீபன், திலீபா, டயானா, மஜீபன், தீபிகா ஆகியோரின் அன்புத் தாயும், நிஷாந்தனின் மாமியும், ஞானகௌரி, ஞானகௌசலா, ஞானகலா (லண்டன்), காலஞ்சென்ற ஞானச்சந்திரன், ஞானசூரி, ஞானேந்திரன் (லண்டன்), ஞானரூபன், மனோகரன், ஜெகன், சுரேஸ் (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சந்திரகுமார், புஸ்பராணி (இந்தியா), ஜெயராணி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புதுமுறிப்பு தந்தையார் இல்லத்தில் நடைபெற்று இன்று (20.11.2012) செவ்வாய்கிழமை பி.ப 3.00 மணிக்கு தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்டாவளை. (24247)(9.14)

தகவல்: குடும்பத்தினர்.

## விற்பனையாளர்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கி வரும் எமது ஸ்தாபனத்துக்கு விற்பனையாளர்கள் (பெண்கள்) தேவை.

கல்வித் தகைமை - O/L போதுமானது திறமையடிப்படையில் ஊதியம் வழங்கப்படும். நேரில் வரவும்.

அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
0212229881 (சி/1895)(3.14)

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com
0215671111

## COMPUTER SALE

HP Computer 24,750/= INTEL 3.0 GHZ, 1GB Ram, 80GB HDD, LCD Monitor, DVD Rom, 3L Key, Mouse & PAD, Speaker.

FREE

WEB Cam / Head Phone / Cover / 8GB Pen

St.Antony's.com
187,K.K.S. Road Jaffna.
0212224865 / 0750698608

(சி/1904)(3.14)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை நாகம்மா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கிளாலியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நாகம்மா நேற்று (19.11.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பையா - சின்னம்மா தம்பதியரின் அன்புமகளும், சின்னப்பு - தங்கமுத்து தம்பதியரின் மருமகளும் கணபதிப்பிள்ளையின் மனைவியும், காசிப்பிள்ளை, பரமேஸ்வரி, சுந்தரலிங்கம், தேவி, கனகலிங்கம், கனேஸ்வரி, சண்முகப்பதி, பாக்கியம், கனகரத்தினம், அரியமலர் ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2012) செவ்வாய்க் கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிளாலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோவிலடி,
அமுதுமட்டுவாள், கிளாலி. (23462)(14.8)

தகவல் : குடும்பத்தினர்.

## புதிய ஆலோசனைப் பட்டியல்

### அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, நோர்வே, இலவச விசா சட்ட ஆலோசனை

- IELTS தேவையில்லை
- சட்ட ரீதியான ஆலோசனை
- வயது 42 இற்குள்

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல 0212219016 (25616)(3.14)

## BIT Semester-5

ஆரம்பம்-சனி,ஞாயிறு 2-4.30 pm

**10 Years of Excellence**

Pro. issues in IT IAD Com.Systems II
Security Systems 100% handouts

Call : 0776577359

Mr.R.Kumaran-B.Sc. MIS Open Source College

74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்-இராமநாதன் வீதியிலிருந்து 150 m

## விசேட கருத்தரங்கு

24ஆம் திகதி நடைபெற இருக்கும் மக்கள் வங்கி போட்டிப் பரீட்சைக்கானது. நாளை புதன் (21.11) காலை 9.00 தொடக்கம் 4.00 மணிவரை.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

## CIMA- UK

Qualified Lecture Panel
Proved Pass record

F.M(67%), F.O(80%), P.O(70%), E.O(66%)

Starts on 25th November

Certificate Level 10.00am

Free TABLET PC Smart + With calling function *Condition apply

Operationsl Level 9.00am

MCS IT CAMPUS 772 395 895
Supported by UNDP/JRRP 324, Palay Road, Jaffna

சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்கள்



Kesavan Naveenan
Senthuran Suganya

## "கோடு கச்சேரி" என்று அலைய வேண்டிய தேவையில்லை

ஆம். முற்பணமோ பிற்பணமோ கொடுத்தவர் கேட்ட கணத்தில் மீளளிப்பு. ஊரறிய பல இலட்சம் மீளளித்த முன்மாதிரியான நிகழ்வு இங்கே மட்டும் தான்

### பகிரங்கத் தன்மையான நிறுவனம்

கம்பனிப்பதிவுச் சட்டத்தின் கீழ்ப் பதியப்பட்டதுடன் (Pv82703) தங்கள் உள்ளக மாற்றங்கள் பற்றியும் தமது பலம் பலவீனம் பற்றியும் தாம் சார்ந்த சமூகத்திற்கு வெளிப்படையாக சொல்லும் தனித்துவமான பாங்கு உள்ளமை.

### படிமுறையான விலாவாரியான நல்லது கெட்டது எல்லாம் சொல்லும் ஆலோசனை

விசா பற்றி மேலெந்தவாரியாக பேசி மொத்தமாக இவ்வளவு முடியும் என்று சொல்லாமல் விசா ஆலோசனையில் நடைமுறையில் உள்ள படிமுறைகள் பற்றியும் அதன் பிரதிகூலமான அம்சங்கள் பற்றியும் பக்குவமாய்ப் பகரும் முன் மாதிரி யானவர்கள்.

எனவே

### விசா ஆலோசனை என்றால் அது திசைகாட்டியிடம் இருந்து மட்டும் தான்

எங்களிடம் ஆஸ்திரேலியா 5 வருட குடும்பவிசா, மலேசியா ஹொட்டல் முகாமைத்துவ கற்கை நெறி மாதாந்த வேதனத்துடன், நியூசிலாந்து குடும்பவிசா, பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகள், சைப்பிரஸ் மாணவர்களுக்குரிய விசா Visit Visa மறுக்கப்பட்ட விசா விண்ணப்பங்கள் இன்னும்.......

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் முன்மாதிரியான
விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
021 2219016

(23165)(6.7.8)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

### Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.

வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

### Diploma In English (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

### IELTS

Toping centre for registering more IELTS candidates in Jaffna
&
Approved centre for IELTS online Registration system for Exam

< We gurantee minimum 6.0 band and above >

Duration: 2 1/2 Months

### BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

### A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

### Young Learners for English (YLE)

[வயதெல்லை : 7 - 12]

இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்புதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

புதிய வகுப்புக்கள் Batch I - 19-11-2012 Batch II - 21-11-2012 Batch III - 24-11-2012

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam, Vavuniya.
Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.